1009

1009

[...] by the Text Book Committee, Madras, for School use.

ஸ்ரீ

# சுந்தர வாசகம்

## ஏழாம் புத்தகம்

(இரண்டாம் பாரத்திற்கு உரியது)

23 AUG 1934

பாரத் பப்ளிஷிங் ஹௌஸ்
150, அண்ணுப்பிள்ளை தெரு
மதராஸ்.
1934

[விலை அணு 8.

TB
O31(7)
N34

ஸ்ரீ

# சுந்தர வாசகம்

## ஏழாம் புத்தகம்

(இரண்டாம் பாரத்திற்கு உரியது)

நூலாசிரியர்
கோ. வடிவேல் செட்டியார்

பாரத் பப்ளிஷிங் ஹௌஸ்
150, அண்ணாப்பிள்ளை தெரு
ம த ரா ஸ்
1934

காபிரைட்] [விலை அணா - 8

உ

குருவே துணை

# முன்னுரை

பாரத் பப்ளிஷிங் ஹௌஸ் தலைவருடைய விருப்பத்தின்படி ஐந்தாவது சுந்தரவாசக புத்தகத்தைப் பார்வையிட்டுக் கொடுத்தேன். அப் புத்தகம் அச்சிட்டு நிறைவேறிய பிறகு அவர் என்னை நோக்கி, “ தாங்களே இதன் தொடர்பாயுள்ள ஆறாவது ஏழாவது எட்டாவது புத்தகங்களையும் எழுதிக் கொடுக்கவேண்டும்” என்று கேட்டனர். யான் அவர் விருப்பத்திற்கிணங்கி, அவர் குறிப்பிட்ட மூன்று புத்தகங்களையும், 37 வருடங்கள் சென்னை ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூலில் தலைமைப் பண்டிதனாகவிருந்த அனுபவத்தைக் கொண்டும், ஆங்கில பாஷையில் தேர்ச்சிபெற்றுள்ள பண்டிதர்களோடு அடிக்கடி பழகிவருகின்ற அனுபவத்தைக்கொண்டும் என் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் எட்டியவரையில் சுருங்கச்சொல்லலும் விளங்கவைத்தலுமாக மாணவர்களின் தகுதி நோக்கி அவர்தம் மனதில் பதிவதற்குரிய செம்பாகமான எளிய நடையில் எழுதி முடித்துக்கொடுத்தேன்; இப் புத்தகங்களின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள செய்யுட் பகுதிகளுக்கு அரும்பதக் குறிப்புரையும் எழுதிச் சேர்த்துள்ளேன். இவ் வேழாவது சுந்தரவாசக புத்தகத்தில் 19-வசன பாடங்களும் 8-செய்யுட் பாடங்களும் அமைந்திருக்கின்றன. இப் புத்தகத்தைக் கல்வி இலாகா அதிகாரிகளும் போதகாசிரியர்களும் அன்புடன் ஏற்று அங்கீகரிப்பார்களென்று நம்பியிருக்கின்றேன். இதிற் பிழை யுளதாயின், உலகம்பொறுக்க.

சென்னை,<br>10-1-1934.

இங்ஙனம்,

**கோ. வ.**

# பொருளடக்கம்

## உரைநடைப் பகுதி


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | கடவுளை வேண்டிக் கோடல் .... .... | 1 |
| 2. | கும்பமுனி .... .... | 2 |
| 3. | காஷ்மீர தேசம் .... .... | 7 |
| 4. | விசுவாமித்திரர் வேள்வி—I .... .... | 14 |
| 5. | விசுவாமித்திரர் வேள்வி—II.... .... | 20 |
| 6. | பிறப்பு நலந்தருமோ .... .... | 27 |
| 7. | சகாராப் பாலைவனம் .... .... | 28 |
| 8. | ஆர்க்கிமெடீஸ் .... .... | 35 |
| 9. | மங்கையர்க்கரசியார் .... .... | 42 |
| 10. | கல்வி .... .... .... | 48 |
| 11. | முயற்சி திருவினையாக்கும் .... .... | 49 |
| 12. | தமயந்தி சுயம்வரம் .... .... | 54 |
| 13. | ஐக்கிய நாணய சங்கம் .... .... | 61 |
| 14. | அருமருந்து .... .... .... | 70 |
| 15. | கோலார்த் தங்கச்சுரங்கம் .... .... | 71 |
| 16. | அக்பர் .... .... .... | 78 |

| எண் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 17. | கடவுளைக் கண்டதுண்டா ?—I | .... | 84 |
| 18. | பொன் மொழிகள் .... | .... | 90 |
| 19. | கடவுளைக் கண்டதுண்டா ?—II | .... | 91 |


## செய்யுட் பகுதி


| | | | | |
|---|---|---|---|---|
| I. | துதிகவிகள் | .... | .... | 101 |
| II. | நன்னெறி | .... | .... | 102 |
| III. | இன்னா நாற்பது | .... | .... | 104 |
| IV. | இனிது நாற்பது | .... | .... | 107 |
| V. | தனிப்பாடல் | .... | .... | 110 |
| VI. | திருக்குறள் | .... | .... | 111 |
| VII. | நாலடியார் | .... | .... | 112 |
| VIII. | சதகச்செய்யுள் | .... | .... | 113 |
| | செய்யுட்பாடக் குறிப்பு | .... | .... | 118 |

# மதிப்புரை

---

பாரத் பிரசுராலயத்தார் வெளியீடுகளான "சுந்தர வாசகங்கள்" முதலைந்து பகுதிகளை முன்னமே படித்தேன். ஆறு முத லெட்டுவரை புத்தகங்களை இப்போது படித்தேன். இனிய எளிய நடையில் கற்கும் மாணவருக்குக் கசவாமல் சுவையோடு அறிவைச் சுலபமாகப் புகட்டுவதற் கேற்றனவாய் இவ்வாசக வரிசைப் புத்தகங்கள் அமைக்கப்பெற்றிருப்பது உவக்கத் தக்கது. நம்மவர் வாழ்க்கை நாகரிகமுறைகளுக்கியைபற்றனவும், நம் சிறுவ ரியலறிவுக்குத் தொடர்பில்லாதனவுமான துறைகளையும் செய்திகளையுமே பொருளாக்கி, ஆங்கிலக்கருத்து நடைமுறைகளிலே கட்டுரைகளையும் எழுதிப் புதிய புத்தகங்களைப் பெருக்கிப் பள்ளிகளில் பயிற்றுவித்து வருவதே சென்ற சிலகாலமாக வழக்கத்திலிருந்து வருகிறது. மொழியை உருவேற்றுவதை விலக்கி அறிவை அப்படியே வளர்ப்பதாகச் சொல்லிக் கொண்டு நாட்டிலே பழக்கமில்லாத தேயிலைச் செடிவளரும் தத்துவங்களையும், கங்காரு என்ற நம்மவர் கண்டறியாப் புறநாட்டுக் காட்டுமிருகத்தின் வனப்பு வழக்கங்களையும், கேட்டுமறியாத "வில்லோச்" சிறு மரத்தின் விமரிசையையும் விரித்து வாசகமெழுதிப் பள்ளிச் சிறாரைப் படிக்க பண்ணித் தமிழிலும் தமிழ் நாகரிகத்திலும் அருவருப்பும் அவமதிப்பும் உண்டுபண்ணி வருமிக்காலத்தில், நம்மவர் வாழ்க்கை வளம்படத் திருந்திப் புத்துயிர் தளிர்க்க உதவுமாறு இனிய தூய பல பழங்கதைகளையும் புதிய செய்திகளையும் அடிப்பட்ட நம் மொழுக்க வுணர்வை அலமறச் செய்யாமல் மாணவர் மனமுவக்க ஊட்டி, அவர்கள் கல்வியு மறிவுமொத்து வளர யாவரு முவக்கத் தக்க முறையில் இச் "சுந்தர வாசகங்கள்" தொகுக்கப் பட்டுள்ளன.

நம்மவர் இதிகாச காவியக் கருவூலங்களிலிருந்து தாராளமாய் நல்ல கதைகளைப் பொறுக்கி வகுப்புக்கிரமத்தில் மாணவர் அறிவாற்றலுக்குப் பொருந்துமாறு புனைந்து தொகுத்துச் சோபான முறையில் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருக்கிறது மகிழத்தக்கது.

அன்றியும் ஜாதிமத வேறுபாடுகளால் விருப்பு வெறுப்புகள் தடிக்க இடமில்லாமல் கவனத்துடன் கதைகள் பொறுக்கப்பட்டு, யாரும் எவ்வித ஆட்சேபமும் சொல்ல வொண்ணாத நல்ல முறையில் அக்கதைகளின் இயைபும் நோக்கமும் வலியுறுத்தப்படுகின்றன. பொதுநலமும் ஒற்றுமை யுணர்வும் சமுதாய சேவையும் இவைகளைக் கற்பவர் மனதில் உறைக்கும்படி செந்நெறியில் நடுநிலையில் இவ்வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. இது மட்டுமல்ல. கதைகள் தவிரப் பல கட்டுரைகளும் காணப்பெறுகின்றன. "உனக்கு இஷ்டமானதைக் கொடு" "முயற்சி திருவினையாக்கும்" "காலநியமம்" முதலிய கட்டுரைகள் மாணவர்க்கு மனத்தெளிவையும் அறிவு விசாலத்தையும் வளர்க்கத் தக்கன. "மகமதுநபி" "கோதையார்" "நம்பியாண்டார் நம்பி" முதலிய வியாசங்கள் ஆன்ற சான்றோர் ஜீவிய சஞ்சீவி கேட்போர் வாழ்க்கையை வளப்படுத்த ஒப்பற்ற ஔடதமென்ற உண்மையை உணர்ந்து புதியதொரு முறையில் எழுதப்பட்டுள்ளன. இன்னும் இவற்றுடன் இனியப் புனிதப் பாட்டுகளும் மாணவரை ஊக்கி உவப்பிக்கத்தக்கவைகளாகப் பொறுக்கிப் பல யாப்பு, சந்தம், துறைகளில் தமிழார்வத்தைச் சிறுருக்குத் தரத்தக்கனவாக இயைபு நோக்கி அமைக்கப்பட்டுள்ளன. சுருங்கச்சொல்லில், இவ்வாசகங்கள் பள்ளிகளில் சிறுவருக்கு மிகவும் உபயோகமாகத் தக்கன. தேச நேசம், தெய்வபக்தி, ஒழுக்க உணர்வுகளை ஊட்டுவதோடு, விஷய ஞானம் தமிழறிவுகளையும் தழைவிக்க மிகப் பொருத்தமான முறையிலெழுதப் பெற்றிருக்கின்றன.

இத்தகைய புத்தகங்களைக் கல்வியிலாகா அதிகாரிகளும் கலாசாலை அத்தியக்ஷரும் ஆதரித்து வாங்கி உபயோகித்துச் சிறுவருக்கு நல்ல கல்வி தருவதோடு தங்கள் கடமையையும் தாழாது செய்து முடிப்பார்களென்று கருதுகின்றேன். இவ்வாசகங்களை ஆழ்ந்து சூழ்ந்து எழுதுவித்துத் தொகுத்துதவிய "பாரத பிரசுராலயத்தாருக்" குத் தமிழச் சிறுர் கல்வி யபிவிருத்தியில் கருத்துள்ளார் எல்லோர் நன்றியும் உரிமையாகும். இவ்வாசகங்களுக்கும் இவைகளை இயற்ற முன்வந்தோர் நன்முயற்சிக்கும் பல்லாண்டு கூறுகிறேன்.

S. S. BHARATI, M.A., B.L.,
அண்ணாமலை நகர். *Professor of Tamil,*
*Annamalai University*.

# உரைநடைப் பகுதி

# சுந்தர வாசகம்

## ஏழாம் புத்தகம்

### 1. கடவுளை வேண்டிக் கோடல்

ஒருமையுட னினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்;
உள்ளொன்று வைத்துப் புறம்போன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்;
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும்; பொய்ம்மை
பேசா திருக்க வேண்டும்;
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்;மத மானபேய்
பிடியா திருக்க வேண்டும்;
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும்;உனை
மறவா திருக்க வேண்டும்;
மதிவேண்டும்; நின்கருணை நிதிவேண்டும்; நோயற்ற
வாழ்வினான் வாழ வேண்டும்;
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!

—இராமலிங்கசுவாமிகள்.

## 2. கும்பமுனி

கும்பமுனி பிரமாவின் மானத புத்திரருள் ஒருவர்; சப்தரிஷிகளிலும் ஒருவர்; தபசிகளுள் மேம்பட்டவர்; விந்தியமலையை அடக்கிய காரணத்தால் அகஸ்தியர் என்றும் கூறப்படுவாராயினர். இந்திரனது சாபத்தால் அகஸ்தியர் ஒரு கும்பத்தில் பிறந்தமையால் கும்பமுனி என்று சொல்லப்படுவாராயினர்; அன்றியும், இவருக்குக் கும்பசம்பவர் கும்பயோனி குடமுனி என்றும் பெயர் வழங்குவதுண்டு.

அக்கினிதேவன் இந்திரனது சாபத்தால் கும்பத்தில் அகஸ்திய முனிவராய்ப் பிறந்தான் என்று கூறுவாரும் உளர். ஒருகாலத்தில் கடற்கரையிலிருந்த மித்திரன் வருணன் என்னு மிருவர் அங்குவந்த ஊர்வசியைக் கண்டு இச்சைகொண்டனர். அதனால், அகஸ்தியர் கும்பத்திலும், வசிட்டர் நீரிலும் பிறந்தனர் என்னும் ஒரு கதையும் உண்டு.

கும்பமுனி வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கு வந்து பாண்டிநாட்டிலுள்ள பொதியமலையைத் தமக்கு இருப்பிடமாகக்கொண்டு தமிழ்ப்பாஷையைச் சிறப்பாக வளர்க்கக் கருதி, அகத்தியம் என்னும் ஒரு இலக்கண நூல் செய்தனர். அஃது இயல், இசை, நாடகமென்னும் மூவிதத் தமிழின் இயல்பும் அடங்கிய நூலாகும்.

இவர் பாண்டியர்கள் ஸ்தாபித்திருந்த முச்சங்கத்துள், முதற்சங்கத்திலும் இடைச்சங்கத்திலும் புலவராயிருந்து தமிழை நன்றாக அபிவிருத்தி செய்தவர். இவரது மாணாக்கர்கள் திரணதூமாக்கினி என்னும்

தோல்காப்பியர், அதங்கோட்டாசிரியர், துராலிங்கர், செம்பூட்சேய், வையாபிகர், வாய்ப்பியர், பனம்பாரனுர், கழாரம்பனுர், அவினயனுர், காக்கைபாடினியர், நற்றத்தனுர், வாமனர் என்னும் பன்னிருவராவர். இவர்களுள் பலர் அகத்தியத்தை முதல்நூலாகக்கொண்டு பல இலக்கணநூல்களை இயற்றியிருக்கின்றனர். கும்பமுனி இயற்றிய அகத்தியம் என்னும் இலக்கணநூல் வேற்றரசரது படையெடுப்பினுலும், ஓதுவார் குறைந்துபோயினமையாலும் அழிந்துபோவதாயிற்று; எனினும், அதில் சிலசூத்திரங்கள் இப்பொழுது காணப்படுகின்றன. தொல்காப்பியனுர் அகத்தியத்தை முதல்நூலாகக்கொண்டு செய்த தொல்காப்பியமே இப்பொழுது வழங்கப்பட்டுவருகின்றது. இதில் இயற்றமிழின் இயல்பே விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றது. கும்பமுனிவர் இயற்றிய அகத்தியம் என்னும் நூல் இப்போது வழங்கப்பட்டு வருமாயின், தமிழ்மக்கள் இயற்றமிழின் இயல்பை நன்ருக அறிவதோடு இசைத்தமிழின் இயல்பையும், நாடகத்தமிழின் இயல்பையும் நன்ருக அறிதற்குரியவராவர்.

கும்பமுனி, வைத்தியசிந்தாமணி, செந்தூரம் முன்னூறு, மணிநாலாயிரம், விதிநூல், மூவகைக்காண்டம், பெருந்திரட்டு, ஆயுள்வேதபாஷ்யம் முதலிய வைத்தியநூல்களையும் வேறுபல நூல்களையும் தமிழில் இயற்றினுர் என்றும் பலர் கூறுகின்றனர். அகத்தியசம்மிதை என்னும் ஒரு வைத்தியநூல் வடமொழியில் கும்பமுனிவரால் செய்யப்பட்டதென்றும் கூறப்படுகின்றது. இருக்வேதத்தில் விஷம் நீங்குவதுபற்றி ஒருகீதம் கும்பமுனிவரால் செய்யப்பட்டிருக்கிறதென்றும் சொல்லப்படுகின்றது. கும்பமுனி என்னும்

அகஸ்தியரது பெயரால் ஒரு நட்சத்திரம் விண்ணில் விளங்குவது இன்றும் பிரசித்தமாம்.

உமாதேவியாரைப் பரமசிவன் இமயமலையில் திருமணம் செய்துகொண்டகாலத்தில், அதைக்கண்டு தரிசிக்க, தேவர்களும் முனிவர்களும் மற்றவரும் பெருந்திரளாகச் சென்று கூடினர்; அதனால், பூமியின் வடமுனை தாழ்ந்தது; தென்முனை உயர்ந்தது. அதுகண்ட சிவபெருமான் பூமி சமமாயிருக்குமாறு அகஸ்தியரை நோக்கி, "அன்பனே! நீ தென்னாட்டிற்குச் சென்று பொதியமலையில் இருந்தால் பூமி சமநிலை அடைந்துவிடும்" என்று கூறினர். கும்பமுனி அக் கட்டளையை மேற்கொண்டு தென்னாட்டிற்குச் சென்று பொதியமலையில் இருப்பாராயினர்; அங்ஙனம் இருக்கும்போது தமிழ் மக்களின் உதவியால் தென்னாட்டிலுள்ள காடுகளில் பலவற்றைத் திருத்தி, அங்குத் தமிழ்மக்கள் குடியேறி வாழும்படி செய்தனர்; தமிழ்மக்கள் சிறந்த கல்வியுடையவராய் வாழ்தற்குரிய முயற்சிகளையெல்லாம் தம் மாணாக்கர்மூலமாகச் செய்தனர். சரித்திர ஆராய்ச்சியும், புராண ஆராய்ச்சியும் உடையாருள் சிலர், "வேதப்பிரசித்தமான அகஸ்தியரும், புராணப் பிரசித்தமான அகஸ்தியரும், வடநாட்டிலிருந்த அகஸ்தியரும், தென்னாட்டிலிருந்த அகஸ்தியரும் ஒருவரல்லர்; தென்னாட்டிலிருந்த அகஸ்தியர் சுரைக் குடுக்கைபோன்ற ஒரு மண்கும்பத்தைத் தமக்கு உதவியாக எப்போதும் வைத்துக்கொண்டிருந்தமையால், தமிழ்மக்களால் அவர் கும்பமுனி என்று கூறப்பட்டு வந்தனர். அவர் கும்பத்திலும் பிறக்கவில்லை, கொப்பூழிலும் (தொப்புள்) பிறக்கவில்லை"



சிதம்பரம் கீழக்கோபுரவாசலிலுள்ள திருவுருவப் படம்

என்று கூறுகின்றனர். கும்பமுனிவரைப்பற்றிப் பலா பலவாறு கூறினும், தென்னாட்டிலேயுள்ள பொதிய மலையில் கும்பமுனிவர் என்னும் ஒரு பெரியவர் இருந்தார்; அவர் தமிழ்மக்கள் கல்வியால் சிறந்து விளங்குவதற்காகத் தமக்குமுன் வழங்கப்பட்டுவந்த தமிழிலக்கண நூல்களையெல்லாம் நன்றாக ஆராய்ச்சி செய்து, அவற்றுள், கழிக்கவேண்டியவற்றைக் கழித்து, கொள்ளவேண்டியவற்றைக் கொண்டு, அகத்தியம் என்னும் ஓர் இலக்கணநூல் செய்தார் என்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லையாம். அகத்தியர் என்னும் சொல்லே வடமொழியாளரால் அகஸ்தியர் என்று சொல்லப்பட்டு வருகின்றது; அகத்தியர் என்பதன் பொருள் தமிழுலகத்தை அபிவிருத்திசெய்தற்கு அவசியமானவர் என்பதாம் என்று கூறுவாருமுளர்.

வடநாட்டில் நைமிசாரண்ய முனிவர்களோடு கும்பமுனிவர் இருந்தபோது அவர்கள் தமிழ்மொழியை இகழ்ந்துபேசினர். அம்மொழியில் பேரபிமானமுடைய கும்பமுனிவர் மனம்பொறுக்காது தென்னாடடைந்து, பொதியமலையிலிருந்து சுப்ரமண்யக் கடவுளைநோக்கித் தவஞ்செய்தார். அப்போது அவராருளால் ஒரு பக்கத்தினின்றும் ஒருவிதமணம் வீசியது. முனிவர் அந்தமணம் உண்டாகு மிடத்தை நோக்கிச் சென்று பார்த்தபோது, அங்கு ஒரு புத்தகம் மணமுடையதாய் இருத்தலைக் கண்டார்; அதனை "இது தமிழோ" என எடுத்தார்; அதனைப் படித்தே **அகத்தியம்** என்னும் நூலைச் செய்தார். அதுமுதற்கொண்டே தென்னாட்டில் வழங்கப்பட்டுவந்த மொழி தமிழ்மொழி என்னும் பெயருடைய தாயிற்று என்று கூறுவாருமுளர்.

கும்பமுனிவர் அகத்தியம் என்னும் இலக்கண நூலைச் செய்யும்போது தமக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் சிவபெருமானிடத்தும் சுப்ரமண்யக்கடவுளிடத்தும் கூறி நீக்கிக்கொண்டார். அதனால், கும்பமுனிவருக்கு முதல்தமிழாசிரியர் சிவபெருமானவர்; இரண்டாவதுதமிழாசிரியர் சுப்ரமண்யக்கடவுளாவர் என்னும் ஒரு சரித்திரமும் பிரசித்தமாக வழங்கப்பட்டுவருகின்றது.

அகஸ்தியர் இமயமலையிலிருந்து பொதியமலைக்கு வரும்போது, மேருமலையோடு பகைத்து ஓங்கி வளர்ந்துநின்ற விந்தமலையைப் பாதாளலோகம் வரைக்கும் அமிழும்படி அடக்கி, "விந்தமலையே! நீ யான் திரும்பிவரும் வரைக்கும் இப்படியே அடங்கியிரு" என்று கூறினர். அப்படியே விந்தமலை இன்றும் அடங்கியிருக்கின்றது. இது,

"..............................விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து"

என்று நன்னெறி கூறுவதாலும் அறியப்படுவதாம்.

தேவர்களை வருத்திய விருத்திராசுரன் இந்திரனது வஜ்ஜிராயுதத்திற்குப் பயந்து கடலில் மூழ்கி ஒளித்துக்கொண்டான். கும்பமுனிவர் இந்திரனது வேண்டுகோளுக்கு இரங்கி, கடல்நீரைத் தமது தபோபலத்தால் உண்டருளினர். அதனால், இந்திரன் விருத்திராசுரனை எளிதாகக் கொன்றுவிட்டான். பிறகு கும்பமுனிவர் இந்திரனது வேண்டுகோளுக்கிணங்கி அக்கடல்நீரை மீண்டும் வெளியேவிட்டனர். இதுவும்,

"முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
டனிக்கடலு முண்ணப் படும்"

என்று நன்னெறி கூறுவதால், நன்கு விளங்குவதாம்.

சந்திரவம்சத்தில் பிறந்த நகுஷன் என்னும் அரசன் தனது புண்ணியப்பயனுல் இந்திரனுனகாலத்தில் தன்னைச் சிவிகையில் தாங்கிச்சென்ற சப்த முனிவர்களின் தகுதியை நோக்காது இந்திரபோக விருப்பத்தால், அவர்களைச் சர்ப, சர்ப, (விரைக, விரைக) எனத் தூண்டினன். அப்போது அவர்களுள் ஒருவராகிய கும்பமுனிவர் அவனைச் சினந்து சர்ப்பமாகும்படி சாபமிட்டனர். அதனுல், அவன் சர்ப்பமாகப் பூமியில் விழுந்துவிட்டான். இவ்வாறு கும்பமுனிவரைப் பற்றிய புராணசரித்திரங்கள் இன்னும் பலவுண்டு. கும்பமுனிவர் இரண்டு முழம் உயரமுடையவரா யிருந்தமையால், குறுமுனி என்றும் சொல்லப்படுகின்றனர்.

---

## 3. காஷ்மீர தேசம்

புராதனமாய் நாகரிகம் பெற்றுச் சிறந்தோங்கிய தேசங்களில் காஷ்மீரமும் ஒன்றுகும். இது இந்தியாவின் வடமேற்குக் கோடியிலுள்ளது. அதனுல், மற்றெல்லா எல்லைநாடுகளையும் போன்று காஷ்மீரமும் வெளிநாட்டார்களால் தாக்கப்பட்டுச் சீர்குலையலாயிற்று. இத்தேசம் பூர்வத்தில் ஒரு பெரிய ஏரியாயிருந்ததென்றும், அதில் வசித்து வந்த யால்தேவ் (Yeldeo) என்னும் அரக்கன் காஷ்மீர் என்னும் முனிவரால் அவ்விடத்தினின்றும் துரத்தப்பட்டமையின், ஏரி நீர் வற்றித் திடலாயிற்றென்றும், அதன்பின் அத்திடல் அம்முனிவர் பெயரால் விளங்கி வரலாயிற்றென்றும் ஒரு பழங்கதையுண்டு. இதுபற்றியே காஷ்மீரம் ஒரு பெரும் போகணி அல்லது போனகச்சட்டி போல நடுவில் குழிந்து சுற்றிலும் மேடாக விருக்கின்றதாம்.

சரித்திரப்படி காஷ்மீர தேசத்தின் முதற்குடிகள நாகர் என்னும் ஒருவகை முரட்டு ஜாதியாரென்றும், பிறகு அவ்விடத்தில் பௌத்தமதஸ்தர்கள் குடியேறி அங்கிருந்தே நாலாப்பக்கங்களிலும் பரவினார்களென்றும், அவர்களுக்குப்பிறகு அத்தேசம் இந்து அரசர்களது வசமாய்ப் பேரும் புகழும் பெற்று விளங்கியதென்றும் தெரியவருகின்றன. இவ்வாறு இந்துக்களால் ஆளப்பட்டுவந்த தேசம்,பதினொன்றாவது நூற்றாண்டில் படையெடுத்து வந்த முகம்மதுகஜினியாலும், பிறகு திபெத் தேசத்தரசர்களாலும், துருக்கியர்களாலும் சீர்குலையலாயிற்று. கடைசியாகப் பதினான்காவது நூற்றாண்டில் ஷம்ஷுடீன் என்னும் முகம்மதிய மன்னன் காஷ்மீர தேசத்தைக் கைப்பற்றிக் கொண்டான்; அதனால், அங்கு முகம்மதியர்கள் குடியேறலாயினர். பிறகு அத்தேசம் 1586-ம் வருஷம் அக்பர் சக்கரவர்த்தியின் ஆளுகைக்குட்பட்டது; அதன்பின் 1752-ம் வருஷத்தில் துரானி வம்சத்தைச் சேர்ந்த ஆமத்ஷா என்பவனது ஆட்சிக்குட்பட்டது; 1819-ம் வருஷத்தில் சீக்கியர்கள் கைவசமாயிற்று. அதனால்,மஹாராஜா ரஞ்சிட்சிங் என்பவரிடம் குதிரைவீரனாக இருந்த குலாப்சிங் என்பவன், பாஞ்சால தேசத்தரசனது பிரதிநிதியாக விருந்து, காஷ்மீரத்தை ஆண்டுவந்தான். இவன் சிறிது சிறிதாகத் தனது செல்வாக்கை விருத்திசெய்துகொண்டு, கடைசியாக நடந்த சீக்கியர் யுத்தத்திற்குப் பிறகு, 1846-ம் வருஷத்தில் ஆங்கில அரசாங்கத்தாருடன் நேராக ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். இதன்படி இவன் ஆங்கிலேயருக்கு எழுபத்தைந்துலட்ச ரூபாய் கொடுத்தான்; அதனால், அவர்களால் காஷ்மீரதேசத்திற்கு மன்னனாக உறுதிப்படுத்

தப்பட்டான். இவன் காஷ்மீரை 1857-ம் வருஷம் வரை ஆண்டான்; இப்பொழுதும் இவனுடைய வம்சத்தாரே அதனை ஆண்டுவருகின்றனர்.

இப்போதும் காஷ்மீரதேசத்து மன்னர் வருஷந்தோறும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு ஒரு குதிரையும், இருபத்தைந்து பவுன் எடையுள்ள உயர்ந்த ஆட்டு ரோமமும், மூன்று ஜதை உயர்ந்த சால்வைகளும் கப்பமாகச் செலுத்திவருகின்றனர். பிரிட்டிஷ் அரசாங்கத்தாரது ஆதீனத்தின் கீழ் வந்ததுமுதல் காஷ்மீர தேசம் மீண்டும் செல்வத்திலும் சிறப்பிலும் ஓங்கிவருகின்றது.

காஷ்மீரதேசம் நடுவில் குழிந்தும் நாலாப்பக்கங்களிலும் மலைகளால் சூழப்பட்டுமிருக்கின்றது. அவற்றின் மத்தியிலுள்ள பூமி வண்டல் படிந்த பெரும்பரப்பாகும். அப்பாகத்தில் ஜீலம் நதியும் அதன் உபநதிகளும் பாய்கின்றன. அது கடல் மட்டத்திற்குச் சுமார் 5200 அடி உயரத்திலிருக்கிறது. அப்பிரதேசத்தின் வடக்கே போகப் போக மலைகள், உயர்ந்து கொண்டேபோய் உன்னதமான சிகரங்களையுடையனவாயிருக்கின்றன. அச் சிகரங்கள் சுமார் 20000 அடியிலிருந்து 25000 அடி உயரமுள்ளனவா யிருக்கின்றன. அங்கே ஆச்சரியமாகப் பார்க்கக்கூடிய சில பெரும் பனிப் பாறைகளும் உயர்ந்த குன்றுகளுமிருக்கின்றன. மனித வாழ்க்கை அங்கே அசாத்தியமானதாகும். அப்பிரதேசத்தின் தெற்கிலோ போகப்போக உள்ள இடம், சிறிது சிறிதாகத் தாழ்ந்தும் குடிவளத்திற்கு ஏற்றதாயுமிருக்கிறது.

முக்கியமாகக் கிஷன்கங்கா (கிருஷ்ண) நதிப்படுகையின் தெற்குப் பாகமும், சிந்து நதிக்கும் ஜீலம்

சீனப் நதிகளுக்கும் இடையிலிருக்கும் மலைப்பாகத்திற்குத் தெற்கிலுள்ள பூமியும், குடிவளப்பெருக்கும் இயற்கைக் காட்சி வனப்பும் வாய்ந்திருக்கின்றன. இவ்விடங்களில் தேவதாரு விருட்சங்கள் அடர்ந்த மலைச்சரிவுகளும், இடையிடையே பசும்புற்பூமிகளும், நீர்க்கால்களின் பக்கங்களில் பச்சைப்பசேல் என இருக்கும் பயிர்ப்பூமிகளும் பார்ப்போர் மனத்தைக் கவரத்தக்கனவாயிருக்கின்றன. எப்படி ஐரோப்பாக் கண்டத்திற்கு ஸ்விட்ஸர்லாண்டு சிறந்து விளங்குகின்றதோ அப்படியே இந்தியாவிற்குக் காஷ்மீரம் சிறந்து விளங்குகின்றது. அதனால், ஆயிரக்கணக்கான தேசாந்திரிகள் ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் காஷ்மீர் தேசத்தின் தலைநகராகிய ஸ்ரீநகருக்கு வந்துகொண்டிருக்கின்றனர்.

காஷ்மீரதேசத்தின் சீதோஷ்ணஸ்திதி ஒருமாதிரியானதன்று; மலைகளின்மேல் மிகக் கடுமையாயும், கீழ் வெளிகளில் மிக மிதமாயுமிருக்கின்றது. இங்கிலாந்தைப் போலவே இங்கும் நான்கு பருவங்களும் உரிய காலங்களில் ஆரம்பமாகின்றன. பள்ளத்தாக்காயுள்ள விடங்களின் மேல்பாகங்களில் மே மாதம்முதல் அக்டோபர் மாதம் வரையில் சீதோஷ்ணஸ்திதி மிக நேர்த்தியாயும் ஐரோப்பியர்களுக் கேற்றதாயு மிருக்கின்றது. இங்கே டிசம்பர், ஜனவரி மாதங்களே கடுங்குளிருள்ளவையாம். இக்குளிர்காலத்தில் காலையில் ஏரிகளின் தண்ணீர் வெகுதூரத்திற்கு மேல்பாகம் உறைந்திருக்கும். ஏழு அல்லது எட்டு வருஷங்களுக்கு ஒருமுறை ஸ்ரீநகருக்கு வடபாகத்திலுள்ள ஜீலம் நதி உறைந்துவிடுவது வழக்கமாயிருக்கின்றது.



ஜாமு நகரத்தினருகிலுள்ள படுகையும் நஞ்சை நிலங்களும்.




ஜீலம் நதிக்கரையின் மீதுள்ள ஸ்ரீநகரின் ஒருபாகம்.

இத் தேசத்தில் வருஷத்திற்குப் பதினெட்டு அல்லது இருபது அங்குலத்திற்குமேல் மழை பெய்வதில்லை; சாகுபடிகாலத்தில் ஐந்து அல்லது ஆறு அங்குலங்களுக்குமேல் மழை பெய்யாமையால், நவம்பர் மாதம் முதல் மார்ச்சுமாதம் வரையில் பனிநீரே முக்கியமாக நெற்பயிர்ச் சாகுபடிக்குக் காரணமாயிருக்கின்றது; மார்ச்சு ஏப்ரல் மாதங்களில் மழை விசேஷமாகப் பெய்கின்றபடியால், இக்காலங்களில் கோதுமை அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. இத் தேசத்தில் பலவிதமான பழவர்க்கங்கள் அதிகமாக உற்பத்தியாகின்றன. அவை ஆப்பிள் (apple), பியர்(pear), குவின்ஸ் (quince), பீச் (peach), ஆப்ரிகாட் (apricot), ப்ளம் (plum), ஆமன்ட் (Almond), மாதுளை, அக்ரோட்டு (Walnut), சர்க்கரைக் கொம்மட்டிக்காய் (Melon), ஸ்டிராபெரி (Strawberry), ராஸ்பெரி (Raspberry), குறன்ட் (Currant) முதலானவையாகும். இப்போது அங்குச் சிலகாலமாகத் திராட்சை அதிகமாக உற்பத்தியாக்கப்படுகின்றது; அதிலிருந்து ஒயின், பிராந்தி முதலிய மதுசாரங்கள் செய்யப்படுகின்றன. இங்கே, ஐரோப்பாவிலுள்ள உருளைக்கிழங்கு (Potato), காலிபிளவர் (Cauliflower), காரெட் (Carrot) முதலிய பதினைந்துவகைக் காய்கறித் தினுசுகள் அதிகமாக விளைகின்றன; ஆனால், கிச்சிலி எலுமிச்சை போன்ற மரங்களின் பழங்கள் இப்பிரதேசத்திலுள்ள அதிகமான குளிர்ச்சியினால் முதிர்ச்சியடையாமல் கருகி விழுந்துவிடுகின்றன.

காஷ்மீரத்தில் பார்ப்பதற்கு வெகு விநோதமாய்த் தெப்பம்போல் நீரில் மிதக்கும் தோட்டங்கள் விசேஷமாகவிருக்கின்றன. இவை அநேகமாய் ஊர்களையடுத்த

ஏரிகளில் காணப்படும். இத் தெப்பத் தோட்டத்தில் வெள்ளரி கக்கரிச்செடிகளும் (Cucumber), சர்க்கரைக் கொம்மட்டிக்காயும் ஏராளமாக விளைகின்றன. இங்குள்ள உலார் (Wular) என்னும் ஏரியில் சிங்காரா (Singhara) என்னும் ஒருவித அக்ரோட் பழம் வருஷந்தோறும் அறுபதினுயிரம் டன் எடையுள்ள அளவாக விளைகின்றதாம். இப்பழம் வருஷத்தில் 30,000 ஜனங்களுக்குச் சுமார் 5 மாதங்களுக்குக் குறையாமல் முக்கிய ஆகாரமாக உபயோகப்படுகின்றதாம். இவ்விதமாக இயற்கைச் சௌகரியங்கள் மிகுதியாக அமைந்திருக்குமித்தேசத்தில் 1878-80 வருஷங்களில் சரியான காலத்தில் மழை பெய்யாமையாலும், தேவையில்லாதகாலத்தில் அதிகமாக மழை பெய்தமையாலும், அதிக உஷ்ணத்தாலும், விஷப் பனியாலும் பயிர்களும் பழவகைகளும் பாழாய்ப் போய்விட்டன; அதனுலுண்டான கொடிய பஞ்சத்தினல் இறந்தவர் அநேகர். இது தவிர, இத்தேசத்தில் பூகம்பம் அடிக்கடி யுண்டாகின்றது. 1885-ம் வருஷம் ஜூன், ஜூலை மாதங்களிலுண்டான பூகம்பங்களால் நேர்ந்த பொருள்நஷ்டமும் உயிர் நஷ்டமும் ஏராளமானவையாம்.

காஷ்மீரதேசத்தின் பரப்பு எண்பத்தைந்து லட்சம் சதுரமைல் உள்ளதாயிருக்கின்றது; அங்ஙனமிருந்தும், அதன் ஜனத்தொகை முப்பத்திரண்டு லட்சத்திற்கு மேலில்லை. அஃதாவது சதுரமைல் ஒன்றற்கு நாற்பது ஜனங்களே சராசரியாக இருக்கின்றனர். இதற்கு இத்தேசத்தின் இயற்கையமைப்பே முக்கிய காரணமாகும். இங்குள்ள முக்கிய நகரங்கள் ஸ்ரீநகர், ஜாமு, இஸ்லாமபாத், லே (Leh) முதலியவைகளாம். ஸ்ரீநகரிலும், லே என்னுமிடத்திலும் ஆங்கிலே

யாது பிரதிநிதிகள் இருக்கின்றனர். மலேரியா என்னும் விஷஜுரம் தோன்றும் ஜூலை ஆகஸ்டு மாதங்களில் ஐரோப்பியர்களும், இந்தியகனவான்களும் சொனமார்க் (Sonamarg or golden meadow) என்னுமிடத்தில் போய் வசிக்கின்றார்கள். இவற்றுள், ஸ்ரீநகர் இராஜதானிநகரமாம். அதனால், இவ்விடத்தில் ஜனத்தொகை யதிகம் (150,000); கைத்தொழில்களும் இங்கேயே அதிகம். ஆட்டுமயிரால் காஷ்மீரதேசத்தார் செய்யும் விலையுயர்ந்த கம்பளங்களும், போர்வைகளும் உலகப் பிரசித்தமானவை. இவர்கள் சித்திரத்தையல் வேலையிலும் ஜரிகை வேலையிலும் நிகரற்றவர்கள். இவர்களால் தங்கத்தாலும் வெள்ளியாலும் அபூர்வமான வேலைப்பாடுள்ள சாமான்கள் செய்யப்படுகின்றன. இத் தொழிலாளிகள் மட்டமான ஆயுதங்களை வைத்துக்கொண்டு அற்புதமான வேலைகளைச் செய்யக் கூடிய சாமர்த்தியம் வாய்ந்தவர்கள்.

இங்கே ஜனங்கள் பொதுவாக உயரமாயும் நல்ல தேகக்கட்டு உள்ளவர்களாயு மிருக்கின்றனர்; ரூபலாவண்யமும் வாய்ந்தவர்கள். விசேஷமாய் இங்குள்ள முகம்மதியர்கள் பட்டானியர்களைப் (Pathans) போல அழகிய மூக்கையும் விழிகளையும் உடையவர்கள். இத்தேசத்தில் முகம்மதியர்கள் அதிகமாயிருக்கின்றனர். சிலசமயங்களில் இவர்களுக்கும் இந்துக்களுக்கும் மத சம்பந்தமான வித்தியாசங்கள் ஏற்படும்போது கஷ்டங்கள் விளைகின்றன. இப்போதுள்ள காஷ்மீர தேசத்து இந்து மன்னர் மிக்க சாமர்த்தியமாகக் குடிகளுக்குள் சமரசம் ஏற்படுத்த முயன்றுவருகின்றனர். அதனால், அவர்கள் இனி நாளடைவில் ஒத்துவாழ்ந்து சுகப்படுதல் கூடும் என்று நம்புவதற்கு நியாயம் இருக்கின்றது.

# 4. விசுவாமித்திரர் வேள்வி—I

## அங்கம் 1. காட்சி I.

இடம் :—தசரதனது கொலுமண்டபம்.

காலம்:—பகல் மணி 12.

பாத்திரம் :—தசரதன், சுமந்திரன், வசிஷ்டர், விசுவாமித்திரர், வாயிற்காவலர்.

**தசரதன் :**—மந்திரி சுமந்திரரே! எனது அருமைப் புதல்வனாகிய இராமன் முனிவர்போல் மௌனமாய் இருக்கின்றானே! அவன் அவ்வாறு இருப்பதற்குக் காரணமென்ன?

**சுமந்திரன் :**—அரசே! இராமபிரான் தனது தம்பியரோடு தீர்த்தயாத்திரைசெய்து வந்தபிறகு, மௌனமாயிருப்பதற்குக் காரணம் யாத்திரையால் நேர்ந்த களைப்பாயிருக்கலாமென்று நினைக்கிறேன். அவனுக்கோ வயது ஏறக்குறையப் பதினாறாய்விட்டது. இப்பருவத்தில் அவனுக்கு விவாகம்செய்துவிட்டால், அவன் மௌனம் பஞ்சாய்ப் பறந்துபோம். மனைவியையுடையவனுக்கு மௌனம் ஏது?

**தசரதன் :**—நீர் சொல்லுவது நியாயந்தான். சீக்கிரமாக அவனுக்கு விவாகம் செய்துவிடவேண்டும்; அது பற்றி முயற்சிசெய்யுங்கள்.

**சுமந்திரன் :**—அப்படியே செய்கிறேன்.

**வாயிற்காவலர் :**— (வாயிலிலிருந்து உள்ளே வந்து) அரசே! தங்களது குலகுருவாகிய வசிஷ்டர் வருகிறார்.

**தசரதன் :**—சுவாமிகள் வந்துவிட்டாரா! நீங்கள் முன்னே ஓடி எதிர்கொண் டழையுங்கள்; நானும் இதோ பின்னே வருகிறேன்.

**தசரதன் :**—(சிங்காசனத்தினின்றும் எழுந்து சென்று வசிஷ்டரை எதிர்கொண்டழைத்து, உள்ளே வந்து) நமஸ்காரம்; சுவாமிகள் இவ்வாசனத்தில் எழுந்தருளவேண்டும்.

**வசிஷ்டர் :**—தசரத! க்ஷேமமா? குமாரன் (இராமன்) க்ஷேமமா? மற்றப் பிள்ளைகளும் ஏனையர்களும் க்ஷேமமா?

**தசரதன் :**-தங்களது கருணையால் எல்லாரும் க்ஷேமமே.

**வாயிற்காவலர் :**—(விரைந்து கொலுமண்டபத்திற்குள் வந்து) அரசர்க்கரசே! மகரிஷி விசுவாமித்திரர் வந்திருக்கிறார்.

**தசரதன் :**— அப்படியா! நான் வருகிறேனென்று முன்னேஓடிச் சொல்லுங்கள்; இதோ வந்துவிட்டேன்.

(தசரதன் அங்ஙனம் சொல்லுவதற்குள் விசுவாமித்திரர் கொலுமண்டபத்திற்குள் வந்துவிட்டார்.)

**தசரதன் :**—(உடனே சுமந்திரன் முதலானவர்களோடு அவரை வணங்கி ஆசனத்தில் இருக்கச் செய்து) சுவாமிகளே! தாங்கள் இவ்விடத்திற்கு எழுந்தருளியது யானும் எனது பெரியோர்களும் செய்த தவத்தின் பயனேயாகும். தேவரீர், நாயினும் கடைப்பட்ட அடியேனை ஒருபொருளாகக் கருதி இங்கு வந்ததற்குக் காரணம் என்ன? அதனைக் கூறவேண்டும்.

**விசுவாமித்திரர் :**—தசரத! முனிவர்களும், தேவர்களும் தமக்கொருதுன்பம் வந்தகாலத்து அதனை நீக்கிக்கொள்ள எங்கே போகின்றனர்? சிவன் வாழும் கைலாயமலைக்குப் போகின்றனர்; அல்லது திருமால்வாழும் திருப்பாற்கடலுக்குப் போகின்றனர்; அல்லது பிரமன்வாழும் சத்தியலோகத்திற்குப் போகின்றனர்; அல்லது இந்திரன் வாழும் சுவர்க்கலோகத்திற்குப் போகின்றனர்; அல்லது நீ வாழும் அயோத்திக்கு வருகின்றனர். இவையன்றி அவர்களுக்கு வேறு புகலிடம் உண்டோ? இந்திரனும் சம்பராசுரனால் தனக்குத் துன்பம் வந்தகாலத்தில் அதனை நீக்கிக்கொள்ள உன்னையே யன்றோ அடைக்கலமாக அடைந்தான்! சம்பராசுரனைக்கொன்று சுவர்க்கலோகத்தை இந்திரனுக்குக் கொடுத்தவன் நீயன்றி வேறு யார்? அவன் உன்னுதவியாலன்றோ சுவர்க்கலோகத்தை ஆண்டுவருகின்றான்.

**தசரதன் :**—பிரமதேவரைப்போல் உலகத்தை ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்ல தேவரீர் அடியேனை இப்படிப் புகழ்ந்து பேசலாமா? நான் கோசலதேசத்தை ஆளும் அரசாட்சியின் பயனை இன்றே பெற்றேன். அடியேன் செய்யத்தக்க காரியம் யாது? அதனைத் தேவரீர் கூறவேண்டும். நான் அதனைத் தவறாமற்செய்யச் சித்தமாயிருக்கின்றேன்.

**விசுவாமித்திரர் :**—தசரத! நீ அரிச்சந்திரன் மரபில் தோன்றியவனல்லவா? அதனால், நீ சொன்ன சொல் தவறமாட்டாய். நான் வந்த காரியத்தைச் சொல்லட்டுமா?

**தசரதன் :**—சொல்லுங்கள்.

**விசுவாமித்திரர் :**—நான் இப்போது வசிக்கும் வனத்தில் ஒருயாகம்செய்ய உத்தேசித்திருக்கின்றேன். அந்த யாகம் முடியாதபடி அரக்கர்கள் தடைசெய்வர் என்பது எனக்கு நிச்சயமாகத்தெரியும். யான் செய்யும் யாகத்தை அவர்கள்வந்து தடைசெய்யாதபடி காப்பதற்கு ஒருவன்வேண்டும். அதனைக் காத்தற்குரியவன் உன் பிள்ளைகளுள் மூத்தவனாகிய இராமனேயாவான். நீ சொன்னசொல் தவறாதபடி அவனை என்னுடன் அனுப்பக்கடவாய்.

**தசரதன்:**—“ஆ தெய்வமே! அரக்கரை வெல்லப் பதினாறுவயதும் நிரம்பப்பெறாத இராமனையா நான் இம் முனிவருடன் அனுப்பவேண்டும்! இவர் கூறியது என்செவியில் புண்ணில் வேல்நுழைந்தது போல் நுழைந்திருக்கின்றதே! என்ன செய்வேன்!” எனத் தனக்குள் நினைத்து முனிவரை நோக்கி, இராமன் சிறுவன்; அன்றியும், ஆயுதப் பயிற்சியில் அனுபவமில்லாதவன். அவன் தங்களோடு வந்தால் என்ன செய்யக்கூடும்? நான் தங்களுக்குத் துணையாக வருகிறேன். தாங்கள் செய்யும் யாகத்தைப் பூர்த்தி செய்விக்கின்றேன். அந்த யாகத்திற்குத் தடைசெய்ய, திரிமூர்த்திகள் வந்தாலும் நான் அவர்களுக்கு அஞ்சமாட்டேன். எழுந்திருங்கள்; நாம் வனத்திற்குப் போகலாம்.

**விசுவாமித்திரர் :**—அடே துஷ்டா! சொன்னசொல் தவறின மூடா! நீயும் ஒரு அரசனா? இராமனை நீ என்னோடு அனுப்பமாட்டாயா? அனுப்பாவிட்டால், உன் கதி என்ன ஆகும் தெரியுமா? அதனை நினைத்துப்பார்!

**வசிஷ்டர்** :—விசுவாமித்திர முனிவரே! கோபம் சண்டாள மல்லவா? தசரதன் புத்திரவாஞ்சையால் ஒன்றும் தோன்றாது தலைகுனிந்திருப்பதைப் பாருங்கள்! விசுவாமித்திரன் என்னும் சொல்லுக்குப் பொருள் உலகநண்பன் என்பதல்லவா? தசரதன் தங்களோடு தன்மகன் இராமனை அனுப்புவான்; பொறுமையாயிருங்கள்! பொறுமையாயிருங்கள்!!

**தசரதன்** :—(வசிஷ்டரை நோக்கி) சுவாமிகளே! உம்மைத்தவிர எனக்கு வேறுகதியில்லை. எப்படியாவது தாங்கள் இராமனைக் காப்பாற்றவேண்டும்.

**வசிஷ்டர்**:—(தசரதனை ஏற இறங்கப் பார்த்து) தசரத! நீ விசுவாமித்திரரை யாரென்று நினைத்திருக்கின்றாய்? அவர் நினைத்தால் ஆகாத காரியம் யாது? இராமனை அவர் அழைப்பதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டும். அவன் இங்கே திரும்பிவரும்போது அது உனக்குத் தெரியும். இராமனுக்கு நல்லகாலம் வந்துவிட்டது. உடனே நீ அவனை முனிவரோடு அனுப்பிவிடு; குறுக்காக ஒன்றும் பேசாதே.

**தசரதன்** :—நான் தாங்கள் சொன்னபடி நடக்கச் சித்தமாயிருக்கிறேன். சுமந்திரரே! நீர் போய் இராமனை அழைத்துக்கொண்டு வாரும்.

**சுமந்திரன்** :—உத்தரவின்படியே இராமனை அழைத்து வருகிறேன்.

(எல்லோரும் போகிறார்கள்.)

## அங்கம் 1. காட்சி II.

**இடம்:**—*தசரதனது கொலுமண்டபம்.*

**காலம்:**—*பகல் மணி 2.*

**பாத்திரம்:**—*தசரதன், இராமன், இலட்சுமணன், விசுவாமித்திரர், வசிஷ்டர்.*

**இராமன்** :-(*முனிவர்களையும், தசரதனையும், இலட்சுமணனோடு வணங்கித் தசரதனை நோக்கி*) *நமஸ்காரம்! நமஸ்காரம்! தேவரீர் அடியேனை அழைத்ததற்குக் காரணம் யாது?*

**தசரதன்** :—*இராமா! இவர்தாம் விசுவாமித்திரமுனிவர். இவருடைய மகிமை உனக்கு முன்னமேதெரிந்திருக்குமென்று நினைக்கின்றேன். இவர்சொற்படி நீ நடக்கவேண்டும். இவருடன் உன்தம்பி இலட்சுமணனை அழைத்துக்கொண்டு போ.*

**இராமன்** :—*உத்தரவின்படி நடக்கச் சித்தமாயிருக்கின்றேன்.*

**தசரதன்** :—*முனிசிரேஷ்டரே! இச்சிறுவர்களைக் காப்பது உமது கடமை. இவர்களை உம்மிடத்து ஒப்பித்துவிட்டேன். இவர்களுக்குத் தாயும் தந்தையும் தாங்களேயாவீர்.*

**விசுவாமித்திரர்** :—(*தசரதனை நோக்கி*) *அரசர்க்கரசனே! உனக்கு நல்லகாலம் வந்துவிட்டது! ஒன்றுக்கும் அஞ்சாதே.*

(*இராம இலட்சுமணர், விசுவாமித்திரர் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே யுத்தகோலம் பூண்டு அவரருகே வந்து நின்றனர்.*)

**விசுவாமித்திரர்** :—(*அவர்களை நோக்கி*) *குழந்தைகாள்! என்னோடு வாருங்கள்.*

**இராமலட்சுமணர் :**—அப்படியே வருகிறோம். (தம்பி இலட்சுமணன் பின்னேவர விசுவாமித்திரரோடு செல்லும் இராமன் அவரை நோக்கி) சுவாமி! இந்தச் சரயுநதிக்கரையில் தோன்றும் சோலை, மிகப் புனிதமாய்க் காணப்படுகின்றது. இரவாகிவிட்டபடியினால், இங்கே தங்கியிருக்கலாமென்று நினைக்கிறேன்.

**விசுவாமித்திரர் :**—அப்படியே இன்றிரவு இங்கே தங்கி நாளைக்காலையில் நாம் யாகம்செய்யும் இடத்திற்குப் போவோம். (எல்லோரும் போகிறார்கள்.)

---

## 5. விசுவாமித்திரர் வேள்வி—II

### அங்கம் 2. காட்சி I.

**இடம் :**—பாலைவனம்.

**காலம் :**—பகல் மணி 12.

**பாத்திரம் :**—இராமன், இலட்சுமணன், தாடகை, விசுவாமித்திரர்.

**இராமன் :**—அடிகளே! நேற்றிரவு நாம் வசித்திருந்த காமனாச்சிரமத்திலிருக்கும் முனிவர்யாவரும் நமக்குச்செய்த உபசாரம் எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. அவர்களோடு அடிக்கடிப்பழக நான் மிகவிருப்பமுடையவனாயிருக்கின்றேன். தேவரீர் அனுமதி தரவேண்டும்.

**விசுவாமித்திரர் :**—இராமா! காலக்கிரமத்தில், இம்முனிவர்களோடு பழகுவதேயன்றி மற்றமுனிவர்களோடும் பழகும்பாக்கியம் உனக்குக்கிடைக்கும். அதுபற்றி நீ கவலைகொள்ளாதே. காமனாச்சிரமத்

திலிருந்து நாம் இப்போது வெகுதூரம் வந்து விட்டோம். காலமோ வேனிற்காலம்; சூரியனோ உச்சிக்கு வந்துவிட்டான். இதோ தோன்றுகிற பாலைவனத்தைக் கடந்துசென்றால், யான் தவம் செய்ய விரும்பியுள்ள வனத்தை அடைந்துவிடலாம். இதுபோன்ற கொடிய பாலைவனம் வேறு எவ்விடத்திலுமில்லை. இப்பாலைவனத்தின் கொடுமையைச் சகிக்கமுடியாமையால்தான் பூமி நிலைத்து நில்லாது சுழன்றுகொண்டிருக்கின்றது. இது முன்னொருகாலத்தில் நல்லவிளைவுள்ள நிலமாயிருந்தது. இதனைத் தாடகை என்னும் ஓர் அரக்கி அழித்துப் பாழாக்கிவிட்டாள்.

**இலட்சுமணன்** :—அண்ணா! அதுதான் பாலைவனம் போலும்! கால் சுடுகின்றது; வெயிலின்கொடுமை அதிகமாயிருக்கின்றது.

**இராமன்** :—தம்பி இலட்சுமணா! எனக்கும் கால்சுடுகின்றது; வெயிலின் கொடுமை அதிகமாய்த்தான் தோன்றுகின்றது.

**விசுவாமித்திரர்** :—குழந்தைகாள்! இந்தப்பாலைவனத்திற்காக நீங்கள் அஞ்சவேண்டாம். நான் உபதேசிக்கும் இரண்டு மந்திரங்களை நீங்கள் உச்சரித்துக்கொண்டுவந்தால், உங்களுக்கு இந்தப்பாலைவனம் நந்தவனம்போல் இருக்கும்; பசி, தாகம் முதலிய உபத்திரவங்களும் உண்டாகா.

(என்று சொல்லி அவர்களுக்குப் பலை, அதிபலை என்னும் இரண்டு மந்திரங்களை உபதேசித்தார்.)

**இராம இலட்சுமணர்** :—அடிகளே! இப்பாலைவனம் எங்களுக்கு நந்தவனம்போல் குளிர்ச்சியாய்த்

தோன்றுகின்றது. நாங்கள் தண்ணீரில் நடப்பதுபோல் இவ்வனத்தில் நடக்கின்றோம். தாங்கள் கூறிய தாடகை என்னும் அரக்கி எங்கே வசிக்கின்றாள்?

**விசுவாமித்திரர் :—** தாடகை இதோ நமக்கெதிரே தோன்றும் மலையில்தான் வசிக்கின்றாள். அவள் மிகக்கொடியவள்; எத்தனையோமுறை யான் செய்யத் தொடங்கிய யாகத்தை அழித்துவிட்டாள். அவளுக்கு இரண்டு பிள்ளைகளுண்டு. அவர்களும் மிகப் பொல்லாதவர்கள். அவள் வடிவம் கருங்கடல்போலிருக்கும். யமனும் அவளைக்கண்டவுடன் நடுங்குவான். அவளையும் அவள் மக்களையும் அழிப்பதற்காகவே உங்களை நான் இப்போது அழைத்துக்கொண்டு வருகிறேன்.

(உடனே இராமன் தான் வந்திருப்பதை அவர்களுக்கு அறிவிக்கும்பொருட்டு, தனது வில்லைவளைத்து, நாணேற்றி, நாணோசை செய்தான். அவ்வோசையைக் கேட்ட தாடகை கடுங்கோபமுற்று ஒரு பெரிய சூலத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அம்மலையினின்றும் இறங்கி வருவாளானாள்.)

**இலட்சுமணன் :—** அண்ணா! ஒரு கருமலை அக்கினியை வீசிக்கொண்டு வருவதுபோல நமக்கெதிரே வருபவள் யார்?

**இராமன் :—** இவள்தான் தாடகையா யிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

**விசுவாமித்திரர் : —** குழந்தைகளே! இவள்தான் தாடகை. மிகப்பொல்லாத துஷ்டையாகிய இவளை இப்பொழுதே கொன்றுவிடவேண்டும்.

நீங்கள் வில்லேவளைத்து அம்பெய்து அவளைக் கொல்லுங்கள்.

**இராமன்** :—அடிகளே! வீரராயுள்ளவர் பெண்களைக் கொல்லலாமோ? பெண்வதை பொல்லாத தல்லவா? இவளைக்கொல்ல எனக்கு மனம் வர வில்லை.

**விசுவாமித்திரர்** :—இராமா! இவளிடத்தில் பெண்களுக்குரிய குணம் சிறிதுமில்லை. ஆண்மக்களெல்லாம் இவளைக் கண்டு அஞ்சுவாராயின், இவளைப் பெண் என்று சொல்லுவதெப்படி? இவள் உருவத்தால் பெண்ணுயிருப்பினும், செய்கையால் ஆணுயிருக்கின்ருள். இவளைக்கொல்லுவது பாவமாகாது. முன்பு விட்டுணுமூர்த்தி பிருகு முனிவரது மனைவியாகிய கியாதி யென்பவள் செய்த தீமையைக்கருதி, அவளைப் பெண்ணென்று கருதாது கொன்றிருக்கின்றனர். ஆதலால், தடையின்றி நீ இவளைக் கொல்லலாம்.

**இராமன்**:—அடிகளே! தங்கள் கட்டளைப்படி நடக்கச் சித்தமாயிருக்கின்றேன்.

**தாடகை** :—(இராமன் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே ஆரவாரஞ்செய்துகொண்டு அவர்கள் அருகே வந்து) நீங்கள் யார்? எங்கிருந்து வருகின்றீர்கள்? எனக்கு நல்ல உணவு இல்லையென்று இங்கே வந்தீர்கள் போலும்!

**(என்று கூறிக்கொண்டே அவள் தன் கையிலிருந்த சூலாயுதத்தை அவர்கள்மீது வீசியெறிந்தனள். உடனே இராமன் வில்லைவளைத்து அதில் ஓர் அம்பைத்தொடுத்து அச்சூலத்தைக் கண்டதுண்டமாகச் செய்துவிட்டான்.)**

**விசுவாமித்திரர்** :—இராமா! உடனே ஒரு அம்பை விட்டு இவளைக்கொல்.

**தாடகை** :—அடகிழவா? உனக்கு இவ்வளவு கர்வமா? பார், இவர்களை இப்பொழுதே கொன்றுவிடுகிறேன். (என்றுசொல்லிக்கொண்டு அங்குள்ள கருங்கற்பாறைகளை ஓயாது எடுத்தெடுத்து அவர்கள்மீது வீசினாள்.)

**இராமன்**:—இலட்சுமணா! இவள் மிகக் கொடியவள்; இவளைக் கொல்லுவது தப்பாகாது.

(என்று சொல்லிக்கொண்டே சிலபாணங்களால் அப்பாறைகளைத் தடுத்து ஒருபாணத்தை அவள்மீது விட்டான். அப்பாணம் வேகமாய் அவள் மார்பிற் பாய்ந்து கீழ்மக்கட்கு மேன்மக்கள்சொன்ன பொருள்போல அப்புறம் சென்றுவிட்டது. அதனால், தாடகை கீழேவிழுந்து இறந்தாள். பிறகு விசுவாமித்திரர் தாம் வேள்விசெய்ய விரும்பியுள்ள சித்தாச்சிரமத்திற்கு இராம இலட்சுமணர்களை அழைத்துச்சென்றனர்.)

(எல்லோரும் போகிறார்கள்.)

## அங்கம் 2. காட்சி II.

இடம்:—சித்தாச்சிரமம்.

காலம்:—பகல் மணி 10.

பாத்திரம் :—விசுவாமித்திரர், இராமன், இலட்சுமணன், சுபாகு, மாரீசன்.

**இராமன்** :—இலட்சுமணா! முனிவர் தாம் வேள்விசெய்தற்கு வேண்டிய பொருள்களையெல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டு அதனைச்செய்ய ஆரம்பித்து விட்டார். அவர் தம்வேள்வியைக்காக்க நம்மிருவரையும் காவலாக வைத்திருக்கின்றார். நாம்

முனிவரது வேள்விக்குப் பங்கம்வாராதபடி கவன மாய்க்காவல் செய்துவரவேண்டும்.

இலட்சுமணன் :—அதற்கென்னதடை! அப்படியே செய்வோம்.

இராமன்:—தம்பி இலட்சுமணு! நாம் முனிவர்செய்யும் வேள்வியை, இமைகள் கண்களைக் காப்பதுபோலக் காத்துவருகின்றோம். முனிவர்கூறிய அரக்கருள் ஒருவரும் இங்கு வரவில்லையே! அவர்கள் வாரா மையைப்பற்றி முனிவரைக் கேட்கலாமா?

இலட்சுமணன் :—அப்படியே கேட்கலாம்.

இராமன் :—(முனிவரது அருகேசென்று) அடிகளே! தேவரீர் கூறிய அரக்கர் எங்கேயிருக்கின்றனர்? அவர்களுள் ஒருவரும் இங்கே வரக்காணோமே; அவர்கள் எப்போது வருவார்கள்?

இலட்சுமணன் :—அண்ணு! முனிவர்மனம் வேள்வியி லேயே ஊன்றியிருக்கின்றது; அதனுல்தான் அவர் மௌனமாயிருக்கின்றார்.

(என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, மாரீச னும், சுபாகுவும் அரக்கர்களுடன் கருமேகம்போல ஆகா யத்தில்வந்து நிறைந்து, மழைபோலச் சித்தாச்சிரமத்தின் மீது மண்ணையும் கல்லையும் வாரிப்பெய்தனர்.)

இராமன் :—தம்பீ! அரக்கர் வந்துவிட்டனர். நீ முனி வரது வேள்வியைக் காத்துக்கொண்டிரு. நான் அவர்களை அழித்துவருகிறேன். [என்று கூறிச் சித்தாச்சிரமத்தின்மீது ஒரு சரக்கூடம் கட்டி அரக் கர்மீது பாணமழை பெய்தனன்.]

**சுபாகு** :—அண்ணு மாரீசா! இராமன் பொலலாதவ ணுயிருக்கின்ருன். இவனை வெல்வது இராவண னுக்கும் முடியாதென்று நினைக்கின்றேன். இவ னிடத்தில் என் மாயவித்தை ஒன்றும் பலிக்க வில்லை.

(என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே இராம னது பாணங்களுள் ஒன்று மாரீசன்மீது பாய்ந்து அவனைத் தள்ளிக்கொண்டுபோய்க் கடலில் சேர்த்துவிட்டது.)

**சுபாகு** :—அண்ணு! உன்கதி இப்படியா ஆயிற்று! நான் என்ன செய்வது? இவனேடு போர் செய்ய எனக்குச் சத்தியில்லை.

(என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே இராம னது மற்ருெருபாணம் வந்து அவனைக் கொன்றுவிட்டது. விசுவாமித்திரரது வேள்வியை அழிக்கவந்த அரக்கர்களுள் இறந்தவர்போக மற்றவர்கள் பயந்தோடிப்போயினர்.)

**விசுவாமித்திரர்** :—(யாகத்தைத்தடையின்றி முடித்து இராமனை நோக்கி) தாசரதி! உனக்கு நல்வாழ்வு உண்டாவதாக! உன்னுடன் திருமகள் சேர்வாளாக! இனி, உலகம் கவலையின்றி வாழும். இனி, நான் குறித்துள்ள மிதிலைக்கு உங்களை அழைத்துக் கொண்டுபோகிறேன். என்னுடன் வாருங்கள்.

**இராமலட்சுமணர்** :—அப்படியே வருகிருேம்.

(எல்லோரும் போகிருர்கள்.)

## 6. பிறப்பு நலந்தருமோ ?

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ ?
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ ?
மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ ?
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ ?
வாழ்நான்கு சாதிக்கு உணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக்கு உணவுகாட் டிலுமோ ?
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே.
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே ;
இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே ;
வழிபடு தெய்வமும் ஒன்றே; ஆதலால்,
முன்னோர் உரைத்த மொழிதவ றுமல்
எந்நாள் ஆயினும் இரப்பவர்க்(கு) இட்டு,
புலையும் கொலையும் களவும் தவிர்ந்து,
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து,
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து,
பேணி உரைப்பது பிழையெனப் படாது.
சிறப்பும் சீலமும் அல்லது,
பிறப்பு நலம்தருமோ ? பேதை யீரே !

—*கபிலரகவல்.*

## 7. சகாராப் பாலைவனம்

தமிழர்கள் பூமியைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாக வகுத்து வழங்குவர். அவற்றுள், பெரும்பாலும் நீரும் நிழலுமில்லாது, சுத்த மணலும் மணற்குன்றுகளும் நிறைந்துள்ள பெரும்பரப்பான பூபாகமே பாலைவனமென்று




சொல்லப்படும். மேலேயுள்ள படத்தைப் பார்த்தால், அதில் பாலைவனங்கள், பூமியின் மத்திய (நிரட்ச) ரேகைக்கு வடக்கிலும் தெற்கிலும் இரண்டு பெல்டுகள் (Belts - ஒட்டியாணங்கள்) போட்டாற்போல் தொடர்ந்து வரிசையாயிருப்பதைக் காணலாம்.

மத்தியரேகைக்கு வடக்கிலுள்ளபெல்ட், மத்திய ஆசியாவில் ஆரம்பித்து, அதன் குறுக்கே கோபி (Gobi)என்னும் பெயருடன் தென்மேற்காகச் செல்லுகின்றது; பிறகு பெர்ஸியா (Persia) தேசத்தில் ஆரம்

பித்து, அரேபியா (Arabia) நாட்டின் வழியேசென்று செங்கடல் வரையில் பரவியிருக்கின்றது. இவைகட்கு முறையே பெர்ஸியன் பாலைவனம், அரேபியன் பாலைவனம் என்று பெயர்களாம். பிறகு அது வடஆப்பிரிக்காவின் செங்கடலோரத்தில் தொடங்கி நடுக் குறுக்கே சென்று, அட்லான்டிக் சமுத்திரம் மத்தியதரைக்கடல் ஆகிய இவற்றின் ஓரங்களிலுள்ள ஒடுக்கமான துண்டு நிலம் தவிர்த்து, மற்றவிடங்களில் வியாபித்திருக்கிறது. இதுவே சகாராப் பாலைவனமாம். இத் தொடர்ச்சியின் முடிவு வடஅமெரிக்காவின் தென்பாகத்திலுள்ள ஐக்கிய நாடுகளிலும், மெக்ஸிகோ (Mexico) விலும் உள்ள பாலைவனங்களாகும்.

மத்திய ரேகைக்குத் தெற்கிலுள்ள பாலைவனப் பெல்ட், வடக்கிலுள்ள பாலைவனப் பெல்டைவிடச் சிறியதாகும். இந்தப் பெல்ட், ஆஸ்டிரேலியாவிலுள்ள தி கிரேட் சாண்டிப் பாலைவனம் (The Great Sandy Desert), தி கிரேட் விக்டோரியாப் பாலைவனம் (The Great Victoria Desert), தென் ஆப்பிரிக்காவிலுள்ள கலஹாரி (Kalahari) பாலைவனம், தென் அமெரிக்காவின் தெற்குப் பாகத்திலுள்ள அர்ஜென்டைனு (Argentina) பாலைவனம் முதலியவற்றைத் தனக்கிடமாகக் கொண்டதாகும். இவையேயன்றி, வேறுபல பாலைவனங்களு மிருக்கின்றன. இவற்றின் மொத்த விஸ்தீரணம் அறுபது லட்சம் சதுரமைலாகும்.

சாதாரணமாக ஜனங்கள் பாலைவனம் என்பது மணல்நிறைந்த சமவெளி யாகுமென்று நினைக்கின்றார்கள்; அப்படி நினைப்பது தவறாகும். பாலைவனமாவது மணற்குன்றுகளும் (Sand Dunes), அவைகட்கு இடையேயுள்ள பள்ளத்தாக்குகளும், சிலவிடங்களில்

உயர்ந்து சிலவிடங்களில் தாழ்ந்திருக்கும் மணல்வெளிகளும் நிறைந்த நிலப்பரப்பேயாகும். மேற்கூறிய மணற்குன்றுகள் அடிக்கடி இடமும் திசையும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. இவ்விஷயம் பார்ப்பதற்கு மிகு ஆச்சரியமாயிருக்கும். நாம் சகாராப்பாலைவனத்தை இன்று பார்த்துவிட்டு, மீண்டும் அதை ஒரு வருஷம் பொறுத்துப் பார்ப்போமாயின், அப்போது அது நமக்கு முற்றிலும் புதியதாகவே தோன்றும்; அதில் முன் பார்த்த மணற்குன்றுகளிருந்த இடம் சமவெளியாகவும், சமவெளியாயிருந்த இடம் மணற்குன்றுகளுள்ளனவாகவும், முன் மேடாயிருந்த இடம் பள்ளமாகவும், பள்ளமாயிருந்த இடம் மேடாகவும் இருக்கும். இவ்வகையான மாறுபாடுகள் உண்டாவதற்குக் காரணம் யாதெனை ஆராயின், இவைகளெல்லாம் காற்றின் வேலையென்றே புலப்படும்; ஆனால், அது முதலில் நம்பத்தக்கதாயிராது. உண்மையை விசாரித்தால், பாலைவனங்கள் உண்டாவதற்குக் காற்றே முக்கிய காரணமென்று ஏற்படும்.

ஆயிரக்கணக்கான வருஷங்களாக அடிக்கும் பெருங்காற்று, கடற்கரையோரங்களிலுள்ள மணல்வெளிவழியே செல்லும்போது அங்குள்ள மணலை வாரியெடுத்து உள் நாடுகளில் தூற்றிக்கொண்டு போகிறது. அதனால், அக்காற்றடிக்கின்ற வழியிலுள்ள சில உள்நாட்டுப் பிரதேசங்கள் காலாந்தரத்தில் மணலால் மூடப்பட்டிருப்பதே இப்பொழுது காணப்படும் பாலைவனங்களாகும். உற்றுநோக்குங்கால், இவ்வாறு காற்று விளைக்கும் நாசமானது சென்ற ஜெர்மன்யுத்தத்தால் நேர்ந்த கொடுமையைவிடப் பன்மடங்கு அதிகமாமென்று திண்ணமாய்ச் சொல்லலாம்.

தென்னிந்தியாவில் மேல்காற்று அடிக்கும்பொழுது சிலசமயங்களில் அது மண்ணையும் மணலையும் வாரித் தூற்றி, வீட்டறைகளின் தரைகள் எல்லாம் ஒரே மண்ணாகும்படி செய்வதைப் பெரும்பாலார் கவனித்திருக்கலாம். சிலசமயங்களில் மத்தியஆசியாவில் அடிக்கும் கடும் மண்காற்றானது ஒரு பெரிய மேகம்போல் தோன்றி, சூரியப்பிரகாசத்தை முற்றிலும் மறைத்து, ஒரே இருள்மயமாகச் செய்யத்தக்கதாயிருக்கிறதாம். மணல்மாரி என்றும் சொல்லத்தக்க பெரிய மண்காற்று



அதிவேகமாய் அடிக்கும்பொழுது, ஒருமைல்கன பரிமாணமுள்ள காற்று 126,000 டன் எடையுள்ளமண்ணையும் மணலையும் சுமந்துவரக்கூடுமென்று அனுமானம் செய்யப்படுகிறது. இப்படியாயின், அநேக காலங்களாக அடிக்கும் மண்காற்று, தான்செல்லும் வழியிலுள்ள நகரங்களின்மேல் தாக்குவதால், அவைகள் மணலில் புதைந்து அழிவுற்றனவென்பதில் ஆச்சரியப்படத்தக்கது ஒன்றுமில்லையாம்.

சில காலத்திற்கு முன்பு சர் ஆரல் ஸ்டீன் (Sir Aurel Stein) என்பவர் தாம்செய்த பெருமுயற்சியால், ஆசியாவிலுள்ள கோபியென்னும் பாலைவனத்தில் ஒரு சிறுபாகத்தைத் தோண்டிப்பார்த்தார்; பார்த்தபொழுது நூற்றுக்கணக்கானஅடி மணலின்கீழ், ஒரு காலத்தில் செல்வத்தாலும் நாகரிகத்தாலும் சிறந்து விளங்கிய நகரங்களும், ஆறுகளும், ஏரிகளும் இருந்த குறிப்புகள் காணப்பட்டன. 1804–1807-ம் வருஷங்களுக்கிடையே அடித்த மண்காற்றால் ப்ரஷ்யா (Prussia) தேசத்துக் கடற்கரையோரத்தில் நூற்றுக்கணக்கான ஏகரா விஸ்தீரணத்திற்கு, தேவதாரு விருட்சங்கள் உயர்ந்து அடர்ந்து வளர்ந்த ஒரு பெருங்காடு முற்றிலும் மணலால் மூடிமறைக்கப்பட்டிருக்கின்றதென்பது சரித்திர மூலமாய்த் தெரிந்த விஷயமாம்.

இங்கிலாந்துதேசத்தின் கிழக்குக் கடற்கரையோரத்திலுள்ள நார்போக் (Norfolk), சப்போக் (Suffolk) என்னும் இடங்களிலும், ஸ்காட்லாண்டு தேசத்தின் கிழக்குப் பாகத்திலுள்ள மோற்றே நதி (Moray firth) முகத்துவாரத்திலும், அபர்டீன்ஷையரின் (Aberdeenshire) கடற்கரையோரத்திலும் ஆயிரக்கணக்கான ஏகரா விஸ்தீரணமுள்ள நன்செய் புன்செய் நிலங்கள் சுமார் இருநூறு வருஷங்களுக்குள் மணலால் கொள்ளப்பட்டன என்றும் சரித்திரம் கூறுகின்றது. இவ்வாறே, பிரான்ஸ் (France) தேசத்தில் பே ஆப் பிஸ்கே (Bay of Biscay) என்னும் கடற்கரையோரத்தில் மண்காற்றுச் செய்யும் விபரீதத்தைச் சொல்லவேமுடியாதாம். இங்கே வருஷாவருஷம் 60 அல்லது 70 அடி தூரமுள்ளவிடம் மணலால் மூடப்பட்டுக்கொண்டே வருகின்றது. அதைத்தடுப்பதற்கு


ஐரோப்பா
வட அட்லாண்டிக் மஹா சமுத்திரம்
மத்திய தரைக்கடல்
ஆசியா
அரேபியா
செங்கடல்
மொராக்கோ
அல்ஜீரியா
லிபியா
லிபியன்பாலைவனம்
ஈஜிப்ட்
லிபியன் பீடபூமி
நூபியன் பாலைவனம்
குப்ரா ஒயேசிஸ்
திபெஸ்டி
லேக் சாட்
மத்திய சூதான்
மேற்கு சூதான்
நைகர் நதி
அபெஷர்
கிழக்கு
அபிஸீனா
ஏடன் விரிகுடா
பெல்ஜியன் காங்கோ
தென் அட்லாண்டிக் மஹா சமுத்திரம்
உத்தராயண ரேகை
சகாராப்பாலைவனம்

வழி ஒன்றும் தோன்றவில்லையாம். இம்மாதிரியே சகாராப் பாலைவனத்திலும் வருஷந்தோறும் ஜனங்களும் பயிர் பச்சைகளும் இருக்கும்படியான பாகங்கள் சிறிது சிறிதாக மணலால் கொள்ளப்பட்டு வருகின்றனவென்றும் சொல்லப்படுகிறது.

பாலைவனங்களுளெல்லாம் மிகப் பெரிதான இந்தச் சகாராப் பாலைவனம் ஆப்பிரிக்கா கண்டத்தின் வடபாகத்திலுள்ளது. இது, மேற்கே அட்லான்டிக் சமுத்திரத்தை யடுத்துள்ள நாடுகளுக்கருகிலிருந்து கிழக்கே செங்கடலை யடுத்துள்ள நாடுகள்வரைக்கும், வடக்கே மத்தியதரைக்கடலை யடுத்துள்ள நாடுகளிலிருந்து தெற்கே சூடான்தேசத்தில் புல்விளையும் பூமிவரைக்கும் பரந்துகிடக்கிறது. சகாராப்பாலைவனம், சுமார் 3000 மைல் நீளமும், 600 மைல் அகலமும் உள்ளதாகி, ஆப்பிரிக்கா கண்டத்தில் ஐந்தில் ஒருபங்கு விஸ்தீரணமும் ஐரோப்பாவின் விஸ்தீரணத்தில் பாதிக்கு மேற்பட்டதுமாயிருக்கின்றது. இதன் பரப்புவெளி, சில இடங்களில் கடல்நீர் மட்டத்திற்குத் தாழ்ந்தும், சில இடங்களில் சுமார் 7800 அடி முதல் 11000 அடி வரையில் உயர்ந்தும், சராசரி 2000 அடி உயரமுள்ளதாய் இருக்கின்றது. இப்பாலைவனம் பகலில் அதிக உஷ்ணமும், இரவில் நீர் உறைந்து கட்டியாகத்தக்க குளிர்ச்சியும் வாய்ந்தது.

இப்பாலைவனத்தில் விசேஷமாய் மழை பெய்வது இல்லை; ஆனால், சிலவிடங்களிலேயே மழை எப்பொழுதாவது ஒரு சமயம் பெய்கின்றது. இவ்விடங்களில் சிறிது தண்ணீர்வசதி இருக்கின்றபடியால், பயிர்பச்சைகள் செழித்து வளர்கின்றன; ஜனங்கள் கூட்டமாகச் சேர்ந்து வசிக்கின்றனர்.

அன்றியும், முற்காலத்தில் ஆறுகளாயிருந்து மறைந்த சில விடங்களில் நீர் ஊற்றுகள் இருக்கின்றன. இவ்விடங்கள் ஓயசிஸ் (Oasis) எனப் படுகின்றன. இவ்விதமான ஓயசிஸ் இங்கே பல உள்ளன. அவற்றுள், முக்கியமானவை டாபிலேட் (Tafilet), ட்வாட் (Twat), குராரா (Gurara) என்பனவாம். இவ்விடங்களில் பேரீந்து மரங்கள் அதிகமாம்; சீமை வாதாம் (Apricot), மாதுளை, கிச்சிலி முதலிய மரங்களும், திராட்சையும், சோளம், கோதுமை, வாற்கோதுமை (Barley) முதலிய தானிய வகைகளும் செழுமையாய் விளைகின்றன. இவ்விடங்கள் பார்ப்பதற்கு மிகவும் மனக்களிப்பைத் தரத்தக்கனவாய் இருக்கின்றன. இங்கேயே வர்த்தகக்கூட்டத்தார் தங்கிக் களைப்பாறுவர். இப்பாலைவனத்தின் மற்றவிடங்களில் மனிதர் வாழ்க்கை அசாத்தியமானது; ஒணான் உடும்பு வகையும், தேள் பாம்பு முதலிய விஷ ஜந்துக்களும் தவிர, வேறு பிராணிகள் இருப்பதில்லையாம்.

சகாராப் பாலைவனப்பிரதேசத்தின் மொத்த ஜனத்தொகை சுமார் இருபத்தைந்து இலட்சம் என்று கணக்கிட்டிருக்கின்றனர். இந்த ஜனங்களுள் பெரும்பான்மையோர் முகம்மதியர்கள். இவர்களுள், பெர்பர்ஸ் (Berbers) என்னும் ஜாதியாரே அதிகமா யிருக்கின்றனர்.

இப் பாலைவனப்பிரதேசம் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமானது. இவர்கள் சில வருஷங்களுக்கு முன் அல்ஜீரியாவின் தென்பாகத்தில் 156 குழாய்க்கிணறுகள் (Artesian wells) தோண்டி, 200,000 பேரீந்து மரங்களுக்குப் போதுமான நீர் பாய்ச்சினர். நீர் வசதி இருக்குமாயின், இப் பாலைவனத்தின் அநேக பாகங்கள் பயிரிடுவதற்கு மிகச் சிலாக்கியமானவையாம்.

## 8. ஆர்க்கிமேடீஸ்

ஒரு நாடு அபிவிருத்தியாதற்குரிய காரணங்களுள், அந்நாட்டில் தத்துவசாஸ்திரிகள் பலர் தோன்றித் தமது அபிப்பிராயங்களைப் பிரசங்க மூலமாகவும், புத்தக மூலமாகவும் வெளியிடுவதும் ஒன்றாகும். இப்போது ஆகாயவிமானம் உலக முற்றும் வியாபித்திருப்பதற்குக் காரணம் யாது? அது தத்துவ சாஸ்திரிகளது ஆராய்ச்சியின் பயனேயாகுமல்லவா? தத்துவ சாஸ்திரிகள் தமது ஆராய்ச்சிகளாலே கண்டுபிடித்தவற்றைத் தமது செய்கைகளால் காட்டும்போது, அவை ஆகாய விமானங்களாகவும், பீரங்கிகளாகவும், நீராவியந்திரங்களாகவும், மோட்டார் வண்டிகளாகவும், இன்னும் பல பொருள்களாகவும் வெளியாகி வருகின்றன.

தத்துவ சாஸ்திரிகள் பிறந்தமையால் சிறந்து விளங்கும் தேசங்களுள் ஐரோப்பாவிலுள்ள இட்டாலி தேசமும் ஒன்றாம். அத்தேசத்தின் தெற்கிலுள்ள ஸிஸிலித் தீவின் தலை நகராகிய சைரக்கியூசில், கி. மு. 287-ம் வருஷத்தில் ஆர்க்கிமேடீஸ் என்னும் ஒரு தத்துவசாஸ்திரி பிறந்தனர். அவர் அத்தீவின் அரசனாகிய ஹீரோவுக்குப் பந்துவாயும் நண்பராயு மிருந்தார்; இயற்கைப் பொருள்களை ஆராய்ச்சிசெய்வதிலும் கணிதசாஸ்திரங்களைச் சோதனை செய்வதிலும் தம் காலத்தைப் பெரும்பாலும் கழித்துவந்தார்.

அவர், உலகத்தில் நடப்பனவெல்லாம் சில விதிகளுக்கு உட்பட்டிருக்கின்றன வென்றும், அவ்விதிகளை மனிதன் அறிவானனால் இயற்கையையும் வென்றுவிடலாமென்றும் நம்பிக்கை கொண்டிருந்தார். ஸிஸிலித் தீவின் அரசன் வியாபாரத்தின் பொருட்டு, பல பெரிய

கப்பல்களைக் கட்ட ஏற்பாடுசெய்து, அக்கப்பல்களைக் கட்டும் துறைமுகத்திற்கு அடிக்கடி போய்க்கொண்டிருந்தான்; ஆர்க்கிமெடீஸும் அவனோடு அத் துறைமுகத்திற்குப் போய்வருகின்றவரா யிருந்தார். அவ்விடத்தில் ஒரு நாள் மாலுமிகளும் வேலையாட்களும் உறுதியுடைய கோல்களால் பளுவான பொருள்களைத் தூக்குவதையும், புரட்டுவதையும் அவர் கவனித்துப் பார்த்தார். அதனால், அவர் கோல்களின் நீளத்திற்கேற்ற வாறு எந்தப்பளுவுள்ள பொருள்களையும் புரட்டல்கூடும் என்னும் தீர்மானம் உடையவராய், தம் நண்பனாகிய அரசனிடத்திற்குச் சென்று, துறைமுகத்தில் தாம் கண்டதத்துவத்தைக்கூறி, "அரசனே! நீ எனக்குத் தக்க நீளமும் உறுதியும் அமைந்த ஒரு உலுக்குமரமும், பூமியில் சம்மந்தமின்றி நிற்பதற்குரிய ஒரு இடமும், தகுந்த முட்டுக்காலும் கொடுத்தால், நான் என் பளுவைக் கொண்டு இப்பூமியையே தூக்கிவிடுவேன்" என்று கூறினார்.

இதன் கருத்து மறுபக்கமுள்ளபடத்தைக் கவனித்துப் பார்த்தால் நன்கு விளங்கும். படத்தில் காட்டப்பட்டிருக்கும் உலுக்குமரத்தில் B-க்கும் C-க்கும் மத்தியில் உள்ள நீளம், B-க்கும் A-க்கும் மத்தியிலுள்ள நீளத்தைவிட எவ்வளவிற்கெவ்வளவு குறைவாக இருக்கின்றதோ அவ்வளவிற்கவ்வளவு நீண்ட புஜத்தில் பிரயோகிக்கும் சிறிய சத்தியைக்கொண்டு, குட்டையான புஜத்தின்மேல் இருக்கும் பெரும்பளுவையும் சுலபமாக எழுப்பி விடலாம் என்பதேயாம். இந்த மூலதத்துவத்தை ஆர்க்கிமெடீஸ் கண்டுபிடித்து வெளியிடாதிருந்தால், உலகம் இவ்வளவு நாகரிகம் அடைதற்காதாரமான யந்திரங்கள் உண்டாயிருக்க முடியாவாம்.

அவ்வரசன் ஒரு கோயிலுக்குப் பொன் கிரீடம் ஒன்று செய்து கொடுக்கவிரும்பி, தட்டான் ஒருவனை அழைத்து, அக்கிரீடம் செய்வதற்கு வேண்டிய பொன்னை அவனிடத்தில் கொடுத்தான். அரசன் கூறியவாறு தட்டான் பொன் கிரீடத்தைஅழகாகச் செய்து வந்து அவனிடத்தில் கொடுத்தான்.




கிரீடமோ அழகாகவும் அரசன் கொடுத்த பொன் நிறைக்குச் சரியாகவும் இருந்தது; பார்வைக்குத் தனிப் பொன்னல் செய்யப்பட்டது போலவே இருந்தது; இருப்பினும், அத்தட்டானுக்கு விரோதமாயுள்ள சிலர் அவ்வரசனிடத்திற்சென்று, "தாங்கள் கிரீடஞ்செய்யக் கொடுத்த பொன்னில் தட்டான் சிறிதுபொன்னை எடுத்துக்கொண்டு அதற்குப் பதிலாக வெள்ளியைச் சேர்த்துக் கிரீடத்தைச் செய்துமுடித்திருக்கின்றான்" என்று கூறினர். அரசன் அதன் உண்மையை அறிய, ஆர்க்கிமெடீஸை அழைத்து, அவரிடத்தில் அக்கிரீடத்தைக் கொடுத்து, "நண்பரே! இக்கிரீடம் வெள்ளிகலந்த பொன்னல் செய்யப்பட்டதா? அல்லது தனிப்பொன்

னால் செய்யப்பட்டது? என்பதைத் தாங்கள் ஆராய்ச்சி செய்து கூறவேண்டும்'' என்றனன்.

ஆர்க்கிமெடீஸ் அக்கிரீடத்தை உருக்கி ஒரே அகலமும் நீளமும் உயரமும் உள்ள கட்டியாக வார்த்து, அக்கட்டியின் பரிமாணத்திற்குச் சரியாக, தனிப்பொன்னால் அதே அகலமும் நீளமும் உயரமும் உள்ள மற்றொரு கட்டியைச்செய்து, அவ்விரண்டையும் ஒரு தராசில் நிறுத்துப் பார்ப்போம் என்று நினைத்தார். கிரீடம் தனிப்பொன்னாய் இருக்குமாயின், அவ்விரண்டு கட்டிகளும் ஒரே நிறையுள்ளனவாயிருக்கும் என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்தவிஷயமாம். அப்பொன்கிரீடம் உயர்ந்த வேலைப்பாடுகளுடன் அழகாய் இருந்தமையால், அதனை உருக்க அவருக்கு மனம் வரவில்லை. அதனால், அவர் அக்கிரீடத்தை உருக்காமலே அதன் ஆகிருதியை அறியப் பலநாள் ஆராய்ச்சி செய்துவந்தனர்.

ஒருநாள் அவர் வழக்கம்போல் சர்க்கார் தண்ணீர்த் தொட்டியில் ஸ்நானம் செய்யப்போனார்; தொட்டியில் இறங்குவதற்குமுன் அதில் தண்ணீர் விளிம்புவரையில் நிரம்பி யிருந்ததைக் கண்டார். அவர் தொட்டியில் இறங்கி,உட்கார உட்கார,நீர் வெளியே வழிந்தோடியது. ஆர்க்கிமெடீஸ் ஸ்நானம் செய்து தொட்டியைவிட்டு வெளியே வந்தபோது, அதில் நீர் விளிம்புவரையிலில்லாமல் குறைந்திருப்பதை நோக்கினார்; அதனால், தொட்டியிலிருந்து வழிந்தோடிய நீர் தம்தேகத்தின் ஆகிருதியின் அளவாகவே இருக்கவேண்டுமென யூகித்தார். உடனே அவர் உற்சாகம் மேலிட இடையில் உடையில்லை யென்பதையும் மறந்து, "கண்டுகொண்டேன்! கண்டுகொண்டேன்!'' என்று வீதியில் கூவிக்கொண்டே ஓடித் தம் வீட்டிற்குள் சென்றார்.

சென்றவர் ஒரு பெரிய பாத்திரத்தினுள் அதன் விளிம்புவரையில் நிறையும்படி நீரைஊற்றி, கிரீடத்தை ஒரு நூலால் கட்டி, அதனை மெதுவாக நீரில் ஆழ்த்தினார்; அப்போது அப்பாத்திரத்திலிருந்து வெளியில் வழிந்தநீரைச் சேதமின்றிப் பிடித்துவைத்தார்; பின்பு கிரீடத்தின் எடைக்குச் சரியாகச் செய்துவைத்திருந்த தனிப் பொன்னால் ஆகிய கட்டியையும் தனி வெள்ளியாலாகிய கட்டியையும் தனித் தனியே நீர் நிறைந்த பாத்திரத்தில் ஆழ்த்துவதனால் வழிந்தோடுகிற நீரைத் தனித்தனியே பிடித்து வைத்துப் பார்த்தார்; பார்த்ததில், கிரீடத்தால் வழிந்தோடிய நீர், வெள்ளிக்கட்டியால் வழிந்தோடிய நீரைவிடக் குறைவாகவும், தங்கக்கட்டியால் வழிந்தோடிய நீரைவிட மிகுதியாகவும் இருந்தமையால், கிரீடம் தனிப்பொன்னால் செய்யப்பட்டதல்லவென்று உறுதிகொண்டார்; பிறகு வெள்ளியையும் தங்கத்தையும் பலவித அளவாகக் கலந்துருக்கிக் கட்டிகளாக்கி முன்மாதிரி பரீட்சித்துப் பார்த்தார்; பார்த்ததில், அக்கட்டிகளுள் ஒன்றை, விளிம்புவரையில் நீர் நிரம்பியுள்ள பாத்திரத்தில் அமிழ்த்தியபோது, அதனால் வழிந்தோடிய நீர்



அக்கிரீடத்தை அமிழ்த்தியபோது வெளியான நீரின் அளவுள்ளதாயிருந்தது. அதனால், கிரீடத்தில் வெள்ளியின் கலப்பு இவ்வளவு என்பதை உள்ளபடி கண்டு பிடித்து, அரசனுக்குத் தெரிவித்தார். அரசன் அவருடைய நுண்ணறிவைக்கண்டு மெச்சி அவருக்குத் தகுந்த மரியாதை செய்தனன். ஆர்க்கிமெடீஸ் இவ்வாறு பொன்கிரீட விஷயமாகப் பலவித ஆராய்ச்சி செய்துவரும்போது, கனமுள்ள ஒரு பதார்த்தம் நீரில் கிடக்குங்கால், அதன் கனம் குறைவாயிருப்பதுபோல் அவருக்குத் தோன்றிற்று. அதன் உண்மையைக் கண்டறியும்பொருட்டு, அவர் நீரில் கரையாமலிருக்கக்கூடிய ஒரு கனபதார்த்தத்தைத் தராசில்வைத்து வெளியே நிறுத்துப்பார்த்தார்; பிறகு, நீரில் அதனை அமிழ்த்தி நிறுத்துப்பார்த்தார்; நீரில் அப்பொருள் நிறைகுறைந்திருப்பதைக்கண்டு, வழிந்தோடிய நீரை நிறுத்துப் பார்த்தார்; பார்த்தபோது அதன் எடை, அப்பதார்த்தம் நீரில் குறைந்து காட்டிய எடைக்குச் சமமாக இருந்ததைக் கண்டார். அதனால், அவர் கனமுள்ள பொருள்கள் நீரில் உள்ளபோது அவற்றின் ஆகிருதிக்குச் சரியான நீரின் எடையளவு குறைந்துவிடுகின்றது என்று நிச்சயித்தார்.

ஆர்க்கிமெடீஸ் கணிதசாஸ்திரத்தில் ஒரு பெரிய நிபுணர். இப்போது வழங்கும் இலக்கங்களின் உதவியின்றி, ஒரு வட்டத்தின் சுற்றளவானது அவ்வட்டத்தின் குறுக்களவைவிட ஏறக்குறைய $3\frac{1}{7}$-பங்கு அதிகமாமென்னும் உண்மையைக் கண்டுபிடித்தவர் அவரே.

அவர் காலத்தில் ரோமானியர்கள் சைரக்கியூஸ் நகரை முற்றுகையிட்டுப் போர்செய்தனர். அப்போது அவர் தமது யுக்தியால் சில யந்திரங்களைக் கண்டு

பிடித்து அவற்றைத் தம் அரசனது சேனைகளுக்குச் செய்து கொடுத்தனர். அவர் அப்படிச் செய்து கொடுத்தும், சைரக்யூஸின் சேனை தோல்வியுற்றது. மார்சல்லஸ் என்னும் ரொமானிய சேனாதிபதி ஆர்க்கிமெடீஸ் என்பவரை நன்றாக அறிந்தவனாதலின், அவருக்கு யாரும் ஒருவிதத் தீங்குஞ் செய்தல்கூடாதென்று தன் சேனாவீரர்களுக்கு உத்தரவு செய்தான். படைவீரர்கள் சைரக்கியூஸ் நகரில் பிரவேசித்துக் கொள்ளையிட்டனர்; அவ்வீரர்களுள் ஒருவன், மணலில் கோடுகள் கீறி ஏதோ ஒரு கணக்கைப்பற்றி ஆலோசனை செய்து கொண்டிருந்த ஆர்க்கிமெடீஸைக் கண்டு, "நீர் யார்? உம்முடைய பெயர் என்ன?" என்று கேட்டான். அவர் ஆலோசனையில் ஆழ்ந்திருந்தபடியால் பதிலளிக்கவில்லை. அதனால், அம் முரட்டுவீரன் கோபங்கொண்டு அவரை வாளுக்கிரையாக்கினான்.

ஆர்க்கிமெடீஸ், அடி வட்டமாயும் அவ்வட்டத்தின் மத்திய ரேகையளவு உயரமாயுமுள்ள ஒரு பாத்திரத்தில் பக்கங்களில் இடைவெளியின்றிச் சரியாகப்பொருந்தக்கூடிய ஒரு வட்டமான பொருளை வைத்தால், அப் பாத்திரத்தின் சரியாக மூன்றில் இரண்டு பங்கு இடத்தை அவ்வட்டம் அடைத்துவிடும் என்னும் தத்துவத்தையும் கண்டுபிடித்தனர். இதற்காகவே அவர் சமாதியின்மீது மேற்கூறிய பாத்திரம்போன்ற ஒரு பாத்திரமும் அதனுள் ஒரு உருண்டையும் அவரது ஞாபகத்தின்பொருட்டு வைக்கப்பட்டிருக்கின்றன.

இயற்கைப் பொருள் சாஸ்திரம் தற்காலத்தில் அடைந்திருக்கும் உன்னத நிலைக்கு ஆர்க்கிமெடீஸ் என்னும் பெரியாரே அடிப்படையாயிருந்தமையால், அவர் புகழ் எங்கும் பரவியிருக்கின்றது.

## 9. மங்கையர்க்கரசியார்

எவன் தன்மனைவியால் தெய்வம்போலப் போற்றப்பட்டு வருகின்றானோ அவனே மக்களுள் சிறந்து விளங்குவானென்பது உலகப்பிரசித்தமாம். கற்புடைய மனைவி தன்கணவனுக்கு எந்த வகையினாலும் நன்மையே செய்து வருவாள்; அவன் தீயவழியிற் செல்வானாயின், அத் தீயவழியினின்றும் அவன் திரும்பும் முறையைக்கருதி, இடைவிடாதுமுயன்று அவனை நல்லவழியில் நடக்கும்படி செய்வாள். கற்புடைய மனைவியுடையவனுக்குக் கடல்போல வந்ததுன்பம் சூரியனைக்கண்ட பனிபோல் ஒழிந்துவிடுவதாம். அது மங்கையர்க்கரசியார் சரித்திரத்தைப் படிப்போர்களுக்கு நன்குவிளங்கும்.

சோழநாட்டை யாண்ட சோழர்களுள் ஒருவனான மணிமுடிச் சோழன் என்பவன் வெகுகாலம் புத்திரபாக்கியம் இல்லாதிருந்தான். அதனால், அவன் வருந்தித் தனக்குப் புத்திரபாக்கியம் வேண்டுமென்று சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தான். அவன் தவத்திற்கிரங்கிய சிவபெருமான் அருளால், அவனுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தை சித்திரப்பதுமையைப்போல மிகு அழகாயிருந்தமைநோக்கி, அவன் அதற்கு மங்கையர்க்கரசி என்று பெயரிட்டு, அதை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தான்.

மங்கையர்க்கரசியார், நற்குணங்களும் நற்செய்கைகளும் தம்முடன் வளர்ந்துவர, தாம்வளர்ந்து, பூர்வ புண்ணியவசத்தால் சிவபெருமானது திருவடிகளை

மறவாதும், தவறாதும் சிந்தனை செய்துவந்தார். மங்கையர்க்கரசியார் திருமணத்திற்குரிய பருவமடைந்த காலத்தில், மணிமுடிச்சோழன் அவருக்குத்தகுந்த கணவனைத்தேட முயற்சிசெய்துவந்தான். அப்போது பாண்டிநாட்டை ஆண்டிருந்த கூன்பாண்டியன் என்பான், சேரநாட்டை ஆண்ட சேரனை வென்று, மங்கையர்க்கரசியாரை விவாகஞ் செய்துகொள்ளவேண்டுமென்னும் நோக்கத்துடன் மணிமுடிச்சோழனோடு போரிடவந்தான். அப்போது மணிமுடிச்சோழன் கூன்பாண்டியனோடு சண்டையிட்டுத் தோல்வியடைந்தான்.

பின்னர், இருவருக்கும் ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. மணிமுடிச்சோழன் தன் புத்திரியாகிய மங்கையர்க்கரசியாரை அவனுக்கு விவாகஞ் செய்துகொடுத்து, அப்புத்திரிக்கு ஸ்திரீதனமாக அளவிறந்த பொருள்களையும், குலச்சிறையார் என்னும் ஒரு அறிஞரையும் கொடுத்தான்.

கூன்பாண்டியன், தன் மனைவியோடும் மற்றவரோடும் தனது இருப்பிடமாகிய மதுரைக்கு வந்தான்; பிறகு குலச்சிறையாரது மதிநுட்பத்தைக் கண்டு, அவரைத் தனக்கு மந்திரியாக வைத்துக் கொண்டான். அப்பால், அவன், சமண சமயத்தாரது போதனையால் அந்த மதத்தை ஆதரிக்கத் தொடங்கித் தானும் சமணனாகி விட்டான். 'அரசன் எப்படி அப்படி குடிகள்' என்னும் பழமொழிப்படி அவன் நாடு முழுதும் சமண மதம் பரவலாயிற்று. அதனால், அப்பாண்டியன் முன் அனுசரித்துவந்த சைவமதம் மிகவும் மறைந்து நிற்பதாயிற்று. மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் மாத்திரம் சைவ ஒழுக்கத்தினின்றுந் தவறாது நடந்துவந்ததுமன்றி, பாண்டியநாடு

முழுதும் முன்போல் சைவப்பயிர் தழைத்தோங்கவும், அரசன் சைவனுகவும் சிந்தனைசெய்து வந்தனர்.

இவ்விருவரும் இவ்வாறு சிந்தனைசெய்துவருங் காலத்தில், ஒரு நாள் மதுரையில் திருக்கோயில்கொண்டிருக்கும் சோமசுந்தரக்கடவுளைத் தரிசிக்கச் சென்றனர்; அப்போது அங்குச் சிதம்பரத்திலிருந்து சோமசுந்தரக்கடவுளைத் தரிசிக்க வந்திருந்த ஒரு பிராம்மணர் மூலமாக, அற்புத சிரேஷ்டராய் விளங்கும் திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகளோடு, திருமறைக்காடென்னும் வேதாரண்யத்தில், எழுந்தருளியிருப்பதை அறிந்து, திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு ஒரு விண்ணப்பத் திருமுகம் வரைந்து, அதனை அந்தப் பிராம்மணர் மூலமாக, திருஞானசம்பந்த சுவாமிகளிடத்தில் சேர்ப்பிக்கச் செய்தனர். திருஞானசம்பந்த சுவாமிகள் அத்திருமுகத்தைப் பெற்று, அதில் "தேவரீர் மதுரைக்கு எழுந்தருளி, சமணசமயத்தின் வளர்ச்சியைத் தடுத்து, சைவசமயத்தை முன்போலச் செழித்தோங்கச் செய்யவேண்டும். எமது இறைவனுகிய பாண்டியனுக்கு விபூதிப்பிரசாதம் அளித்து, பாண்டிநாட்டைச் சைவசமய வழிபாட்டில் நிறுத்தி, எங்களைக் காத்தருளவேண்டும்" என்று எழுதியிருப்பதைப் பார்த்து, உடனே தமது திருக்கூட்டத்தோடு மதுரைக்குச் செல்லப் புறப்பட்டனர்.

புறப்பட்டவர் இடையிலேயுள்ள சிவஸ்தலங்களையெல்லாம் முறையே தரிசித்துக்கொண்டு மதுரையையடைந்து, சொக்கலிங்கப்பெருமானைத் தரிசித்து, "சமணர்களை வாதப்போரில் வெல்லும்படி எனக்கு அனுக்கிரகம் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்து, அங்குள்ள ஒரு மடத்தில் அன்றிரவு தங்கியிருந்தார்.

அதையறிந்த சமணர்கள் கூன்பாண்டியனது உத்தரவு பெற்று, அவர் தங்கியிருந்த மடத்தின் நான்கு பக்கங்களிலும் தீ மூட்டிவிட்டனர். அதனால், மடம் பற்றியெரிவதையறிந்த திருஞானசம்பந்த சுவாமிகள், இத்தீயானது, "பையவேசென்று பாண்டியற்காகவே" என்னும் ஈற்றினையுடைய பாசுரத்தைப்பாடி, பரமசிவனைப் பிரார்த்தித்தார். அவ்விதமே தீயானது மடத்தினின்றும் நீங்கிக் கூன்பாண்டியனைச் சுரநோய் வடிவமாகப் பற்றிக்கொண்டது.

கூன்பாண்டியன் அச்சுரநோயைப் பொறுக்க முடியாது துடிதுடித்து, வாய்விட்டுக் கதறுவானானான். கற்பிற்சிறந்த உத்தமியாகிய மங்கையர்கரசியார், தமது கணவனுக்குச் சுரநோய் வந்ததற்குக் காரணம் இன்னதென்றறியாது கவலையடைந்து, குலச்சிறையாரோடு ஆலோசனைசெய்து, மருத்துவர்களை வரவழைத்தனர். மருத்துவர்கள் மருந்து கொடுக்கக்கொடுக்கப் பாண்டியனது சுரநோய் வளர்ந்துகொண்டே வருவதாயிற்று.

சமணர்களுள் மந்திரசித்தி பெற்றவர்கள் பாண்டியனிடத்திற்கு வந்து தாம் செய்யக்கூடிய மந்திரமெல்லாம் செய்தனர். அதனாலும் பாண்டியனது சுரநோய் சிறிதும் தணியவில்லை. பொழுதுவிடிந்த பிறகு, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் பாண்டியனை வணங்கி, "தங்களுக்கு இந்தச் சுரநோய் வந்ததற்குக் காரணம், சமணர்கள் திருஞானசம்பந்த சுவாமிகள் தங்கியிருந்த திருமடத்தில் தீயிட்டதேயாகுமென நினைக்கின்றோம். இச்சுரநோய் அவராலன்றி வேறொருவராலும் தீராது; தாங்கள் அவரை இங்கே அழைத்துவர உத்தரவு கொடுங்கள்" என்று வேண்டிக் கொண்டனர். விபூதி

தரித்திருப்பவரைப் பார்ப்பது பாவமென்று நினைக்கும் அப் பாண்டியன் சுரநோயின் உபத்திரவம் பொறுக்க முடியாமையால், "ஆபத்துக்குப் பாவமில்லை" என்று நினைத்து, அவரை அழைத்துவரும்படி குலச்சிறை யாருக்கு உத்தரவு கொடுத்தான்.

குலச்சிறையார், திருஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளியிருக்கும் திருமடத்திற்குச் சென்று, தக்க மரியாதையுடன் அவரைப் பாண்டியனது அரண் மனைக்கு அழைத்துக்கொண்டு வந்தனர். இவ்வாறு எழுந் தருளிய சுவாமிகள் பாண்டியனுக்கருகே தமக்கென் றிட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தார். அவரைப் பாண்டி யன் பணிந்து, "சுவாமிகளே! நோய் பொறுக்கமுடிய வில்லை. என்னைக் காத்தருளவேண்டும்! காத்தருள வேண்டும்!" என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டனன்.

அங்கிருந்த சமணர்கள் பாண்டியனை நோக்கி, "நாங்கள் உமது இடப்புறத்து நோயைத் தீர்க்கின் றோம். உமது வலப்புறத்து நோயைத் தீர்க்கும்படி இவருக்குத் தாங்கள் கட்டளையிடுங்கள்" என்றனர். அதுகேட்ட பாண்டியன், "வாதம் பேசுவதில் பயனில்லை. எவராலாவது என் நோய் தீரவேண் டும். முன்னர், நீங்கள் எனது இடப்புறத்து நோயை நீக்குங்கள்" என்று கூறினன். சமணர்கள் பாண்டிய னது இடப்பக்கத்தை மயிற்பீலியால் தடவி மந்திர ஜபம் செய்தனர். அவர்கள் ஜபம் செய்யச்செய்யப் பாண்டியனது சுரநோய் வளர்ந்துகொண்டே வருவதா யிற்று. அதனல், பாண்டியன் மிகவும் துடிதுடித்துக் கதறுவானுயினன். அதுகண்ட மங்கையர்க்கரசியார் பொறுக்கமுடியாத துக்கமுடையவராய், குலச்சிறையா ரோடு, திருஞானசம்பந்தர் திருவடிகளை வணங்கி,

"தேவரீர் கருணைசெய்து இவரது நோயைத் தீர்த் தருளவேண்டும்" என்று பிரார்த்தனை செய்தனர்.

உடனே, திருஞானசம்பந்த சுவாமிகள் தமது திருநீற்றுப் பையினின்றும், திருநீறு எடுத்து, "மந் திர மாவது நீறு" என்னும் தலைப்பினையுடைய திருநீற் றுப்பதிகத்தைப் பாடி, அந்தத் திருநீற்றினைப் பாண்டிய னது வலப்பக்கத்தின்மீது பூசினர். பூசினதும், அப் பக்கத்து நோய் தணிந்துவிட்டது. ஆனால், பாண்டிய னது இடப் பக்கத்திலுள்ள சுரநோயோ அதிகரித்து விட்டது. பாண்டியன் அதனைப் பொறுக்கமாட்டாது திருஞானசம்பந்த சுவாமிகளை நோக்கிக் கைகுவித்து, "அடிகளே! எனது இடப்பக்கத்துச் சுரநோய் அதிக ரித்துவிட்டது. அதனால், என்னுயிர் போய்விடும்போல் இருக்கின்றது. உடனே அப்பக்கத்து நோயையும் தாங்களே தீர்த்தருளவேண்டும்! தீர்த்தருளவேண் டும்" என்று பிரார்த்தித்தனன். திருஞானசம்பந்த சுவாமிகள் அவன்மீது இரக்கங்கொண்டு அப்பக்கத்தி லும் திருநீற்றை யெடுத்துப் பூசினர். உடனே அப் பக்கத்து நோயும் நீங்கிவிட்டது.

நோய் நீங்கிய பாண்டியன் மகிழ்வுடன் துள்ளி யெழுந்திருந்து, திருஞானசம்பந்த சுவாமிகளது திரு வடிகளை வணங்கி, "சுவாமிகளே! நான் இன்று முதல் தங்களுக்கு அடிமையாய் விட்டேன். சைவசமயமே மெய்ச்சமய மென்பதை இன்றேயறிந்தேன்" என்று கூறினன்; அப்பால், தனக்கருகே நின்று பணிவிடை செய்யும் மங்கையர்க்கரசியாரை நோக்கி, "மங்கையர்க் கரசியே! 'குலமகட்கழகுதன் கொழுநனைப் பேணுதல்' என்று பெரியோர் கூறியிருப்பது உனக்கே பொருந் தும்; உன்னாலன்றோ நான் சுவாமிகளைத் தரிசிக்கும்

பாக்கியத்தைப் பெற்றேன். இனி, எனக்கொன்றும் குறைவில்லை'' என்றுகூறி, சைவசமயம் முன்போல் பாண்டிய நாட்டில் தழைத்தோங்குதற்குரிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்து, தானும் சைவனுய்விட்டான். திருஞானசம்பந்த சுவாமிகளது கருணையால் அவனது கூனும் நிமிர்ந்து விட்டது; அழகும் பெருகிற்று. அதனால், அவன் சௌந்தர்ய பாண்டியன், நின்றசீர் நெடுமாறன் என்னும் பெயர்களோடு விளங்கி வருவானுனன்.

---

## 10. கல்வி

கல்வியே யாவர்க்கும் ஒளிகொண்ட வடிவமாம்;
கல்வியே புதைய லாகும்;
கல்வியே பரதேச கமனஇன மாகும்; அக்
கல்வியே துணைய தாகும்;
கல்வியே திசைகொண்ட கனகீர்த்தி யைத் தரும்;
கல்வியே பெருமை யாக்கும்;
கல்வியே வேண்டுநற் போகங்க ளைத் தரும்;
கல்வியே இன்ப மாக்கும்;
கல்வியே நிலைகொண்ட கற்பகத் தருவதாம்;
கல்வியே செல்வ மாகும்;
கல்வியே அரசராற் பூசைசெய் விக்கும்; அக்
கல்வியே கடவுள் காட்டும்;
கல்விக்கு நிகரான பொருள்ஒன்றும் இம்மையில்
கருதிடினும் இல்லை! இல்லை!!
கல்லான் எனைத்தொன்றும் இல்லான்; நடக்கும் இரு
கால் பசுவ(து) என்பர் மாதோ.

—ஆன்றோர் வாக்கு.

## 11. முயற்சி திருவினையாக்கும்

முயற்சி திருவினையாக்கும் என்பதன் பொருள், ஒருவரிடத்திருப்பதாகிய முயற்சி அவருடைய செல்வத்தினை வளரச்செய்யும் என்பதாம். முயற்சி திருவினையாக்கும் என்று கூறினவர் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் ஆவர். அவர்,

"தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்று மற்றோரிடத்தில் கூறியிருக்கின்றார். அதன் பொருள் ஒருவன் ஒரு காரியத்தைச் செய்துமுடிக்க முயலுகின்ற தொழிலானது விதிவசத்தினாலே அவன் நினைத்த பயனைத் தாராவிட்டாலும், அவனது முயற்சியானது தனக்கு இடமாகிய உடம்பு வருந்திய வருத்தத்தினளவு கூலிதரும் என்பதாம். இதனால், ஒரு காரியத்தைச் செய்து முடிக்க முயற்சி செய்கின்றவர் சிறிதாகவேனும் குறித்த பயனை அடைதற்குரியவராயிருக்கின்றனர் என்பது நன்றாக விளங்குவதாம். எந்தக் காரியமும் முடிவு பெறாது போவதில்லை; முடியாதென்னும் சொல்லுக்கு அர்த்தமே யில்லையாம்; ஒருவன் செய்யும் காரியம் முடியாமற் போகுமாயின், அதற்குக்காரணம் அவனது முயற்சியின் குறைவேயாம் என்பது அறிவுடையோரது அபிப்பிராயமாக இருக்கின்றது.

முயற்சியாவது ஒருவன் ஒரு தொழிலைச் செய்யுமிடத்து அதனை முடித்தற் பொருட்டு அவனது மனம் வருந்துதலில்லாமல் கிளர்ச்சியுடையதாதலாம். ஒருவனுக்குச் செல்வமாவது அவனது முயற்சியே யாகும். முயற்சியுடையவர் காலக்கிரமத்தில் தாம் நினைத்த

பயனை யெல்லாம் அடைதற்குரியவராவர். சிறந்த முயற்சியுடையவரிடத்துச் செல்வம் வழி கேட்டுப் போய்ச்சேரும் என்பது ஆன்றோரது மொழியாம்.

யான் மற்றவரினும் சிறந்து விளங்கவேண்டும் என்று நினைப்பவனே சிறந்த பயனைத் தரக்கூடிய காரியங்களை ஊக்கத்தோடு செய்து வருதற்குரியவனாவன். ஒருவனது உயர்ச்சி அவனது முயற்சியின் அளவினதாகவே இருப்பதாம். நம்மைக் கடவுள் அடிமையாகவே இருக்கும்படி படைத்துவிட்டார்; அதனால், நாம் முயற்சிசெய்வது பயனற்ற காரியமாம் என்று சொல்லிக்கொண்டு ஒரு காரியத்தையும் செய்ய முயலாது சோம்பேறிகளாய் இருப்பவர்களுக்குச் சுபமுண்டாவது எப்படியாம்? "முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் பழமொழியை அடிக்கடி கவனித்து வருகின்றவர்தாம் சோம்பலின்றித் தாம் செய்வதற்குரிய காரியங்களைத் தக்கவாறு செய்ய முயன்று வருவர். அவர்தாம் மேன்மையடைதற்குரியவராவர். ஔவைப் பிராட்டியார்,

"ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு"

"சோம்ப ரேன்பவர் தேம்பித் திரிவர்"

என்று கூறியுள்ள இவ்வாக்கியங்கள் என்ன தெரிவிக்கின்றன? ஒருவர் முயற்சியுடையவராயிருப்பாராயின், அது அவர் தேடிய செல்வத்திற்கு அழகு செய்வதாகும்; சோம்பலுடையவர் தரித்திரத்தினாலே வருந்தி, பசியின் கொடுமையால் வீடுதோறும் சென்று உணவுக்காக அலைவர் என்பதையல்லவா தெரிவிக்கின்றன?

யானையானது புலியைக் கண்டவிடத்து அஞ்சுவதற்குக்காரணம்என்ன? அது அதனிடத்துப் புலியைக்

கொல்லவேண்டும் என்னும் எண்ணமும் முயற்சியும் இல்லாமையேயாம். யானையானது பெரிய உடம்பும், மிகுந்த வலிமையும், பெரிய தந்தங்களும் உடையதாயிருந்தும், முயற்சி யில்லாமையினாலே புலியைக் கண்டவிடத்து அஞ்சுவதுபோல, சிறந்த பலமுடையவரும் தீவிர முயற்சி யில்லாமையினாலே அற்பரைக் கண்டவிடத்தும் அஞ்சுகின்றனர்.

முயற்சியுடையவரிடத்தில் சீதேவியும், சோம்பேறிகளிடத்தில் மூதேவியும் இருக்கின்றனர் என்பதை மறவாது, தாம் செய்ய எடுத்துக்கொண்ட காரியத்தைச் செய்துமுடிக்கத் தளராது முயற்சிசெய்து வருகின்றவர்தாம் காரியசித்தி பெறுதற்குரியவராவர்; அவர் தலைவிதியையும் வெல்லுதற்குரியவராவர். மார்க்கண்டேய முனிவர் யமனையும் வென்றாரன்றோ? அது எதனால்? அவரது முயற்சியினாலல்லவா? இதனால், தாம் செய்யத்தொடங்கிய காரியத்தை விடாமுயற்சியோடு செய்பவர்க்கு மேன்மை யனைத்தும் உண்டாகும் என்பது நன்றாக விளங்குவதாம்.

நாம் இக்காரியத்தைச் செய்தால் இன்னபயன் உண்டாகுமென்று தீர்மானஞ்செய்துகொண்டு, அக்காரியத்தை விடாமுயற்சியோடு செய்பவர், அதனால் தமக்கு நேரிடுகிற சரீரப்பிரயாசையையும், வயிற்றுப் பசியையும், நித்திரைக் குறைவையும் கவனிப்பாரோ? ஒருபோதும் கவனிக்கவே மாட்டார். அந்நியர் செய்யும் விக்கினங்களைத் தடுத்தும், உலகத்தார் செய்யும் அவமதிப்பைப் பொருட்படுத்தாதும் ஊக்கத்தோடு தாம்செய்ய எடுத்துக்கொண்ட காரியத்தைத் தவறாதும் மறவாதும் செய்து முடிப்பவர்தாம் வீர சிவாஜி முதலானவர்கள்போலத் தலைசிறந்து விளங்குவர்.

துருவன், தன் தந்தையாகிய உத்தானபாதன் இளையமனைவியின் வார்த்தையினால் தன்னைவெறுத்துத் தள்ளியகாலத்தில் என்ன செய்தான்? காட்டிற்குச் சென்று நாரதர் உபதேசப்படி தவஞ்செய்து முடிவில் நாராயணன் அருளால் துருவமண்டலத்தில் நட்சத்திர மாக விளங்கும் பதவியை அல்லவா பெற்றான்? இதனால், முயற்சியுடையார் இகழ்ச்சியடையாதிருப் பதேயன்றிப் பெரும் புகழ்ச்சியு மடைவார் என்பது நன்றாக விளங்குவதாம்.

தாம் செய்யுங் காரியங்களைத் திருத்தமாக விடா முயற்சியோடு செய்பவர்தாம் துருவன் முதலானவர் போன்று மேன்மையெல்லாம் அடைதற்குரியவராவர். பிராணிகளுள் மிகச் சிறியனவாயுள்ள எறும்புகளும், தேனீக்களும், எப்பொழுதும் சுறுசுறுப்பாகச் சோம்ப லின்றி வேலை செய்வதை நாம் அடிக்கடி கவனிப்போ மானால், நாமும் எப்பொழுதும் யாதாவது ஒரு நற்காரி யத்தை விடாமுயற்சியோடு செய்து வருதற்குரியவரா யிருப்போம்; வெயிற்காலத்தில் எறும்புகள் தானி யங்களைச் சேர்ப்பதில் அளவற்ற முயற்சியுடையனவா யிருக்கின்றன; அவ்வாறே தேனீக்களும் புஷ்பங்களி லுள்ள தேனைத் திரட்டிச் சேர்ப்பதில் பெரு முயற்சி யுடையனவா யிருக்கின்றன. சிலந்திப் பூச்சியானது தன் வலையைப் பின்னி முடிப்பதற்குள் அது எத் தனையோ முறை அறுந்துபோகநேரிடினும், அப்பூச்சி விடாமுயற்சிகொண்டு அதனைக்கட்டியே முடித்துவிடு கின்றது. மக்கள் முதலில் எறும்புகள், தேனீக்கள், சிலந்திப் பூச்சிகள் முதலியவற்றினின்றும் முயற்சி இத்தன்மையதென்பதைக் கற்றுக்கொண்டனர் என் பதை நாம் இங்கே யூகித்தறிதல் வேண்டும்.




ராபர்ட் புரூஸூம் சிலந்திப்பூச்சியும்

கி. பி. 13-ம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தையடுத்துள்ள ஸ்காத்லாந்துதேசம், இங்கிலாந்து தேசத்தரசனது வசமாயிருந்தது. ஸ்காத்லாந்துதேசத்தார் அவ்வரசன்கீழ் வாழ மனமில்லாது கலகஞ் செய்யத் தொடங்கினர். அப்போது ஸ்காத்லாந்து தேசத்தில் பிறந்து தேசாபிமானியாயும், பெரிய வீரனுயும், விளங்கிய ராபர்ட் புரூஸ் என்பவன் கலகஞ் செய்தவர்களோடு கலந்துகொண்டு, ஒரு பெருஞ் சேனையைத் திரட்டி, இங்கிலாந்து தேசத்தரசனேடு போர்செய்யச் சென்றான். சென்றவன், எட்டுமுறை போர் செய்தும் வெற்றியடையாது தோற்றுப்போனன். அதனுல், அவன் மனம் உடைந்து காட்டுக்கு ஓடி அங்குள்ள ஒரு மலைக்குகையில் படுத்துக்கொண்டு, “இங்கிலாந்து தேசத்தரசனை வெல்லுவதெப்படி? நமது தேசத்தார் சுதந்தரம் பெறுவது எப்படி?” என்று ஆலோசனை செய்துகொண்டிருந்தான்.

அப்போது, அவன் எதிரே ஒரு சிலந்திப்பூச்சி வலையொன்று பின்னிக்கொண்டிருந்தது. அதை அவன் உற்றுநோக்கிக்கொண்டிருந்தான். அச் சிலந்திப்பூச்சி, தான் பின்னும் வலை பலமுறை அறுந்துபோயும், விடாமுயற்சி செய்து அதைப் பின்னி முடித்துவிட்டது. அதனைக்கண்ட ராபர்ட் புரூஸ், “இதுபோல நாமும் பகைவரை வென்று வெற்றி பெறவேண்டும்” என்று நினைத்துத் தனது நாட்டிற்குச் சென்று மீண்டும் ஒரு சேனையைத் திரட்டி இங்கிலாந்து தேசத்தரசனேடு விடாமற் போர்செய்து முடிவில் பானக்பர்ன் **(Bannockburn)** என்னுமிடத்தில் ஆங்கிலேயவீரர்களை வென்றான். அதனுல், ஸ்காத்லாந்து தேசம் சுதந்தரமடைந்தது என்று அத் தேச சரித்திரம் கூறுகின்றது.

விசுவாமித்திரர் பிரம்மரிஷி ஆனதும், அர்ச்சுனன் பரமசிவனிடத்தினின்றும் பாசுபதாஸ்திரத்தைப் பெற்றதும், ஸர் தி. முத்துசாமி அய்யர் சென்னை ஹைக் கோர்ட்டில் நீதிபதியாயிருக்கும் பதவியைப்பெற்றதும் அவர்கள்செய்த விடாமுயற்சியின் பயனேயாம். சிவாஜி என்பவர் சாதாரணக் குடிகளுள் ஒருவராயிருந்தும், அவர் இந்தியாவில் ஒரு பெரிய மகாராஷ்டிரராஜ்யத்தை ஸ்தாபித்ததற்குக் காரணமாயிருந்தது, அவரிடத்தி லிருந்த விடாமுயற்சியே யல்லவா? இவற்றால், விடா முயற்சி யுடையவருக்கு முடியாதகாரியம் ஒன்றுமில்லை யென்பதும் முயற்சி திருவினையாக்குமென்பதும் நன்கு விளங்குவனவாம்.

---

## 12. தமயந்தி சுயம்வரம்

பரதகண்டமென்னும் நமது இந்துதேசத்தில் முற்காலத்தில் சிறந்து விளங்கிய தேசங்களுள் விதர்ப்ப தேசம் என்பதும் ஒன்றாகும். அத்தேசத்தை யாண்ட அரசர்களுள் வீமன் என்பான் ஒருவன். அவன் மக்கட் பேறில்லாமையால் மிக வருந்தினான்; பிறகு அவன் கடவுள் திருவருளால் தமனகரென்னும் முனிவரது அனுக்கிரகத்தைப்பெற்று நாளடைவில் தமன், தாந்தன், தமனன் என்னும் மூன்று புத்திரர்களையும், தமயந்தி என்னும் ஒரு புத்திரியையும் பெற்றான். தமயந்தி ஏகபுத்திரியானதால் மிக்க செல்வமாக வளர்க்கப்பட்டு விவாகத்திற்குரிய பருவ மடைந்தபோது, இவள் திருமகளோ அல்லது கலைமகளோ அல்லது மலைமகளோ என்று கண்டோர் சொல்லத்தக்க வனப்

பும், கல்வியும், சஞ்சலமற்ற மனதும் உடையவளா யிருந்தாள். அதனால், அவளுடைய புகழ் நாலாப்பக்கங் களிலும் எளிதிற் பரவலாயிற்று.

அதேகாலத்தில் நிடதமென்னும் தேசத்தை, அரிச்சந்திரன் முதலாகச் சொல்லப்படும் சக்கரவர்த்தி கள் எழுவருள் ஒருவனும், வீரசேன மன்னனது புத் திரனுமான நளன் என்பவன் நீதிதவறாமல் ஆண்டுவந் தான். அவன் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம் முத லியவை யெல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவன்; அசுவவித்தையில் நிகரற்றவன்; சூதாட்டத்தில் மிகத் தேர்ந்தவன்; மடைத்தொழிலில் வல்லவன்; போர்க் களத்தில் பகைவரும் போற்றத்தக்க ஆற்றலுடைய வன்; அழகில் திருமாலையும், புத்தியில் பிரகஸ்பதியை யும், ஆண்மையில் அறுமுகக் கடவுளையும் ஒத்தவன். சுருங்கச்சொல்லில் அவன் அக்காலத்திலிருந்த மற் றெல்லா மன்னர்களிலும் மேன்மை பெற்றவனாவன்.

இவ்வாறு இவ்விருவர்களுடைய புகழ் நாடெங்கும் பரவியதனால், நளன் தமயந்தியின் மேன்மையையும், தமயந்தி நளனது மேன்மையையும் அறியலாயினர். அதனால், தமயந்தியினுடைய மனம் நளன்மீதும், நள னுடைய மனம் தமயந்தியின்மீதும் செல்வதாயின. தமயந்தி நளனது வடிவழகைத் தான் பிறரிடத்தில் கேட்டபடி படத்தில் அமையவெழுதி, அதனையே சமயம் நேர்ந்தபோதெல்லாம் பார்த்துக்கொண்டிருப் பாளாயினள். நளனும் தமயந்தியின் வடிவழகைப் பிற ரிடத்துக் கேட்டறிந்தபடி சொப்பனத்திலும் கண்டு வருந்துந் தன்மையனாயிருந்தான்.

இவ்வாறு இருக்கையில், நளன் வேனிற்காலத்தில் ஒருநாள் தனது உல்லாச வனத்தை யடைந்து அங்

குள்ள ஒரு மண்டபத்தில் தங்கி, தமயந்தியை நினைத்துக்கொண்டிருந்தான். அப்போது அவனுக்கெதிரில் இருந்த ஒரு தாமரைத் தடாகத்தில் அன்னப்பறவைகள் வந்திறங்கின. நளன் அவற்றுள் ஒன்றைப் பிடித்து வரும்படி தனக்குக் குற்றேவல் செய்யும் பெண்களுள் ஒருத்திக்குக் கட்டளையிட்டான். அவள் அவ்வாறே சென்று ஓர் அன்னத்தைப் பிடித்துக்கொண்டு வந்து நளனிடத்தில் கொடுத்தாள். நளன் அவ் வன்னம் மிக வருந்திச் சோர்வடைந்தது கண்டு இரக்கமடைந்து, "அன்னமே! உன் நடையையும் இங்குள்ள பெண்களின் நடையையும் ஒப்புநோக்குவதற்காகவே உன்னைப் பிடித்துவரச்செய்தேன். நீ உன் இஷ்டப்படி போகலாம்" என்று கூறி அதனை விட்டுவிட்டான். அவ் வன்னம் அவனது மேன்மைக்குணத்தை நோக்கி வியந்து, அவனுக்கு ஒரு உபகாரம் செய்யவிரும்பி, அவனிடத்துத் தமயந்தியின் வரலாறு அனைத்தையும் எடுத்துரைத்து, "அவளுக்குக் கணவனாதற்குரியவன் நீயே; உனக்கு மனைவியாதற்குரியவள் அவளே" என்று கூறியது. அதுகேட்ட நளன் மகிழ்ச்சியடைந்து, "அன்னமே! அது விஷயமாக நீயே தமயந்தியினிடத்துத் தூதுசென்று வரவேண்டும்" என்று சொன்னான். உடனே அவ் வன்னம் விரைந்துசென்று தமயந்தி பாங்கியர்களோடு விளையாடிக்கொண்டிருக்குமிடத்தையடைந்து, தமயந்தியின் அருகுவந்து நின்றது. தமயந்தி அதனைப் பிடிக்கச் சென்றாள். அது தமயந்தியின் கையில் அகப்படுவதுபோலக் காட்டி வெகுதூரம் அவளை நடத்திக்கொண்டு போய்விட்டது. பிறகு அவ் வன்னம் தமயந்தியிடம், நளனது வரலாற்றை விரித்துக்கூறி, "அவனே உனக்குக் கணவனாகவேண்டும்;



நீயே அவனுக்கு மனைவியாகவேண்டும்" என்று சொல்லியது. அதுகேட்ட தமயந்தி, "அன்னமே! உன் விருப்பத்தின்படி நடந்துகொள்ளச் சித்தமாயிருக்கிறேன். நளச்சக்கரவர்த்திக்கு என் விருப்பத்தை நீ உடனே சென்று தெரிவிப்பாயாக" என்றனள். அன்னமும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு அவளிடத்தில் விடைபெற்று, தன் வரவை எதிர் நோக்கியிருக்கும் நளனிடம் சென்று தமயந்தியின் கருத்தைத் தெரிவித்துப் போய்விட்டது.

இஃது இவ்வாறாக, வீமராசன் தனது அருமைப் புதல்வியாகிய தமயந்திக்குத் திருமணம் முடிக்கக்கருதி, "இற்றைக்கு ஏழாம்நாள் தமயந்தியின் சுயம்வரம் நடத்தப்படும்" என்னும் சுப சமாசாரத்தைத் தூதர்கள் வாயிலாக எல்லாத்தேசத்து அரசர்களுக்கும் அறிவித்தான். அதனையறிந்த அரசர்கள் யாவரும் குறித்த காலத்தில் குண்டினபுரத்தில் வந்து கூடினர். அவர்களுள் நளனும் ஒருவன். தமயந்தியின் சுயம்வரத்தை நாரத மகாமுனிவர் வாயிலாக அறிந்த இந்திரன், யமன், வருணன், அக்கினி என்னும் நால்வரும் தமயந்தியை விவாகம் செய்துகொள்ளும் நோக்கத்தோடு விண்ணுலகத்தை விட்டுக் குண்டினபுரத்திற்கு வருவாராயினர். இவ்வாறு வருகின்றவர்கள், இடைவழியில் நளனது அழகைக்கண்டு வியந்து, தமயந்தி இவனுக்கன்றி நமக்கு மாலையிடமாட்டாள் எனத் தீர்மானித்து அவனிடம் நெருங்கி வந்தனர். அவர்களுள் ஒருவனாகிய இந்திரன் நளனை நோக்கி, "நீ எங்களுக்கு ஒரு உதவி செய்யவேண்டும்" என்று கேட்டான். நளன், "தாங்கள் சொல்வதைச் செய்யக் காத்திருக்கின்றேன்; சொல்லுங்கள்" என்றான். இந்திரன் "நளனே! நீ

தமயந்தியினிடத்திற்குத் தூது சென்று எங்கள் வரவைத் தெரிவிக்க வேண்டும்" என்று கூறினன்.

நளன் எப்போதும் சொன்னசொல் தவருதவனுதலின், அவ்வாறே தமயந்தியினிடத்திற்குத் தூதாகச் செல்லச் சம்மதித்து, "நான் தமயந்தியின் அந்தப்புரத்திற்கு எப்படி செல்லுதல் கூடும்" என்று கேட்டான். இந்திரன், "உன்னைத் தமயந்தி தவிர வேறொருவரும் காணுதபடி உனக்கு வரம் கொடுத்தேன். நீ அவ்விடத்திற்குப் போகலாம்" என்ருன். நளன் உடனே ஒருவரும் காணுதபடி சென்று தமயந்தியிருக்கும் இடத்தையடைந்து அவளெதிரே நின்ருன். தமயந்தி, "காவலைக்கடந்து என் கன்னிமாடத்திற்கு வந்த தாங்கள் யார்? இவ்விடத்திற்கு வந்த காரணம் யாது?" என்ருள். நளன், "மங்கையர்க்கரசியே! நான் நிடததேசத்தரசன்; என் பெயர் நளன் என்பார். நான் தேவர்களின் தூதுவனுக உன்னிடத்திற்கு வந்தேன். அவர்கள், இந்திரனும், வருணனும், யமனும், அக்னியும் ஆவர். அவர்களில் ஒருவரை நீ விவாகம் செய்துகொள்ள வேண்டும். அதனுல், உனக்கு நன்மையனைத்தும் உண்டாகும்" என்ருன். அதுகேட்ட தமயந்தி மிகவும் கலக்கமடைந்து கண்ணீர்விட்டு, "அரசர்க்கரசே! உம்மை மணக்கவிரும்பிய யான் வேறு ஒருவனை மணப்பேனே? நாளையதினம் சுயம்வர மண்டபத்திற்குத் தேவர்கள் உம்மோடு வரட்டும்; பார்க்கலாம்" என்று கூறினள். அதனைக்கேட்ட நளன் வருந்தி இந்திரன் முதலிய தேவர்களிடத்திற்கு வந்து, தமயந்தியின் கருத்தை விளக்கமாகக் கூறினன். அவனேடு மாயமாகச் சென்றுவந்த அத்தேவர்கள், அவனது உயர்குணத்தைக்கண்டு வியந்துபேசி, அவனுக்கு வரங்கள்

கொடுக்கத் தொடங்கினர். இந்திரன், "நீ எங்கு யாகம் செய்தாலும் அங்கு நான் பிரத்தியட்சமாய் வருவேன்; நீ முடிவில் நல்லுலகத்தைப் பெறுவாய்" என்றான். அக்கினி, "நீ விரும்பிய இடத்தில் நெருப்பைப் பெறுவாய்; முடிவில் ஒளி உலகத்தை அடைவாய்" என்றான். வருணன், "நீ வேண்டிய இடத்தில் நல்ல நீரைப் பெறுவாய்; மலர்களையும் பெறுவாய்" என்றான். யமன், "உன் மனம் எப்பொழுதும் தருமத்தில் நிலைபெற்றிருக்கும்; நீ விரும்பிய இடத்தில் உணவைப் பெறுவாய்" என்றான்.

இவ்வாறு வரங்களைப் பெற்ற நளன், "தேவர்களின் அனுக்கிரகத்தால் நமக்குத் தமயந்தி மாலையிடுவாள்" என்னும் நிச்சயங்கொண்டு, வீமன் குறித்த காலத்தில் சுயம்வரமண்டபத்திற்கு அரசர்களோடு வந்திருந்தான். இந்திரன் முதலிய தேவர்களும் நளனது உருவங் கொண்டு அவன் பக்கலில் வந்திருந்தனர்.

வீமராசன், தமயந்தியை மணக்கோலத்தோடு சுயம்வரமண்டபத்திற்கு அழைத்து வரும்படி தமயந்தியின் தோழிப்பெண்களுக்கு உத்தரவு செய்தான். அப்பெண்கள் அந்தப்புரத்திற்குச்சென்று, தமயந்தியின் தாயிடம் உத்தரவு பெற்று, அவளை மணக்கோலத்தோடு சுயம்வரமண்டபத்திற்கு அழைத்துவந்தனர். தமயந்தியின் தோழியர்களுள் ஒருத்தி மணமாலையைக் கையிலேந்தி, தமயந்தியின் அருகே நின்றனள்.

பிறகு, அத்தோழி வீமராசனது உத்தரவின்படி தமயந்தியை அழைத்துக்கொண்டு அரசர்கள் கூடியுள்ள சபையினுட் பிரவேசித்து, அவர்களுள் ஒவ்வொருவரையும் சுட்டிக் காட்டினள். அப்போது அவ்வரசர்களது வரலாறுகளை நன்கு அறிந்த ஒருவர் முறையாக

அவற்றைச் சொல்லிவந்தனர். அவர் அங்ஙனம் சொல்லிக்கொண்டு வரும்போது, தோழி தமயந்தியுடன் நளனுக்கு அருகாக வந்து, ஐவர் நளனுருவமாக இருப்பதையறிந்து ஒன்றும் பேச அறியாது மயங்கி நின்ருள். தமயந்தியும் அதை யறிந்து, "இவர்களுள் உண்மையான நளன் யாவன்? நம்மை விரும்பி வந்த இந்திரன் முதலிய தேவர்கள் நால்வருமே இவ்வாறு நளனுருவங்கொண்டிருக்கின்றனர்போலும்! தேவர்கள் காமரூபிகளல்லவா? இவர்களது மாயையைக் கண்டறியக் கூடியவர் யார்?" என்றெண்ணி, தனது குலதெய்வத்தை மனத்தில் தியானித்து, "யான் வீமராசனது உண்மையான வம்சத்திற் பிறந்த உத்தம கன்னிகையென்பது சத்தியமானுல், முன்பு அன்னப்பட்சியினுல் என்னிடம் சொல்லப்பட்ட நளனுடைய கழுத்தில் எனது பூமாலை விழுதல்வேண்டும்" எனக் கூறிப் பூமாலையை வீசினள். அந்த மணமலர்மாலை உண்மையான நளனுடைய கழுத்தில் விழுந்து, தமயந்தியின் கற்புப் பெருமையைச் சபையிலிருந்த அனைவருக்கும் நன்ருக விளக்கியது.

அப்போது அச் சுயம்வரத்தைக் காணவந்திருந்த தேவர்கள் யாவரும் மலர்மழை பெய்தனர்; அந்தணர்கள் ஆசிகூறினர்; மங்கையர் மங்களம் பாடினர்; மங்கள வாத்தியங்கள் கோஷித்தன.

அப்போது மணமாலையைப்பெற்று மகிழ்வுடனிருக்கும் நளன், தமயந்தியை நோக்கி, "தேவர்கள் முன்னிலையில் என்னை நீ கணவனுக அடைந்தாய்; நான் உன்னைக் கற்புடையவளென்று நம்புகிறேன்; எப்போதும் உன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவனுயிருப்பேன்; உன்னைக் காப்பது என்னுடைய கடமையாகும். என்

உயிருள்ளவளவும் யான் உன்னைவிட்டுப் பிரியேன். இது சத்தியம், சத்தியம்'' என்று இனிமையாகக் கூறினன்.

தமயந்தி, "அரசர்க்கரசே! நான் உங்கள் வார்த்தைக் கிணங்கி நடப்பேன். உங்களைத்தவிர எனக்கு வேறு தெய்வமில்லை; இது சத்தியமாகும்'' என்று இனிமையாய்க்கூறி வணங்கினள்.

அந்தச் சுயம்வரக் காட்சியை உடனிருந்துகண்ட தேவர்கள் நால்வரும் தம்பதிகளுக்கு ஆசிகூறி, விடைபெற்று விண்ணுலகேகினர்.

பிறகு வீமராசன், தமயந்திக்கும் நளனுக்கும் மிகச் சிறப்பாகத் திருமணஞ்செய்தனன். மணமக்களிருவரும் சிலகாலம் அங்கே தங்கியிருந்து, வீமராசனால் வழங்கப்பட்ட ஸ்திரீதனப் பொருள்களுடன் தமது சொந்த இடமாகிய மாவிந்தநகரை யடைந்து, பூவும் மணமும், பாலும் நீரும்போலப் பொருந்தி யினிதுவாழ்ந்திருந்தனர்.

## 13. ஐக்கிய நாணய சங்கம்

தமது சரீர சுகத்தின் பொருட்டும், தர்மத்தின் பொருட்டும் செலவுசெய்ய நேருமிடத்து, பொருளைத் தம் தம் வரவிற் கேற்றவாறு செலவு செய்கின்றவரே கடன்படாது வாழ்தற்குரியவராவர். அவ்வாறு அன்றித் தமது வரவுக்கதிகம் செலவு செய்பவர் கடன் வாங்கத் தலைப்படுகின்றனர். கடன்படாது வாழ்வான் வாழ்க்கையே கண்ணியமான வாழ்க்கையாம் என்பதை அறிந்து நடப்பவர், உலகத்தில் சிலராகவே இருக்கின்றனர். தமது வருவாயைக் கணக்கிடாது அளவுக்கதிகம் செலவுசெய்பவர் கடன்படாது வாழ்வதெங்ஙனம்?

" அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும் "

என்றபடி கடனைக் கொடுக்க வகை யறியாதபோது, அவர் மானமழிந்து மதிகெட்டுத் தாம் வாழும் ஊரை விட்டும் ஓட முயல்கின்றனர். இவ்வாறு கடன்பட்டுக் கெட்டழிகின்றவர் எல்லாநாடுகளிலும் இருக்கின்றனர். அவர்கள் படும்பாட்டை யெல்லாம் நன்றாக ஆராய்ந் தறிந்த ரேய்ப்பீசன் என்னும் ஜெர்மானி தேசத்துக் கனவானொருவர் பத்தொன்பதாவது நூற்றாண்டில் தமது தேசத்தின் ஒரு கிராமத்தில் ஐக்கிய நாணய சங்கம் ஒன்று ஏற்படுத்தினார்.

அச் சங்கத்தின் முக்கிய நோக்கங்களாவன: (1) உழுது பயிர்செய்பவரும் கைத்தொழில் செய்பவரும் வர்த்தகம் செய்பவரும் தமக்குக் கஷ்டம் வந்தகாலத்து, கடும் வட்டிக்குக் கடன்வாங்கிக் கஷ்டப்படாது, குறைந்த வட்டிக்குத் தமதுவருவாய்க்கு ஏற்றவாறு கடன் வாங்கவேண்டும்; (2) பயிர்த்தொழிலும் கைத் தொழிலும் வர்த்தகமும் அபிவிருத்தியாதற்பொருட்டு அவற்றைச் செய்பவருக்குத் தேவையான பணத்தைக் குறைந்த வட்டிக்குக் கடனாகக் கொடுக்கவேண்டும்; (3) ஜனங்களுள் ஒற்றுமையும் பரோபகாரசிந்தையும் பெருகவேண்டும் என்பனவேயாம்.

இச்சங்கத்தின் பயனை ஆராய்ந்தறிந்தவர்கள் தம் தம் ஊர்களில் ஐக்கிய நாணய சங்கத்தை ஸ்தாபித்து, அதனால் பல நன்மைகளைத் தமது சங்கத்தில் சேர்பவர் களுக்குச் செய்துவருகின்றனர். வறுமைப்பிணியால் மிக வாட்டமுற்றிருந்த அயர்லாந்து, டென்மார்க் முதலிய தேசத்தார் ஐக்கிய நாணய சங்கங்களைத் தமது

தேசங்களில் ஸ்தாபித்துத் தமது செல்வ நிலைமையை விருத்திசெய்து வருகின்றனர். இச் சங்கத்தில் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆடவரும் பெண்டிரும் அங்கத்தினராகச் சேரலாம். சங்கத்தில் சேருபவர் பணக்காரராயும் இருக்கலாம்; ஏழையாயும் இருக்கலாம். இச்சங்கத்தில் சேரும் அங்கத்தினர் முக்கியமாக அனுட்டிக்கவேண்டியவை சோற்றவறுமையும் நல்லொழுக்கமுமாகும்.

இத்தகைய சங்கத்தின் நன்மைகளைக் கவனித்தறிந்த நமது அரசாங்கத்தார் 1904-ம் வருஷத்தில் இந்தியாவில் ஐக்கிய நாணய சங்கத்தைச் சட்டமூலமாக ஸ்தாபித்தனர். அவ்வருஷம் முதற்கொண்டு இதுகாறும் நமது தேசத்தில் இச் சங்கங்கள் ஆயிரக்கணக்காகப் பெருகிவருகின்றன.

ஐக்கிய நாணய சங்கத்தில் கடன்வாங்க விருப்பமுள்ளவர் தமது விண்ணப்பத்தில் (1) தமது பெயரையும், (2) தமக்குள்ள அசையும்பொருள் அசையாப் பொருள்களின் விவரத்தையும், (3) தாம் பிறர்க்குக் கொடுக்கவேண்டிய கடன்களின் விவரத்தையும், (4) அக் கடன்களுக் கீடுகாட்டியுள்ள சொத்துக்கள் தவிர மற்றைச் சொத்துக்களின் மதிப்பையும், (5) அச்சொத்தின்மேல் தமக்கு வேண்டிய கடன் இவ்வளவுஎன்பதையும் குறிப்பிட்டு அதை அச்சங்கத்தின் ரிஜிஸ்ட்ராருக்கு (Registrar) அனுப்பவேண்டும். அவர் அதற்குரிய உத்தியோகஸ்தரைக்கொண்டு, அவ் விவரங்களை விசாரித் தறிந்தபிறகு கடன் வாங்குவதற்காகக் காட்டிய சொத்தின் மதிப்பில் எட்டில் ஒரு பாகமே 100-க்கு மாதம் ஏறக்குறைய 12 அணு வட்டிக்குச் சங்கத்திலிருந்து கடன்கொடுக்க ஏற்பாடு செய்வார். அதினின்

றும் அவர்கள் வாங்கியகடனை அவரது வரும்படிக்கேற்ற வாறு சங்கத்தார் சிறிது சிறிதாய் வாங்கிக்கொள்வர்.

இந்த ஐக்கிய நாணய சங்கம் என்னும் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஏழைகளுக்குச் சொற்ப வட்டிக்குக் கடனாகக் கொடுக்கப்படும் பணம் நமது தேசத்திலுள்ள தனவந்தர்களும் மற்றவர்களும் அச்சங்கத்தில் சொற்ப வட்டிக்காகப் போட்டுவைத்துள்ள பணமேயாம். இந்தச் சங்கம் மூலசங்கம் என்றும் கிளைச்சங்கம் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. கிளைச் சங்கங்களின் வேலைகளெல்லாம் மூலசங்கத்தின் வேலையை அனுசரித்தே இருக்கும். இச் சங்கத்தி லிருந்து நிலஅடமானம் வீடுஅடமானம் முதலிய வற்றின்மீதும், தகுந்த கனவான்களின் ஜாமீன்மீதும், கடன் வாங்குவோரது பொருளுடைமைக்கு ஏற்றவாறு கடன் கொடுத்துவரப்படுகின்றது. ஐக்கிய நாணய சங்கத்திலிருந்து கடன் வாங்குவோருக்குப் பத்திரச் செலவும், ரிஜிஸ்டர் செலவும் இல்லை.

ஐக்கிய நாணய சங்கத்தார் கிராமவாசிகளுக்குப் பயிரிடும் தொழிலுக்குவேண்டிய பொருள்களைக் கூடிய வரைக்கும் உதவிசெய்து வருகின்றனர்; விளைநிலத்திற் குப் போடவேண்டிய எருவகைகளைக் குறைந்த விலைக்கு மொத்தமாகவாங்கி விவசாயிகளுக்கு நயமான விலைக்குக் கொடுத் துதவுகின்றனர்; வீடு கட்டுவதற்குவேண்டிய சாமான்களை மொத்தமாக வாங்கிச் சொற்பலாபம் வைத் துக்கொண்டு விற்கின்றனர்; உயர்தரக் கலப்பைகளை வாங்கிவைத்துக்கொண்டு குறைந்த வாடகைக்குக் கொடு க்கின்றனர்; சங்கத்தில் அங்கத்தினராய்ச் சேரும் கிராமவாசிகளுக்கு அவர்கள் அதில் சிறிது சிறிதாகச் சேர்த்துவைக்கும் பணம் எவ்வளவாயிருப்பினும் அதற்

கும் வட்டிகொடுத்து வருகின்றனர்; கடன் வாங்கியவர் திரும்பக் கொடுக்கும் பொருள் சிறிது சிறிதாயிருப்பினும் அதனை வாங்கிக்கொள்வர்; வாங்கிக்கொண்ட பொருளுக்கேற்றவாறு வட்டியைக் கழித்துக்கொள்வர்; கிராமத்தில்விளையும் தானியங்களை வாங்கிப் பத்திரமாய் வைத்திருந்து, அவற்றைத்தகுந்த விலைக்கு விற்றுக் கொடுத்து உதவுவர்; இப்படிச் செய்வதேயல்லாமல் கிராமத்தில் அடிக்கடி கூட்டங்கூடிக் கிராம அபிவிருத்திக்கு வேண்டியவற்றை யெல்லாம் செய்ய யோசித்து வருவர்; செய்யக்கூடியவெல்லாம் செய்தும்வருவர். அதனால், அச் சங்கம் கிராமத்தில் ஒற்றுமை ஏற்படுவதற்கும், பயிரிடும்தொழில் அபிவிருத்தியாவதற்கும், கடும்வட்டிக்குக் கடன்வாங்கி வருந்தாதிருப்பதற்கும் சிறந்த காரணமாயிருக்கின்றது.

ஐரோப்பா கண்டத்திலுள்ள இங்கிலாந்து, ஜெர்மனி, ஹாலண்டு முதலிய தேசங்களில் அரசாங்கத்தாரது உத்தரவின்மீது ஏற்பட்டுள்ள ஐக்கிய நாணய சங்கங்கள் நல்ல வேலை செய்துவருகின்றன. அதனால், அங்குள்ள ஏழைமக்கள் சிறந்த பயனைப் பெற்று வருகின்றனர். ஐக்கிய நாணய சங்கத்தில் சேருகின்றவர் முதலில் ஒரு தொகையை மூலதனமாகக் கட்ட வேண்டும். அச் சங்கத்தில் அங்கத்தினராய்ச் சேர்ந்திருப்பவர் அச் சங்கத்தார் ஏற்படுத்தியுள்ள கடைகளிலேயே தமக்குவேண்டிய பொருள்களை யெல்லாம் வாங்கிக் கொள்ளவேண்டும். ஒவ்வொருவருஷ முடிவிலும் அவர்கள் வாங்கிய தொகைக்குத் தக்கபடி அவ்வருஷத்தில் வந்த இலாபம் அவர்களுக்குச் சங்கத்தாரால் பங்கிட்டுக் கொடுக்கப்படும்.

விவசாயிகளும் கைத்தொழிலாளிகளும் வருவாய் குறைவாக உள்ளவர்களும் தமது வருவாய்க்கேற்றபடி சிக்கனமாகப் பொருளைச் செலவு செய்யவேண்டும்; அவசியம் நேரிட்டபோது கடன்வாங்க வேண்டிவருமானல், தமது வருவாயில் மிச்சமாகும் பொருளின் அளவாகக் கடன்வாங்கவேண்டும் என்பது இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். ஐக்கிய நாணய சங்கங்களில் அங்கத்தினராய்ச் சேருகின்றவர் அச் சங்கங்களில் நம்பிக்கையுடையவராய் இருக்கவேண்டும்.

ஐரோப்பா கண்டத்திலுள்ள தேசங்களில் டென்மார்க்கு (Denmark) என்பதும் ஒன்ருகும். அதன் ஜனத்தொகை ஏறக்குறைய 32 இலட்சமாகும். அத் தேசம் ஒரு காலத்தில் பொருளாதார நிலைமையில் மிகத் தாழ்வுற்றிருந்தது; இப்பொழுதோ, ஐக்கிய நாணய சங்கத்தின் பயனல் பொருளாதார நிலைமையில் மிகு செழிப்புற்றிருக்கின்றது. இத் தேசத்தார் தமக்குவேண்டிய உணவுப் பொருளாகிய கோதுமையை அமெரிக்காவிலிருந்து கப்பல் கப்பலாகத் தருவித்துக் கொண்டிருந்தார்கள். அதனல், அத்தேசத்துப் பணம் அமெரிக்காவிற்கு ஏராளமாகச் செல்வதை அரசாங்கத்தாரும் குடிகளும் கவனித்து, தமது தேசத்துப் பணம் தமது தேசத்திலேயே இருக்கவேண்டுமென்னும் நோக்கத்தோடு, தேசமுழுவதும் ஐக்கிய நாணய சங்கங்களை ஸ்தாபித்து அவற்றின் மூலமாய் விவசாயிகளுக்கு வேண்டிய விதைகள், எருக்கள், உழவுக்கருவிகள் முதலியவற்றை நியாயமானவிலைக்குக் கடனகக் கொடுக்கத் தலைப்பட்டனர். அதனல், கோதுமைப் பயிர் அங்கேயே அதிகமாக அபிவிருத்தியடைந்தது. அதனல், அமெரிக்காவிற்குச் சென்று

கொண்டிருந்த பணம் டென்மார்க்கிலேயே சுழன்று விருத்தியடைய லாயிற்று.

அத்தேசத்தில் பசுக்களின் பாலைத் தயிராக்கிக் கடைந்து வெண்ணெயெடுக்கும் ஐக்கிய நாணய சங்கங்கள், ஏழை விவசாயிகளுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்து அக்கடனைச் சிறிது சிறிதாக வாங்கிக் கொள்ளும் ஐக்கிய நாணய சங்கங்கள், ஆடு, மாடு, பன்றி, கோழி, வாத்து முதலியவற்றை வளர்த்து அவை காரணமாகப் பணத்தை அபிவிருத்தி செய்யும் ஐக்கிய நாணய சங்கங்கள் எனப் பலவகைச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

அத்தேசத்திலுள்ள வித்தியாசாலைகளில் வாசிக்கும் மாணவர்க்குப் போதகாசிரியர்கள் ஐக்கிய நாணய சங்கத்தால் உண்டாகும் பயனைப்பற்றி அடிக்கடி போதித்து வருகின்றனர். இந்நூற்றாண்டில் நடைபெற்ற ஐரோப்பா மகாயுத்தம் முடிவுபெற்றபிறகு ஜெர்மன்தேசத்து மாணவர் ஐக்கிய நாணய சங்கங்களை ஸ்தாபித்துக்கொண்டு, உடல் உறுதி பெறுதற்குரிய பயிற்சிகளையும் பௌதிகசாஸ்திர ஆராய்ச்சிகளையும் தேசத்தைப் பாதுகாப்பதற்குரிய கருவிகளையும் செய்து வருகின்றனர்; தமக்கு வேண்டிய உணவுகளையும் உடைகளையும் பிறவற்றையும் ஐக்கிய நாணய சங்கங்களின் மூலமாகவே பெற்றுவருகின்றனர். இங்ஙனம் செய்துவருவதால் அத்தேசத்தில் ஒற்றுமையும் செல்வமும் அதிகப்பட்டுவருகின்றன.

ஐக்கிய நாணய சங்கத்தில் அங்கத்தினராகச் சேர விரும்புகின்றவர் அச் சங்கத்தாரிடமிருந்து விண்ணப்பப் பத்திரத்தை அதற்குரியவிலைகொடுத்து வாங்கி, அதில் குறித்துள்ளபடி தம்முடைய பெயர், தமது தகப்பனு

ருடைய பெயர், கடனுக்காக ஈடுகாட்டும் சொத்துக்களின் விவரம், அவை இருக்குமிடம் முதலியவற்றைக் கிரமமாக எழுதி அச்சங்கத்தின் நிர்வாகி (Manager) இடத்தில் கொடுக்கவேண்டும். பிறகு அச்சங்கத்தின் நிர்வாக சபையார் தங்களுடைய மாதாந்தர சபையில் அந்த விண்ணப்பம் ஆமோதிக்கப்படுமாயின், அவ்விண்ணப்பதாரரை அங்கத்தினருள் ஒருவராகச் சேர்த்துக் கொள்ளுவர். அவர் சேரும்பொழுது நிர்வாக சபையார் குறித்த தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் தமது கட்டணத்தொகையைச் செலுத்தவேண்டும்; செலுத்திய பிறகே, சங்கத்தின் புஸ்தகத்தில் அவர் பெயர் பதிவு செய்துகொள்ளப்படும்.

கிராமங்களிலுள்ளவர் தமது கிராமத்தில் ஐக்கிய நாணய சங்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமாயின், அவர்கள் ஒன்றுகூடி விண்ணப்பம் ஒன்று எழுதி ஐக்கிய நாணய சங்கத்தின் அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும். அதிகாரிகள் அவ் விண்ணப்பத்தைக் கவனித்து, தமது சங்கத்தின் உத்தியோகஸ்தருள் ஒருவரை அந்த கிராமத்திற்கு அனுப்புவர். அவர் சென்று கிராமவாசிகளது நிலைமையை நன்றாகவிசாரித்தறிந்து, ஐக்கிய நாணய சங்கம் ஸ்தாபிப்பதற்கு அக்கிராமம் தகுதியுடையதாயிருந்தால், அவ்விஷயத்தை அதிகாரிகளுக்குத் தெரிவிப்பார். அதன் பிறகே அதிகாரிகளால் ஐக்கிய நாணய சங்கம் அங்கு ஸ்தாபிக்கப்படும்.

கிராமங்களில் ஏற்படும் ஐக்கிய நாணய சங்கங்களுள் ஒவ்வொரு சங்கத்திலும் 10-க்குக் குறையாமல் அங்கத்தினர் இருக்கவேண்டும். அவ் வங்கத்தினர் தம்முள் ஐவரைப் பஞ்சாயத்தாராகத் தேர்ந்தெடுத்துக் கொள்வர். அந்த ஐவரும் தம்முள் ஒருவரைக் காரிய

தரிசியாகவும் மற்றொருவரைத் தலைவராகவும் தேர்ந்தெடுத்துக்கொண்டு தாம் செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் ஒழுங்காகச் செய்துவருவர். ஒவ்வொரு வருஷ முடிவிலும் தாம் செய்துமுடித்த வேலைகளைப்பற்றிய கணக்கைச் சங்கத்தின் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துவருவர்.

இங்ஙனம் வேலை செய்துவரும் 10 அல்லது 15 சங்கங்கள் சேர்ந்தது ஒரு யூனியனாகும். ஒவ்வொரு யூனியனிலும் ஐந்து டைரக்டர்கள் (Directors) இருப்பர். ஒவ்வொரு யூனியனிலும் அதைச் சேர்ந்துள்ள சங்கங்களின் வேலையை மேற்பார்வையிட ஒருவர் நியமிக்கப்படுவர். எல்லாச் சங்கங்களுக்கும் வேண்டும் போது திரவிய சகாயம் செய்ய, அச் சங்கங்கள் உள்ள ஜில்லாவில் மத்தியபாங் (Central Bank) ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

யூனியன்களைச் சீர்படுத்த (District Federation) ஜில்லா பிடரேஷனும், ஒரு மாகாணத்திலுள்ள சங்கங்களுக்காக ஒரு ரிஜிஸ்ட்ராரும், ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு உதவி ரிஜிஸ்ட்ராரும், சங்கங்களை மேற்பார்வையிட்டுவர இன்ஸ்பெக்டர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் எல்லாரும் அரசாங்கத்து உத்தியோகஸ்தர்களே யாவர். இவ்வாறு நடைபெற்று வரும் ஐக்கிய நாணய சங்கங்களால் கிராமவாசிகளும் மற்றவர்களும் சிறந்த பயனைப்பெற்று வருகின்றனர்.

---

எத்தால் வாழலாம்?
ஒத்தால் வாழலாம்.

## 14. அருமருந்து

அருள்வடி வான மருந்து—நம்முள்
அற்புதமாக வமர்ந்த மருந்து
இருளற வோங்கு மருந்து—அன்பர்க்
கின்புரு வாக விருந்த மருந்து.

பிறப்பை யொழிக்கு மருந்து—யார்க்கும்
பேசப் படாத பெரிய மருந்து
இறப்பைத் தவிர்க்கு மருந்து—என்னுள்
என்று மதுரித் தினிக்கு மருந்து.

புத்தமு தாகு மருந்து—பார்த்த
போதே பிணிகளைப் போக்கு மருந்து
பத்த ரருந்து மருந்து—அநு
பானமுந் தானும் பரம மருந்து.

சேத ப்படாத மருந்து—உண்டால்
தேன்போ லினிக்குந் தேவிட்டா மருந்து
பேதப்ப டாத மருந்து—மலைப்
பெண்ணிடங் கொண்ட பெரிய மருந்து.

புண்ணியர்க் கான மருந்து—பரி
பூரண மாகப் பொருந்து மருந்து
எண்ணிய வின்ப மருந்து—எம
தெண்ணமெல் லாமுடித் திட்ட மருந்து.

அளவைக் கடந்த மருந்து—யார்க்கும்
அருமை யருமை யருமை மருந்து
உளவிற் கிடைக்கு மருந்து—ஒன்றும்
ஒப்புயர் வில்லா துயர்ந்த மருந்து.

—இராமலிங்க சுவாமிகள்.

## 15. கோலார்த் தங்கச்சுரங்கம்

உலோகங்களுள் மிகச் சிறந்ததாக மக்களால் மதிக்கப்பட்டு வருவது தங்கமாம். தங்கம், பொன், சுவர்ணம் என்பன ஒரு பொருள் தரும் சொற்களாம். தென் ஆப்பிரிக்காவிலுள்ள டிரான்ஸ்வால், ரொடீஷியா நாடுகளிலும் ஆஸ்திரேலியா கண்டத்திலும் அமெரிக்கா கண்டத்திலுள்ள கானடா தேசத்திலும் இந்தியா முதலிய தேசங்களிலும் தங்கம் மிகுதியாகக் கிடைக்கின்றது. வருஷந்தோறும் ஏறக்குறைய 197 இலட்சம் அவுன்ஸ் எடையுள்ள தங்கம் உலகத்திலே சுரங்கத்தினின்றும் வெட்டியெடுக்கப்படுகிறதென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. டிரான்ஸ்வால் நாட்டில் மாத்திரம் சுமார் 103 இலட்சம் அவுன்ஸ் எடையுள்ள தங்கம் சுரங்கத்தினின்றும் எடுக்கப்படுகின்றதாம். சற்றேறக்குறைய மூன்று பவுன் எடையுள்ளது ஒரு அவுன்ஸாம்.

இந்தியாவில் கோலாரிலும், அனந்தப்பூரிலும், பஞ்சாப்பிலும், பர்மாவிலுள்ள வடசிண்டுவிலும் சுரங்கங்களினின்றும் பொன் எடுக்கப்பட்டுவருகின்றது. இந்தியாவில் கிடைக்கும் தங்கத்தில் 100-க்கு 99 பங்குத் தங்கம் கோலாரிலேயே கிடைக்கின்றது. அதனால், கோலார்த் தங்கச்சுரங்கம் இந்தியாவிலுள்ள தங்கச் சுரங்கங்களில் மிகச் சிறந்ததென்று மதிக்கப்பட்டுவருகின்றது.

கோலார் என்பது இந்தியாவிலுள்ள புராதனமான க்ஷேத்திரங்கள் பத்துள் ஒன்றாகும். இவ்விடத்தில் இராமபிரான் இலங்கேசனைக்கொன்று சீதா

பிராட்டியாரை மீட்டுக்கொண்டு அயோத்திக்குத் திரும்பும் வழியில், ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தாரென்பது புராண வரலாறும். அன்றியும் இங்கு வால்மீகி முனிவர் குசலவர்களுக்கு வித்தியாப்பியாசம் செய்வித்தனர் என்று ஸ்தலபுராணம் கூறுகின்றது.

பண்டைக்காலத்தில் இப்பிரதேசம் பல்லவராஜ்யத்தைச் சேர்ந்ததென்றும், பிறகு அவர்களைச் சோழர்கள் வென்று கோலார் நகரத்தை ஸ்தாபித்தனரென்றும் தேச சரித்திரக்காரர் கூறுகின்றனர். சோழர்களுக்குப் பிறகு பல்லாலா (Ballala) வம்சத்தரசர்களும், கி. பி. 14-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விஜயநகரத்தரசர்களும் கோலாரை ஆண்டுவந்தனர். சிலகாலம் கழிந்த பின்பு பிஜப்பூரை ஆண்டுவந்த முகம்மதிய மன்னன், சிவாஜியின் தந்தையாகிய ஷாஜியின் தலைமையின்கீழ் ஒரு படையை அனுப்பிக் கோலாரைக் கைப்பற்றினன். பிறகு, ஷாஜி தனக்கு அதை ஊழியமானியமாகப் பெற்று, அதைத் தனது இரண்டாவது மகனை வெங்கோஜிக்கு அளித்தான். அது வெங்கோஜியினிடத்திருந்து மொகலாயமன்னர்கள் வசமாய், பெடே முகம்மத் (Fateh Muhammad) என்பவனால் ஆண்டுவரப்பட்டது; இவனுக்குப்பின் இவனது மகன் ஐதராலியாலும், ஐதராலியின் மகன் திப்பு சுல்தானாலும் ஆண்டுவரப்பட்டது. 1791-ம் வருஷத்தில் ஆங்கில அரசாங்கத்தார் திப்புவைப் போரில் வென்றனர்; பிறகு இப்பொழுது மைசூர் ராஜ்யமாக விளங்கும் நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டு, அவற்றை முன் ஆண்டுவந்த கௌடர் சந்ததியைச் சேர்ந்த கிருஷ்ணதேவராய உடையாருக்குக் கொடுத்தனர். அவரது வம்சத்தினரே இன்றைக்கும் மைசூர் ராஜ்யத்தை ஆண்டுவருகின்றனர்.

இந்த நாடுகளிலொன்ருகும் கோலார் என்னும் ஜில்லா. அதனுல், இது மைசூர்ராஜ்யத்தைச் சேர்ந்ததாகும். கோலார் என்பது மைசூர் ராஜ்யத்தின் கிழக்குப்பக்கத்திலுள்ள ஒரு ஜில்லாவாம். இது கடலின் நீர் மட்டத்திற்குச் சுமார் 2500 அடி உயரத்தில் இருக்கின்றது. இங்குள்ள நிலங்கள் பெரும்பாலும் பாறைகளாக இருக்கின்றன.

கோலாரிலுள்ள தங்கச் சுரங்கத்திற்காகவே ஒரு இருப்புப்பாதை போடப்பட்டிருக்கின்றது. அதன் நீளம் 10 மைலாகும். இப்பாதை, சென்னை-பெங்களூர் இருப்புப்பாதையில், சென்னையிலிருந்து 178-ம் மைலிலுள்ள பௌரிங்பேட்டை ஜங்ஷனிலிருந்து பிரிகின்றது. கோலார்த் தங்கச்சுரங்கம், இந்த இருப்புப்பாதையின் முதலாவது ஸ்டேஷனுன நைன்-ரீவ்ஸ் (Nine-reefs) என்னுமிடத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. இந்த ஸ்டேஷனுக்கும் பௌரிங்பேட்டை ஸ்டேஷனுக்கும் உள்ள தூரம் ஐந்து மைலாம். 6-வது மைலில் கொரமாண்டல், 7-வது மைலில் ஊர்காம், 9-வது மைலில் சாம்பியன், 10-வது மைலில் மாரிகுப்பம் என்னும் நான்கு ஸ்டேஷன்கள் நைன்-ரீவ்ஸ் ஸ்டேஷனிலிருந்து முறையாக இருக்கின்றன.

மேற்கூறிய ஐந்து ஸ்டேஷன்களிலும் ஊர்காம் என்னும் ஸ்டேஷனே மிக முக்கியமானதாம். அங்கே கருங்கல்லும், சல்லியும், பாறையுந்தவிர மற்றொன்றும் இல்லையாம். வேலைக்காரர் அங்கே தரைமட்டத்திலிருந்து 4000 அடிக்குக் குறையாமல் கீழேயிறங்கித் தங்கம் வெட்டியெடுக்கின்றனர். பூமியின் மேல் பக்கத்திலிருந்து சுரங்கத்தின் அடிவாரம் வரைக்கும் போய்வருதற்கு இரும்புத் தகட்டாலாகிய கூடுகள்

அமைக்கப்பட்டிருக்கின்றன. அக்கூடுகள் இரும்பு வடத்தின் உதவியால் கீழே இறங்குகின்றன. அக் கூடுகளின் பக்கங்களில் காற்ரேட்டத்திற்காகப் பல துவாரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோலார்த் தங்கச்சுரங்கத்தின் வழி நேர் செங்குத்தாகக் கீழே செல்லுகின்றது. தங்கம் வெட்டியெடுப்போர், முதலில் தரையிலிருந்து 100 அடியளவு செங்குத்தாக வெட்டிக் கொண்டுபோய், அங்கேயிருந்து நாலாப் பக்கங்களிலும் குடைந்து, பக்கங்களில் காணப்படும் தங்கம் கலந்த பாறைகளைப் பிளந்து சல்லிகளாக்கி அவற்றை மேலே அனுப்புவர்; அவ்விடங்களில் தங்கம் சேகரிக்கும் வேலை முடிந்தபிறகு மறுபடியும் 100 அடியளவு கீழே போகிருர்கள். அவர்கள் கீழே போகப்போக, மேலே குடைந்துள்ள பாகங்கள் மூடிவிடப்படும். ஊர்காமி லுள்ள தங்கச் சுரங்கத்தில் இவ்விதம் 60 ஸ்தலங்கள் இருக்கின்றனவாம்.

சுரங்கத்தினுள் போகப்போகக் காற்று மிகவும் உஷ்ணமாயிருக்கின்றது. காற்ரேட்டம் உண்டாக ஆங் காங்குக் காற்ருடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுரங்கத்தினுள்ளே இருக்கும் பாதைகள், குறுகலாயும் கரடுமுரடான பாறைகள் உடையனவாயுமிருக்கின்றன. பாதைகளின் இடையே சிற்சில இடங்களில் பாறைகள் தொங்கிக்கொண்டும் வேறு சில இடங்களில் நீட்டிக் கொண்டும் இருக்கின்றன. அதனுல், அங்குச் செல்லு கிறவர்கள் பக்கங்களை நன்கு கவனித்துச் செல்லவேண் டும். அங்கு வேலை செய்பவர்கள் மெழுகுவத்தியின் உதவியாலேயே வேலைசெய்ய வேண்டியவராயிருக்கின் றனர். தங்கம் வெட்டி யெடுக்கும் வேலை, இப்போது பூமிமட்டத்திலிருந்து சுமார் நாலாயிரத்து முந்நூறு

அடிக்குக் கீழேயே செய்து வரப்படுகின்றது. அங்கு வேலை செய்பவர்கள் தமது கையிலுள்ள இரும்புத் தமர்களால் பாறைகளில் துவாரம்செய்து அதில் வெடிமருந்து வைத்துத் தூரத்திலிருந்து கொண்டு அம்மருந்துக்குத் தீ வைக்கின்றனர்; அதனால், அப் பாறைகள் வெடித்த பிறகு பிளவுப் பாகங்களில் தங்கத்தூள்கலந்து காணப்படும் கற்களைச் சல்லி களாக உடைத்து கூடைகளில் வாரி டிராலிகளில் போட்டு மேலே கொண்டுபோகின்றனர். அவற் றினின்றும் தங்கம் எடுக்கும் வேலைகளெல்லாம் சுரங் கத்திற்கு மேலேயே நடக்கின்றன. சுரங்கத்துள் இரவு பகல் என்னும் வேறுபாடேயில்லை. இரவு பகல் 24 மணி நேரமும் அங்கே வேலை நடக்கின்றது. சுரங்கத்தி லிறங்கி வேலை செய்பவர்கள் 8 மணிநேர அளவே வேலை செய்வர்; பிறகு மேலே வந்துவிடுவர். அப்பால் வேறு கூலியாட்கள் சுரங்கத்திற்குள் இறங்கி வேலை செய்வர். அங்கு வேலைசெய்பவர் இவ்விதம் ஒவ்வொரு நாளும் மூன்று முறை மாறிக்கொண்டே வருகின்றனர்.

தங்கத்தூள் காணப்படும் சல்லிகளினின்றும் தங்க மானது யந்திரங்களின் உதவியால் பிரித்தெடுக்கப் படுகின்றது; இப்படிப் பிரித்தெடுக்கப்படும் அறை சுமார் 100 அடிநீளமும் 40 அடிஅகலமு முள்ளது. இந்த அறை வெகு சாக்கிரதையாகப் பாதுகாக்கப்படுகிறது. வேலைக்காரர் தங்கம் கலந்த சல்லிகளை மின்சாரசத்தி கொண்டு இரும்புலக்கைகளால் நன்றாகப் பொடிசெய்து, அப்பொடியைத் தண்ணீரில் அலசுகிறார்கள். தங்கம் கற் பொடியைவிட அதிக கனமானபடியால், கற்பொடி மாத்திரம் நீருடன் கலந்து ஓடிவிடுகிறது. பிறகு அவர் கள் அடியிற்றங்கிய தங்கத்தூளைப் பாதரஸத்தில்

கரைத்து, அந்தக் கலப்பு வஸ்துவைச் சுமார் 15, 20 தினங்கள் வைத்திருப்பர்; அதனால், தங்கம் கீழே தங்கிவிடும். அதை யெடுத்துக் காய்ச்சி மின்சார சத்தியால் சுத்தஞ் செய்து, தங்கத்தையும் பாதரஸத்தையும் தனித்தனியாகப் பிரித்தெடுக்கிறார்கள். இவ்விதமாகத் தண்ணீரில் கரைத்த சல்லியிலுள்ள தங்கத்தில் 100-க்கு 60 பாகம் பிரித்தெடுக்கப்படுகிறது. பாக்கியுள்ள தங்கத்தைப் பிரித்தெடுக்க அவர்கள் அந்தத் தண்ணீரை முரட்டுக் கம்பளியின்மேல் ஓடும்படி செய்கிறார்கள்; கனமான தங்கத்தூள் கம்பளியின் இடுக்குகளில் தங்கிவிடுகின்றது. பிறகு, பொட்டாஷியம் சயனைடு (Potassium Cyanide) என்னும் திராவகம் நிறைந்த தொட்டியில் அந்தக் கம்பளிகளை நனைப்பர்; அதனால், அவற்றின் இடுக்குகளுள் அகப்பட்டிருக்கும் தங்கத்தூள் திராவகத்தில் கரைந்து விடுகிறது. பின்பு திராவகத்திலிருந்து தங்கத்தைப் பிரித்தெடுக்கிறார்கள்; இப்படிச் செய்வதால், பாக்கியுள்ள 40 பங்கில் பாதிக்குமேல் தங்கம் கிடைத்துவிடும். இன்னமும் மிச்சமாயுள்ள சுமார் 20 பங்குத் தங்கத்தையும் பிரிப்பதற்காக அந்தத் தண்ணீரைக் காந்தத்தகடு பதித்த வாய்க்கால் வழியாக ஓடச் செய்கிறார்கள்; அப்போது அத்தண்ணீரில் கலந்துள்ள இரும்புத்தூள் காந்தத்தால் பிடிக்கப்பட்டுப்போம்; போகவே, தங்கத்தூளும் மணலும் நீருடன் கலந்து ஓடி விடுகின்றன. இந்தத் தண்ணீரை முன்போலவே பொட்டாஷியம்சயனைடு உள்ள பெருந்தொட்டிகளுள் கொண்டுவந்து சேர்த்து யந்திரத்தால் நன்றாகக் கலக்குவார்கள்; அப்பொழுது தங்கத்தூள் திராவகத்தில் கரைந்துவிடும். பிறகு, அந்த நீரை அழுத்தமான துணிப்பைகளில் விட்டு வடிகட்டி மணலைப் பிரித்து

வெளியே கொட்டிவிடுவார்கள்; திராவகத்தில் கரைந்த தங்கத்தை மின்சார சத்தியால் பிரித்தெடுக்கிறார்கள். இவ்விதம் மிச்சத்தங்கமும் பிரித்தெடுக்கப்படுகின்றது.

அந்தத் தங்கச் சுரங்கங்களின் வெளியே, தங்கத்தைப் பிரித்தெடுத்துக்கொண்டு பல வருஷக்கணக்காகக் கொட்டிய மணல் இப்போது ஒரு பெரிய குன்று போலக் காணப்படுகின்றது. தங்கத்தூள் கலந்த ஒரு டன் சல்லிகளிலிருந்து ஒரு அவுன்ஸ் தங்கமே கிடைக்கின்றது. 1905-ம் வருஷத்தில் அச் சுரங்கத்தினின்றும் 616,758 அவுன்ஸ் தங்கம் கிடைத்ததாம். இதற்குமுன் அவ்வளவு தங்கம் அச் சுரங்கத்தில் கிடைத்ததில்லையாம். அச் சுரங்கவேலைமுழுதும் ஒரு ஐரோப்பிய கம்பெனியாரால் மைசூர் அரசாங்கத்தின் அனுமதியின் மீது நடத்தப்பட்டுவருகின்றது.

அச் சுரங்கத்தில் நடக்கும் வேலைக்கு வேண்டிய மின்சாரவிசை முழுவதும் சிவசமுத்திரத்தின் நீர் வீழ்ச்சியினின்றும் கொண்டுவரப்படுகின்றது. இதற்காக அந்த ஐரோப்பிய கம்பெனியார் மைசூர் அரசாங்கத்திற்கு வருஷந்தோறும் ஏறக்குறைய 80 லட்சம் ரூபாய் கொடுத்துவருகின்றனர்; இதுதவிர 20 லட்சம் ரூபாய் கப்பமாகவும் (Royalty) கொடுக்கின்றனர். அச் சுரங்கத்தில் சுமார் 80,000 ஆள்கள் வேலைசெய்கின்றனர். கோலார்த் தங்கச்சுரங்கத்தின் சம்பந்தமாக மைசூர் அரசாங்கத்திற்கு வருஷந்தோறும் கோடிரூபாய் கிடைத்து வருகின்றது.

## 16. அக்பர்

மொகலாய வம்சத்திற்கு மூலபுருஷராகிய பாபர் சக்கரவர்த்தி டில்லியில் பாதுஷாவாக இருந்து அரசாண்ட காலத்திலே இந்துதேசத்தில் ஐந்து பெரிய மகம்மதிய ராஜ்யங்களும், பத்து இந்து ராஜ்யங்களும், வேறு பல சிறிய ராஜ்யங்களும் இருந்தன. அதனால், இந்து தேசத்தில் அடிக்கடி பல யுத்தங்கள் நடந்துவந்தன. இவ்விதம் நடந்த யுத்தமொன்றில் பாபர் சக்கரவர்த்தியின் மகனான ஹுமாயூன் தோல்வியடைந்து, தன் நாட்டைவிட்டோடி அலைந்து சில காலம் திரிந்தான். அவன் ஹமீதாபீகம் என்னும் ஒருத்தியை விவாகஞ்செய்துகொண்டு, பாரசீகத்துக்குச் செல்லும்போது, அமரக்கோட்டையில் 1542-ம் வருஷம் நவம்பர் மாதம் 23-ம் தேதியன்று அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைதான் பிற்காலத்தில் அக்பர் சக்கரவர்த்தி என்று பிரசித்தி பெற்று விளங்கியது.

ஹுமாயூன் பிறகு பாரஸீகதேசத் தரசனது சேனைகளைச் சேர்த்துக்கொண்டு இந்தியாவிற்கு வந்து, அப்போது அரசாண்டிருந்த சிக்கந்தர்ஷா என்னும் டில்லி மன்னனைப் போரில்வென்று, தன் ராஜ்யத்தை மீண்டும் கைப்பற்றிக்கொண்டான்; கைப்பற்றிக்கொண்ட சில மாதங்களுக்குப் பின் அவன் அரண்மனையில் மெத்தைப் படிக்கட்டு வழியாய் இறங்கி வரும்போது கால்தவறிக் கீழேவிழுந்து இறந்து போனான். அப்போது, அக்பருக்கு வயது பதிமூன்றும். அதனால், அவரது அத்தையின் புத்திரனும் சேனாதிபதியுமாயிருந்த பைராம்கான் என்பவன் பிரதி

நிதியாயிருந்து ராஜ்யகாரியங்களை நடத்திவந்தான். அக்பரது தந்தையாகிய ஹுமாயூன் ராஜ்யத்தை விட்டு நீண்டகாலம் அலைந்து திரிந்தமையால், அவருக்கு முறையாய்க் கல்வி கற்பதற்குச் சமயம் நேரிடவில்லை. ஆயினும், அவர் மல்யுத்தம் வில்வித்தை யானையேற்றம் முதலியவற்றிலும் குறிதவறாது சுடுவதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். அவர் தமது பதினெட்டாவது வயதில் ராஜ்யபாரத்தை யேற்றுக்கொண்டு டில்லியி லிருந்து நாற்பத்தைந்து வருஷகாலம் நீதி தவறாது அரசாண்டுவந்தார்.

அக்பர் சக்கரவர்த்தி அசோக சக்கரவர்த்தியைப் போல, பெருந்தன்மையும் திறமையும் வாய்ந்து, விளங்கியிருந்தனர். அவர் வட இந்தியா முழுமையும் மொகலாயரது ஆளுகைக்கு உட்படுத்த, பெருமுயற்சி செய்து, அவ்விதமே அதனைத் தம்வசமாக்கிக்கொண்டனர். அதனால், அவருடைய ஆயுள்காலத்தின் பெரும் பாகம் யுத்தத்திலேயே கழிந்தது. அவர் ராஜபுத்திரர் களைத் தம்வசமாக்கிக்கொள்ளப் பலயுத்தங்கள் புரிந்தனர்; கடைசியாகச் சித்தூரில் அரசராயிருந்த உதயசிங் என்பவரோடு போர்செய்து சித்தூரைப் பிடித்தபிறகே வட இந்தியா முழுதும் அக்பரின் வசமாயிற்று.

அக்பர் ராஜபுத்திர ஸ்திரீகளை மணஞ்செய்து கொண்டு, ராஜபுத்திரர்களைத் தம் வசமாக்கிக்கொண்டார்; ராஜா மான்சிங்கு, ராஜா தோதர்மால், பகவன்தாஸ் முதலிய இந்துக்களுக்கு உயர்ந்த பதவிகளைக்கொடுத்து, இந்துக்கள் மனங்களிக்கும்படி செய்தார். அவர்களுள் ஒருவர் கவர்னராகவும், மற்றொருவர் சேனாதிபதியாக வும் இருந்தனர். அவர் மதவித்தியாசம் பாராட்டாது இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் ஒரேவிதமான

சுதந்தரங்களைக் கொடுத்தார். அவர் காலத்தில் மதச் சண்டை பெரும்பான்மையும் ஒழிந்திருந்தது.

அவர் இவ்விதம் மதவித்தியாசம் பாராட்டாது நடுவுநிலைமையாக இருந்து குடிகளை அன்போடு காத்து வந்தமையால், அவர் மஹா அக்பர் (Akbar the Great) என்று பலராலும் புகழப்பட்டுவந்தனர். அக்பர் என்னும் சொல்விற்கு மேன்மையுடையவர் என்பது பொருளாம். அக்பர் டில்லியில் அரசாட்சி செய்த காலம், இங்கிலாந்தில் எலிஜபேத் என்னும் இராணியார் அரசாண்ட காலமாகும்.

அக்பர் நாளடைவில் பாரசீகபாஷையிலும் துருக்கி பாஷையிலும் தேர்ந்தவரானர்; நடுத்தரமான உயரமும், அகன்ற மார்பும், முழங்கால்வரைக்கும் தொங்கும் கைகளும், அழகிய கண்களும், சிவந்த மேனியும் உடையவர். அவருடைய ராஜ்யத்தில் குடிகள் சிறிதும் கள்வர்பயம், பிராணபயம் இன்றிச் சமாதானமாய் வாழ்ந்தனர்; பயிர்த்தொழில் விருத்தியாயிற்று; நெசவு முதலிய கைத்தொழில்களும் விருத்தியாயின. அக்பர் ஆங்காங்குப் பாடசாலைகளை ஏற்படுத்தி, கல்வி அபிவிருத்தியாவதற்கு வேண்டிய சகாயங்களையெல்லாம் செய்துவந்தார். அதனல், குடிகள் இராஜத்துரோக சிந்தனையும் கலகமுமின்றி இனிது வாழ்ந்து வந்தனர். குடிகளெல்லாரும் அக்பரிடத்து அன்புடையவராயும், அக்பர் குடிகளிடத்து அருளுடையவராயும் இருந்தனர்.

அவருடைய ராஜ்யம் காபூல் தேசத்திற்கு வடக்கேயுள்ள இந்துகுஷ் என்னும் மலைத்தொடர் தொடங்கி வங்காளக் கடல் வரைக்கும், இமையமலை தொடங்கி, கர்னடகதேசம் வரைக்கும் பரவியிருந்தது. அவருடைய சேனவீரர்கள் யாவரும் யுத்தஞ் செய்வதில்

சிறந்த பயிற்சியுடையவராய் இருந்தமையால், அவரோடு எதிர்த்துப் போர்செய்யப் பகையரசர்கள் அஞ்சி அடங்கியிருந்தனர். டில்லிப் பாதுஷாவாக வந்தவருள் பாபரும், அவருடைய பௌத்திரரான அக்பருமே மிகுந்த கீர்த்தி பெற்றவராயிருந்தனர்.

அக்பருக்கு அந்தரங்க காரியதரிசியாயிருந்தவர், ராஜா பீர்பால் என்னும் அந்தணராவர். அக்பர் ராஜ்ய சம்பந்தமான காரியங்களை யெல்லாம் தமது அந்தரங்க காரியதரிசியோடு ஆலோசித்தே செய்துவந்தனர். அதனால், இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் ஒற்றுமை அதிகமாக உண்டாயிற்று. உழுது பயிர்செய்பவர் ஏழைகளாய் இருந்தால், பயிரிடுவதற்கு வேண்டிய பணத்தை அக்பர் அவர்களுக்கு முன்பணமாகக் கொடுத்து, பின்னே அதனைச் சிறிது சிறிதாக வாங்கிக் கொள்ளுதற்குரிய ஏற்பாடுகளையெல்லாம் செய்தார். அக்பர் குடிகளிடத்தில் ஒருபோதும் கிரமமான வரியையன்றி அதிகமானவரியை வாங்கினதேயில்லை. தெய்வச் செயலாகப் பயிர்கள் விளையாதழிந்துபோனால், அதற்குரிய வரியை வாங்காதிருக்கும்படியும் அவர் ஏற்பாடு செய்தார்; குடிகள் வரியைத் தானியமாகக்கொடுப்பதை ஒழித்துப் பணமாகக் கொடுக்கவேண்டும் என்றும் ஏற்பாடு செய்தார்.

அக்பர், இந்துக்களுள் ஒரு சிறு பகுதியோர் செய்துவந்த உடன்கட்டை ஏறும் வழக்கத்தை முற்றும் ஒழித்தார்; சிசு விவாகத்தைக் கூடுமான வரைக்கும் தடுத்தார்; விதவாவிவாகம் செய்கின்றவர்களுக்கு வேண்டிய உதவி செய்துவந்தார். எல்லாமதங்களிலும் உண்மை உண்டென்பது அவரது அபிப்பிராயம். அவர் பார்ஸிமதம், கிறிஸ்துவமதம், ஜைனமதம், முகம்மதியமதம் முதலிய

மதநூல்களை அவ்வவ் மதத்தில் தேர்ந்துள்ள பண்டிதர் மூலமாக ஆராய்ச்சிசெய்து, அம் மதங்களிலுள்ள உண்மைகளையெல்லாம் சேர்த்து ஒரு புதிய மதத்தை ஏற்படுத்தினர். அம் மதத்திற்கு தீன இலாஹி என்று பெயராம்; அதன் பொருள் **தேவமதம்** என்பதாம். இந்தத் தேவமதம் ஜனங்களுள் பரவுமாயின், யாவரும் மதத்துவேஷத்தைவிட்டு ஐக்கியமாய் வாழ்தல் கூடும்; அதனால், இந்தியா தேசம் மற்றெல்லாத் தேசங்களுக்கும் மேம்பட்டு விளங்கும் என்பது அவரது முக்கிய நோக்கமாம்.

அக்பர், கடவுளை நம்பினவர் யாவராயிருப்பினும் அவர் கைவிடப்படார் என்னும் நம்பிக்கையுடையவரா யிருந்தமையால், அவர் எந்த மதத்தையும் வெறுக்கா திருந்தனர். அவர்காலத்தில் வழங்கிய நாணயம் ஒன்றில், "ஒழுங்காக ஒழுகுவதே கடவுளுக்குத் திருப்தி. நன்னெறியில் ஒழுகுபவன் கெடுவதை நான் பார்த்ததேயில்லை" என்னும் வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தன. இதனால், அவர் பிறர் மதத்தை வெறுத்தலும், பிறர் ஜாதியை அவமதித்தலும் இல்லாது முகம்மதியரைப் போல் இந்துக்களையும், மிக்க மரியாதையாகவும், அன்பாகவும் நடத்திவந்தாரென்பது நன்றாக விளங்குவதாம். அதனால், அவர் காலத்துக் குடிகள் சிறிதும் தடையின்றித் தமது மதங்களை அனுசரித்துவந்தனர். அக்பரது அத்தை மகனை பைராம்கான் அவருக்குக் கல்வி கற்பியாதிருந்தமையால், அவர் வெகு காலம் வரையில் எழுதவும் படிக்கவும் தெரியாதிருந்தார். பிறகு, அவர் சிறிது கல்வியுடையவராய், பிறரைக்கொண்டு சிறந்த புத்தகங்களைப் படிக்கச்செய்து கேட்டுவந்தனர். அதனால்,

அவருக்குக் கல்வியறிவு ஒருவாறு பெருகுவதாயிற்று. அவருடைய புத்தகசாலையில் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட புத்தகங்கள் இருந்தனவாம்.

அவரது மந்திரிகளுள் ஒருவரான அபுல்பாஸல் என்னும் பெரியார் அக்பருடைய அரசாட்சி முறைமையைப்பற்றி வித்தாரமாக ஒரு நூல் எழுதியிருக்கின்றார். அதற்கு அயின் அக்பரி என்று பெயராம். அக்பர் தமது ராஜ்யத்தில் எவ்வளவு திருத்தங்கள் செய்யவேண்டுமோ அவ்வளவு திருத்தங்களையும் கூடுமானவரையில் செய்து முடித்தார். அதனால், அவர் இற்றைக்கும் எவராலும் புகழப்பட்டுவருகின்றனர்.

துளசிதாஸ் என்னும் பெரியாரும், துக்காராம் என்னும் பெரியாரும், அக்பரது அரசாட்சியின் கீழ் இருந்து தமது கொள்கைகளைப் பரவச்செய்தனர். அதற்கு அக்பர் ஒரு தடையும் செய்யவில்லை. அக்பரது மனைவிமாருள் ஜெயபுரத்தரசனுடைய குமாரத்தியும் ஒருத்தியாவள். இவள் வயிற்றில் பிறந்த சலீம் என்பவனே அக்பருக்குப்பிறகு ஜஹாங்கீர் என்னும் பட்டப்பெயரோடு சக்கரவர்த்தியானன். அக்பர் ராஜபுத்திரருடைய நட்பையும் மதிப்பையும் சம்பாதித்துக் கொண்டமையால், கவலையின்றி அரசாட்சி செய்து, 1605-ம் வருஷத்தில் பரகதியடைந்தார். அவருக்கு அப்போது வயது அறுபத்துமூன்று. அக்பர் செய்த அரசாங்கமுறை மிகவும் சிறப்புடையதென்று தேச சரித்திரங்களை ஆராய்ந்தறிந்த பலராலும் இன்றும் கொண்டாடப்பட்டுவருகின்றது.

## 17. கடவுளைக் கண்டதுண்டா?—I

புண்ணிய பூமி யெனப் பெயர்பெற்ற இப்பாரத தேசத்தின் திலகமாய் விளங்குவது வங்க நாடு. நாட்டின் பெருமையை நிலைபெறச் செய்த பெரியார் பலர் வங்கநாட்டிலே தோன்றியுள்ளனர். அந்நாட்டிலுள்ள ஹூக்ளி ஜில்லாவில் அறநெறி நின்ற அந்தணர் குலமொன்று ஏறக்குறைய நூறுண்டுகட்கு முன்பு மிகப் புகழ்பெற்றிருந்தது. அக்குலமணியாய் விளங்கிய க்ஷுதிராம் சட்டர்ஜி என்னும் அந்தணர் ஒருவர் சத்தியம் தவறுத உத்தமர்; கடவுட்பத்தியிற் சிறந்தவர். அவரது மனைவி சந்திரமணி தேவி யென்பவராவர். ஒருநாள் ஏதோ அவசர காரியமாக க்ஷுதிராம், சுமார் 100 மைல்களுக் கப்பாலுள்ள அயலூருக்கு நடந்து சென்றார்; பாதிவழி நடந்த பின்னர், பாதையோரத்தில் நன்றாய்த்தழைத்துச் செழித்திருந்த வில்வமரம் ஒன்றைக் கண்டார். கண்டதும், அவர் மனம் களிப்பெய்திற்று. அவர் தம் வீட்டில் நாடோறும் வழிபட்டு வரும் கடவுளை அவ்வில்வமரத்தின் அழகிய இதழ்களால் அர்ச்சித்து இன்புற வேண்டுமென்று இச்சை கொண்டு, தம்மனங் கொண்டமட்டும் அம்மரத்தின் தழைகளைச் சேகரித்துக்கொண்டு, உடனே வீடு சென்று, விரும்பிய வண்ணமே கடவுளை வழிபட்டு இன்புற்றார்.

அவர் பின்பு, தமது காரியத்தை முடிக்க அயலூருக்குத் திரும்பவும் புறப்பட்டுச் சென்றார்; அதனால், அவரது பத்தி சிறப்புற்று விளங்கிற்று. இரந்தார்க்கில்லை யென்னாது ஈயும் அருங்குணம் வாய்ந்த சந்திரமணி தேவியுடனும் குழந்தைகளுடனும் அவர் இனிது

வாழ்ந்து வரும் நாளில், ஒருநாள் எதிர்பாராத இன்னல் ஒன்று அவருக்கு நேரிட்டது. அவரது ஊரிற் குடியிருந்த செல்வம் நிறைந்த கொடியோனொருவன், நிரபராதியான வேறொரு எளியோன்மீது பொய்வழக்குத் தொடுத்து, அவ்வழக்கிற் றனக்குச் சகாயமாய்ப் பொய்ச்சாட்சி கூறும்படி அவரை வேண்டிக்கொண்டான். அவர் அச் செல்வனது வெறுப்பையும் பாராட்



டாது அதனை மறுத்துவிட்டார்; மறுக்கவே, அவன் அவர்மீதும் கோபங்கொண்டு வேறொரு பொய்வழக்குக் கொணர்ந்தான். அதன்பயனுக க்ஷுதிராம் மிகவும் எழ்மை யுற்றுத் துன்பப்படலானுர். அதனுல், அவர் தம்மூரைவிட்டுக் குடும்பத்துடன் காமர்ப்புகூர் என்னும் வேறொரு கிராமத்தை அடைந்தார்.

காமர்ப்புகூர் என்னும் கிராமமானது வடதேசத்தார் ஜகந்நாதம் என்னும் க்ஷேத்திரத்திற்கு யாத்திரை

செல்லுதற்குரிய பெரியசாலைக்கருகில் உள்ளது. அது முற்காலத்தில் மிகச் சீரும் சிறப்புமுற்று விளங்கியது. அழகிய குளங்களும், எழில் மிகுந்த சோலைகளும் அவ் வூரின் வனப்பை யதிகரிப்பித்தன; கைத்தொழிலும் வாணிபமும் அவ்வூரைச் சிறப்புறச் செய்தன. புதி தாய் வந்த க்ஷுதிராம் என்பார் வறியராய்ச் சிறு குடிசையொன்றில் வசித்துவந்தார்; ஆயினும், அவ ரும் அவரது மனைவியான சந்திரமணியும் பரிசுத்த மனத்தினராய், நல்லொழுக்கம் வாய்ந்தவராய் இருந்து வருவதைக்கண்ட ஊரானைவரும் அவர்க்கு அதிக மரி யாதை செய்துவந்தார்கள். ஒருநாள், க்ஷுதிராம் கயை என்னும் புண்ணிய க்ஷேத்திரத்திற்குத் தனியே யாத் திரை சென்று, ஆங்கு எழுந்தருளியிருக்கும் கதாதரப் பெருமானை வழிபட்டு இன்புற்றார். அன்றிரவில் கதா தரக் கடவுள் அவரது கனவிற் றோன்றி, “அன்ப! நினது பத்தியை மெச்சினோம்; யாம் நின் சேயாய் அவதரித்து நினது குடிசையில் தவழ்ந்துவிளையாடத் திருவுளம்கொண்டுள்ளோம்; எமக்குத் தொண்டு செய்து இன்புறுவாயாக! நின்னியல்புக்குத்தக உன் னாற் செய்யப்படும் தொண்டினை யாம் மகிழ்வுடன் ஏற் போம்” என்று கூறி மறைந்தார்.

க்ஷுதிராம் தம்மூருக்குச்சென்று, நடந்தவற் றைச் சந்திரமணியிடம் கூறி, அங்கும் தமது கன வினை உறுதிப்படுத்தும் அடையாளங்கள் சிலவற்றை அறிந்து களிப்புற்றிருந்தார். அவ்வாறே, உரியகாலத் தில் சந்திரமணிதேவி ஆண்மகவொன்றைப் பெற்றாள். அழகுவாய்ந்த அக் குழந்தையைக்கண்டு ஊரார் அனை வரும் இன்பமடைந்து, அதற்குக் கதாதரர் என்றே பெயர் இட்டனர். அவரே பிற்காலத்தில் இராம

கிருஷ்ணர் என்று பெயர் பெற்றார். கண்ணைக்கவரும் வனப்பினையுடைய அக் குழந்தையைக் காணவும், அதனோடு நெருங்கிக் கொஞ்சி விளையாடவும் நாடோறும் கிராமத்தார் அவரது குடிசையை நாடி வருவாராயினர்.

இங்ஙனம் வளர்ந்துவந்த கதாதரர் தகுந்த பிராயத்தில் பள்ளிக்கு அனுப்பப்பட்டார்; பள்ளியிற் சிறிதளவு கல்வியை விரைவிற் பயின்றார். ஆனால், எழுத்தறி கல்வியைப் பார்க்கினும் அவர்க்கின்பமளித்தது பேரறிவளிக்கும் சான்றோர் மொழிகளேயாம். ஊரில் நடைபெறும் அரிகதைகளை நடித்துக்காட்டும் நாடகங்கள் முதலியவற்றைப் பார்த்துவருவதில் அவர் ஊக்கமுள்ளவராயிருந்தார். குழந்தைப் பருவத்திலிருந்தே அவர் தெய்வ பத்தியிற் சிறந்தவராய்க் கடவுள் நினைவிலே நிலை பெற்றிருந்தார். ஒருநாள் தம் பள்ளியிற் படிக்கும் மாணவரிற் பலரையும் கதாதரரையும் காணாத உபாத்தியாயர், சில மாணாக்கரைக்கொண்டு அவர்களைத் தேடச்செய்தார்; அவர்கள், ஊருக்கருகில் ஓங்கி வளர்ந்திருந்த ஒரு மாந்தோப்பின் நிழலில் கதாதரர் தம் நண்பர்களுடன் கிருஷ்ணலீலை யென்னும் நாடகத்தை நடித்துக்கொண்டிருப்பதைக் கண்டனர். அவர்கள் மூலமாய் அதனையறிந்த உபாத்தியாயர் சினந்து, அம்மாணவர்க்குத் தலைமைவகித்து அவர்களது படிப்பைக் கெடுத்து நாடகம்நடிக்கச்செய்த சிறுவர் கதாதரரை ஒறுக்கத் தலைப்பட்டார். கதாதரர் தண்டனையடைவதை ஏனைய மாணவர் சிறிதும் சகியாதவராயினர்.

மாந்தோப்பில் நடந்த நாடகத்தின் அழகையும், கதாதரர் நடித்த திறனையும் மாணவர் உபாத்தியாயரிடம் புகழ்ந்துகூற, செம்மையாய்த் தண்டிக்க வேண்டிய அவ்வுபாத்தியாயரும் கதாதரரை ஒரு பாட்டுப் பாடும்

படி கேட்டனர். அப்பாட்டில் இன்னிசையோசையும், கேட்போர் உளத்தையுருக்கும் பான்மையும் ஆழ்ந்த தெய்வ நிச்சயக் கருத்தும் செறிந்திருப்பதைக்கண்ட உபாத்தியாயர் கோபந்தீர்ந்து இன்பமடைந்து, அன்று முதல் நாடகத்தைப் பள்ளியிலேயே நடத்த அநுமதியளித்தார். அவ்வாறு நாட்சில கழிந்தன. ஊரில் சிவராத்திரித் திருவிழா கொண்டாட ஏற்பாடுகள் நிகழ்ந்தன. ஊரார் இரவுப்பொழுதினை நற்பொழுதாக்கச் சிவகதையொன்றினைத் தக்க நடிகர்களைக்கொண்டு நாடகமாக நடிக்கச்செய்தனர். ஆட்டம் தொடங்கும்போது ஆங்குச் சிவவேடந்தாங்கும் முக்கிய பாத்திரன் திடீரென்று நோயுற்றமையால், நாடகத்திற்கு வாராதொழிந்தான். என்செய்வர் ஊரார்? பிறகவர் முயன்று, சிறுவர் கதாதரரை யழைத்துச் சென்று, சிவ வேடந்தரிக்கச்செய்து, நாடகமேடைக்கு அனுப்பலாயினர். கதாதரர் தட்டுத்தடுமாறி நடந்து மெல்ல மேடையின் மீது காலடிவைத்த பின் அசைவற்று நின்றார். "ஆ, என்ன அழகான நடிப்பு!" எனக் கூடியிருந்தோர் வியந்து, மேலும் நடிப்பைக் காண ஆவலுடன் காத்திருந்தனர். கதாதரர் தாம் பூண்ட வேடத்திற்குத்தக உள்ளம் அகமுகப்பட்டவராய், தெய்வ நினைவில் திளைத்து நின்றுவிட்டார். பேச்சில்லை; மூச்சில்லை. நாடக மேடைக்குள் இருந்தவர் சற்றுநேரம் பார்த்துப் பின் உள்ளே அவரைத் தூக்கிச்சென்றனர்; நாடகமுங் கலைந்தது. இரவெல்லாம் அந்த நிலையிற் கலையாது நின்று, அதிகாலையிலே உலக நினைவைப் பெற்றார் கதாதரர். இதுபோல, பலசமயம் இவர் சிறுவராய் இருந்த காலத்தே கடவுள் நினைவில் உளமூன்றி வெளிநினைவிழந்து நின்றதுண்டு.

தெய்வப் பிறப்பினரான கதாதரரோ நற்குண நல்லொழுக்கங்கள் வாய்ந்தவராய், தம் வயதினர்க்குத் தலைவராய், பெரியோர்க்கு வணங்கினவராய், எளியோர்க்கின்ப மூட்டும் குணத்தினராய், ஊராரனைவரையும் களிப்பிக்கும் ஒழுக்கத்தினராய் இருந்துவந்தார்; இவ்வாறிருக்கும்போது, தமது ஏழாவது வயதில் அன்புடைய தந்தையை இழந்து மனம் நொந்தார். இங்ஙனம் மனம் நொந்த அவர் துயரத்துளாழ்ந்த அன்னையுடன் எப்போது மிருந்து அவளுக்குவேண்டிய தொண்டுசெய்து ஆறுதலளித்து, நாடோறும் வீட்டில் நடந்துவந்த கடவுள் வழிபாட்டைத் தாமே செய்து வரலானார். தந்தையார் இறந்த பின்னர், முன்னமே ஏழ்மையுற்றிருந்த அவரது குடும்பம் இன்னும் அதிக வறுமைக்குட்பட்டது. குடும்ப பாரத்தினைக் கதாதரரின் மூத்த தமையனாராகிய இராமகுமாரர் என்பவர் வகித்தல் நேரிட்டது. இராமகுமாரர் கல்வியிற் றேர்ந்தவர்; சாஸ்திரங்களைக் கற்றவர். அவர் கிராமத்தில் போதிய ஊதியம்பெற வழியில்லை யெனவறிந்து, தம்மூருக்குச் சுமார் எண்பது மைல்களுக் கப்பாலுள்ள கல்கத்தாநகரை யடைந்து, ஆங்கொரு பாடசாலையை நிருமித்து அதனை நடத்திவந்தார்.

இவ்வாறு சில ஆண்டுகளாக கல்கத்தாவில் தனித்திருந்து பாடசாலையை நடத்திவந்த இராமகுமாரர், அவ்வேலையுடன் தமது உணவையும் தாமே சமைத்து உண்டுவந்தாராதலால், விரைவில் தளர்ச்சியுற்றார். அதனால், இராமகுமாரர் தமது இளையோராகிய கதாதரரைத் தமக்குதவியாக இருக்க அழைத்துக்கொண்டார்; கதாதரரை அழைத்துக்கொண்டதற்கு மற்றொரு காரணம் அவரை மேலே படிக்கும்படி தூண்டலாமென்

னும் நோக்கமாம். இராமகுமாரர் அங்கு அவருடன் உறைந்து வந்த காலத்தில் அவரை யருகிலழைத்து, " அருமைத் தம்பி கதாதர! 'இளமையிற் கல்' என்பது ஆன்றோர் அமுதமொழி; எனவே, கல்வியைப்பெறக் கடிதினில் முயலுதி. அஃது அறிவினை யளிக்கும்; நம் வறுமையை நீக்கும். ஆதலின், அன்ப! இனியேனும் வாழ்நாளை வீணாளாக்காது அதனைப் பெறத் தீர்மானித்திடுக'' என்றுரைத்தனர். அதைச் செவியுற்ற இளையவர், "ஆருயிர் அண்ணலே! நன்கு மொழிந்தீர்! வயிற்றினை வளர்க்கும் வழியைக் காட்டுகின்ற கல்வியும் ஒரு கல்வியாமோ? கடவுளைக்காணும் அறிவன்றோ கல்வியின் பயன்? அவ் வறிவினைப் பயக்கும் கல்வியே யான் விரும்புவது'' என விடையளித்தார். இராமகுமாரர் தம்பியினுள்ளத்துப் பூரணமாய் நிறைந்திருக்கும் தெய்வக் காதலைக்கண்டு வியப்புற்றார்.

---

## 18. பொன் மொழிகள்

1. முத்துக் குலத்தாற் பெருமைப்படும்
மூடர் குலத்தாற் பெருமைப்படார்.

2. அன்ன நடை கற்கப் போய்த்
தன்னடையு மிழந்தது போல.

3. கங்கா நதியில் மூழ்கி னாலும்
காக்கை அன்னம் ஆகுமா?

4. பெருமாள் நினைத்தால் வாழ்வு குறைவா?
பிரமா நினைத்தால் ஆயுசு குறைவா?

5. நூலைப் போலச் சேலை
தாயைப் போலப் பிள்ளை.

## 19. கடவுளைக் கண்டதுண்டா?—II

கல்கத்தாவுக்கு வடக்கே, அந்நகரையொட்டித் தட்சி ணேசுரம் என்றொரு சிற்றூர் உண்டு. அவ்வூரிற் பெரியதோர் ஆலயத்தை இராணி இராசமணி யென்னும் செல்வமிகுந்த சீமாட்டி, தான் கனவிற்கண்ட கடவுளாணையை நிறைவேற்றப் பெரும்பொருள் செலவு செய்து கட்டுவித்தாள். புனிதநீர்க் கங்கை யாற்றின்



புனல் மோதும் புண்ணிய க்ஷேத்திரமாய் அவ்வாலயம் விளங்கியது. அவ்வழகிய தேவாலயத்தில் சிவபெருமானை வழிபடுதற்குரிய பன்னிரு சிறு கோயில்கள் வரிசையாய் ஒருபுறம் அமைந்தன; இராதாகிருஷ்ணனுய் வீற்றிருந் தருள்புரியும் விஷ்ணுவாலயம் மற்றொரு புறம் விளங்கியது; நடுவே பராசக்தி வடிவாய்த் தெய்வ ஒளி வீசும் திருவுருத்தாங்கிய காளிதேவியின் சந்நிதி

அமைக்கப்பட்டது. இவ்வாலயத்தில் முதல்முதல் அர்ச்சகராக அமர்ந்து தொழில் புரியும் பணியை இராமகுமாரர் ஏற்ருர். அப்போது இராமகிருஷ்ணரும் தட்சிணேசுரத்தில் உறைந்துவந்தார். ஒருநாள் கிருஷ்ண விக்கிரகத்திற்கு அர்ச்சனை புரிந்துவந்த அந்தணன், பூசனை முடிந்தபின்னர்த் துயிலமர்த்தப் பள்ளியறைக்கு அவ்விக்கிரகத்தைத் தூக்கிச் சென்றபோது, கால்வழுக்கிக் கீழே விழுந்தான். அதனுல், அவ்விக்கிரகத்தின் ஒருகால் ஒடிந்தூனமுற்றது. அதனையறிந்த இராணியும், அவளது மருமகனும் ஆலயத்தின் தருமகர்த்தாவுமான மதுரபாபு என்பவரும் மிகக்கவலையுற்று வருந்தலாயினர். அவர்கள் சாஸ்திர விற்பன்னரான பண்டிதர் பலரை வரவழைத்து, அதற்குப் பரிகாரம் யாதென வினவினர். யாவரும் ஒன்றுகூடி, ஊனமுற்ற சிலையைக் கங்கையில் அமிழ்த்திப் புதியதொரு விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்வதே உத்தமமாமெனப் புகன்றனர். அதைச் செவியுற்ற இராமகிருஷ்ணர் புன்னகை புரிந்தார். "நீர் யாதுகாரணத்தால் புன்னகைபுரிந்தீர்" என அண்மையிலுள்ளோர் கேட்க, அவர் பின்வருமாறு பதிலுரைத்தார்: "இதுவும் விந்தையே! இராணி, தன்மருமகனுக்கோர் ஊனென்று விளைந்த காரணத்தாற் காலொன்று பழுதுபடுமாயின், அவனைத் தள்ளி வேறு ஒரு மருமகனைத் தேடுதலும் கூடுமோ? இதுகாறும் அன்புடன் வழிபட்டு வந்த விக்கிரகத்தை நீரில் அமிழ்த்திவிடுதற்கு உங்கள் மனந் துணியுங்கொல்! எவ்வாற்ருனும் பழுதுபார்த்துப் பழைய விக்கிரகத்தையே போற்றிப் பூசை செய்தல் முறையாம்." அவரது ஞானம் செறிந்த இம்மொழிகளைக்கேட்ட இராணியும் அவரதுமருமகனும் மற்றுள்ளோரும் ஆச்சரியமடைந்த

னர்; அவரை மிகவும் மெச்சி, அவரது கைத்திறனைக் கொண்டே அக்காரியத்தையும் செய்வித்து அகமகிழ்ந்தனர். ஒப்புமையில்லாத கடவுட் பத்தியை இராமகிருஷ்ணரிடம் கண்ட மதுரபாபு, காளிதேவிக்குப் பூசைசெய்யும் முக்கிய அர்ச்சகராக அவரை அமர்த்தத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தார்.

இராமகுமாரர் நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தார். அதன்பின்னர் இராமகிருஷ்ணர் அன்னை காளிதேவிக்கு அர்ச்சனைபுரியும் அரும்பணி பூண்டார். அவர் பூஜை செய்யத் தலைப்பட்டது முதல் ஆலயமானது புத்துயிர் பெற்றுப் பொலிவுற்றது; எங்கும் தெய்வமணம் வீசியது. அவர் செய்த பூஜையைக் கண்டவர் வியப்படைந்தனர். அவர் பத்தியில் முதிர்ந்து பித்தரைப் போலானார். முறைப்படி பூஜை செய்வது அவருக்கு இயலவில்லை; கடவுள் நினைவிற் கருத்தூன்றியவராய், மெய்ம்மறந்து அவர் வெளிநினைவின்றி நெடுநேரம் நின்று விடுவார்; எதிரேயிருப்பது விக்கிரகமென்றெண்ணாது அதனை உயிருடன் கூடிய தேவியன்னையின் உருவெனக் கொண்டு அதனுடன் கொஞ்சி விளையாடுவார்; அதற்கு அமுதினைப் படைப்பார்; அதனையெடுத்து அதன் வாயில் திணிப்பார்; அன்புடன் பாடுவார்; அதன் அங்கையைப் பிடித்துக்கொண்டு ஆடுவார்; மணியடித்துத் தீபாராதனை செய்வார். நீண்ட நேரம் இவ்வாறே கழிந்துவிடும். இவற்றினைக் கண்ட கோயிற் காவலாளர் அவரைப் பித்தரென்று முடிவுசெய்தனர்; விரைந்தோடி அவற்றைத் தர்மகர்த்தாவிடம் முறையிட்டனர். இராமகிருஷ்ணரது நடத்தை விபரீதமாகத் தோன்றினும், மதுரபாபு, அவரது பூஜையின் சிறப்பை ஓர்ந்துணர்ந்தவராதலின், காவலாளரைத் தேற்றி

யாமே நேரில் வந்து காண்போமென் றுரைத்து அவர்களை அனுப்பிவிட்டார்.

இதற்குள் இராமகிருஷ்ணர் பித்தரானர் என்னும் செய்தி ஊரெங்கும் பரவிற்று. இச் செய்தியை யறிந்த இராமகிருஷ்ணரின் தாய் சந்திரமணிதேவி மிகவும் வருத்தமுற்று, வயது முதிர்ந்த காலத்தில் தான் தன்னருமைக் குமாரனைக் காணப் பெரிதும் விழைவதாகக்கூறி, ஆள்விட்டனுப்பி, காமர்ப்புகூருக்கு அவரை அழைப்பித்தாள். தாய் சொல் தட்டாது, தனயரும் ஊரை யடைந்தார். அவர்க்கப்பொழுது வயது இருபத்தொன்று. அவரது பித்தத்தைத் தெளிவிக்க யாது செய்வதென்று யோசித்துத் தாயும் அவர்க்குத் திருமணம் முடிப்பதெனத் தீர்மானித்தாள். இராமகிருஷ்ணர் தாயின் வார்த்தைக் கிணங்கி, ஏழு வயதுடைய சாரதாதேவியென்னும் அழகிய பெண்ணைத் தாரமாகக் கொண்டார். ஆனல், அவர் அதிக நாள் ஊரில் தங்கவில்லை. பத்திக்கனல் கொழுந்துவிட்டெரிந்து அவரது உள்ளத்தை வாட்டியது. அவர் திரும்பவும் தட்சிணேசுரம் சென்று முன்போல் தேவியை வழிபடலானர்; தேவியினது தரிசனம் பெற இச்சித்தார். கடவுளைக் காணும் அவா அவரது உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அவர் உறக்கம்விட்டார்; ஊண் மறந்தார். அவரது உடல் மெலிந்தது. அவர் இரவெல்லாம் தனித்திருந்து நிஷ்டை புரிந்தார்; ஒவ்வொரு நாளும் மாலைப் பொழுதில், "ஐயோ! இன்றும் ஒருநாள் வீணிற் கழிந்ததே! அன்னய்! நீயென் கண்முன் நின்று காட்சியளிப்பது எந்நாளோ?" என்று கதறுவார்; அழுது புலம்புவார்; தம் முகத்தைத் தரையில் மோதித் தேய்த்துக்கொள்வார். ஒருநாளிரவில் அவர் தேவியின் திரு முன்னர்



ஸ்ரீ சாரதாதேவியார்



சுவாமி விவேகாநந்தர்

நின்று, "அன்புடைய தாயே! அருள்மழை பொழியும் அம்பிகையே! அடியார்க்கிரங்கும் அன்னையே! யான் என் செய்வேன்? இனிக் கணமுந் தரியேன். தேவி! நீயிருப்பது உண்மையோ? அல்லது கவிகளின் கற்பனைதானே! இல்லை, இல்லை; எத்தனை அடியார்களுக்கு நீ காட்சியளித்து இன்பந் தந்துள்ளாய்! ஆ! நான்மட்டும் பாவியோ? தகுதியற்றவனேனோ? ஆயினும், நின் கருணையால் எனக்குன் காட்சியை யளிக்க நீ இசையாயோ? யான் புனிதனாக மாட்டேனோ? ஆ! இனி யான் உயிருடன் இருப்பதேன்?" என்று கூறித் தம்மை மறந்து, ஆங்குச் சுவரில் தொங்கிய வாளொன்றை யெடுத்து மாய்த்துக் கொள்ளப் பாய்ந்து சென்றார். அவ்வளவில், கடவுட் காட்சியில் அவர் மூழ்கிக் கீழே விழுந்தார்; எங்கும் இன்ப மயமாய், ஏகவுருவாய், ஜோதிவடிவொன்று நிறைந்திருப்பதைக் கண்டார்.

இவ்வாறு அந்நாள் கண்ட காட்சியை அவர் எந்நாளும் காணப் பின்னரும் முயன்றார்; கடுந் தவங்கள் பல புரிந்து கடவுளின் பல வுருவங்களைத் தரிசித்தார்; அருவுருவாகிய கடவுளை யறியும் உயர் சமாதி நிலையையும் எய்தினார். அவர் பல சமயத்தாருடைய மார்க்கங்களையும் பின்பற்றி, அவை யாவும் ஒரே முடிவை யடைகின்றன வென்பதைக் கண்டு தெளிந்தார். அதனாலேயே சர்வ சமய சமரசத்தை அவர் உலகிற் பரவச் செய்யலானார். அவர் பல வழிகளிற் சமய சாதனை பயின்ற காலத்து, அவ்வப்போது அவர்க்கு உபதேசம் செய்த ஆசிரியர் பலர். அவர்களுள் பைரவி பிராம்மணி யென்னும் ஒரு மாதும், தோதாபுரி யென்னும் ஒரு ஞானியும் முக்கியமானவர்கள். இராமகிருஷ்ணர் தம் மனை

வியுள்பட எல்லா ஸ்திரீகளையும் தேவியின் உருவங்களாகவே உணர்ந்து ஒழுகினர். பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை யென்னும் மூவாசைகளும் அவரிடத்து அறவே இல்லா தொழிந்தன. அவரறியாமல் அவர்மீது காசுபடினும் அவரது உடல் கூசும். அவரைப் பெரிய மகானென்று யாவரும் கொண்டாடினர். அப்போது அவர் தானெனும் அகந்தை சிறிதளவும் இல்லாத பரிசுத்தராயிருந்தார். ஒருநாள் அவர் தம்மையே சோதிக்கக் கருதினர். தாம் பெரியவர் என்ருவது உயர்ஜாதியைச் சார்ந்தவர் என்ருவது எண்ணும் எண்ணம் சிறிதேனும் தம்மிடத்திருக்கின்றதோவென்று காண அவர் எண்ணினர். அவ்வூரினருகில் ஒருபுறத்தே குடியிருந்த ஆதித்திராவிடனது குடிசைக்குச் சென்று, யாருமில்லாத வேளையில், அவன் மலங்கழிக்குமிடத்தைத் தம் கையாற் சுத்திசெய்து, தலைமயிரைக்கொண்டு தேய்த்துக் கழுவினர்; அவ்விதம் செய்த பின்னர்த் தம்மிடம் அகங்காரமில்லையென்று திருப்தியுற்றவரானர்.

ஒருசமயம் மதுரபாபு தம் குடும்பத்தினரோடு காசியாத்திரைக்குச் சென்றனர்; அப்போது இராமகிருஷ்ணரையும் உடனழைத்தேகினர்; இடை வழியிற் பஞ்சத்தால் பீடிக்கப்படும் ஓர் ஊரினைக் கண்டனர். அப்போது இராமகிருஷ்ணர் மதுரபாபுவைநோக்கி, "அன்ப! வறுமை நோயால் தவிக்கும் இம் மக்களனைவர்க்கும் வயிருர ஒருநாள் உணவளித்து, ஒவ்வொருவருக்கும் ஓர் ஆடை தருவீராக" என்றுரைத்தனர். மதுரர், "ஐயன்மீர்! காசி யாத்திரைக்கெனக் கொணர்ந்த பணத்தினை ஈண்டு வழியிற் செலவிட்டுவிட்டால், நாம் நமது யாத்

திரையை முடிப்பதெப்படியோ நவில்வீர்'' என்றார். அதற்கு இராமகிருஷ்ணர், "ஆயின், நீவிரனைவரும் காசிக்குச் செல்வீராக. கடவுளின் தோற்றங்களாயுள்ள இவ்வேழை மக்களுடன் யானிருப்பேன்'' என்று கூறி விரைந்துசென்று அவர்களது மத்தியில் சேர்ந்தார். உடனே கல்கத்தாவுக்குத் தந்திகள் பறந்தன; துணி மூட்டைகளும் பணமும் வந்து குவிந்தன; அம்மக்களுக்கு வயிறார உணவளிக்கப்பட்டன; புதிய ஆடைகளும் வழங்கப்பட்டன. அங்ஙனம் செய்தபின்னர் இராமகிருஷ்ணர் அவர்களுடன் காசிக்குச்சென்றார். அவரது யாத்திரை இனிது முடிந்தது. பின் யாவரும் தட்சிணேசுரம் வந்தடைந்தனர்.

கல்கத்தாவிலிருந்து இராமகிருஷ்ணரைக் காண வந்தவர்கள் பல்லாயிரம்பேர். அவர்களில் ஒருவர் நரேந்திரர் என்பார். அவர் ஆங்கிலக்கல்வியில் தேர்ந்து முதன்மை பெற்றவர்; தாய்மொழிப் பயிற்சியிலும் சிறந்தவர்; நமது நாட்டுச் சாத்திரங்களையும், வெளிநாட்டு விஞ்ஞான சாத்திரத்தையும் நன்றாய்க் கற்றவர்; நல்லொழுக்கம் வாய்ந்தவர்; மாசிலா மனத்தினர்; கடவுட் பத்தியும் வாய்ந்தவர்; ஆனால், நவீன நாகரிகத்தால் சிறிதளவு நாத்திக முடையவரானார்; காலவித்தியாசத்தாற் கடவுள் இருப்பது உண்மையோவென்று சங்கித்தவராய், "கடவுளிருப்பது உண்மையாயின், யாரேனும் அவரைக் கண்டதுண்டா?'' என்று எதிர்ப்பட்டவர்களனைவரிடத்தும் விதண்டாவாதம் செய்யத் தலைப்பட்டார். பின்னர் ஒருநாள் அவர் தமது உறவினர் ஒருவரால் தட்சிணேசுரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். நரேந்திரர் இராமகிருஷ்ணரை யடைந்ததும், அவரைநோக்கி வழக்கம்

போல், "ஐய ! நீர் கடவுளைக் கண்டதுண்டா ?" என்று கேட்டார். கேட்டு, வாய் மூடு முன்னர், இராமகிருஷ்ணபரமஹம்சர் "குழந்தாய் ! நான் கண்டேன்; நீ காண விரும்புவையேல், உனக்கும் காட்ட வல்லேன்" என்று கூறினர். நரேந்திரர் அதுகேட்டுத் திடுக்கிட்டு வியப்புற்றார். ஏனெனில், அதுகாறும் அம்மாதிரி விடையளித்தவர் எவரு மிலர்; அவ் விடையை அவர் எதிர்பார்க்கவுமில்லை. இராமகிருஷ்ணரால் இங்ஙனம் உறுதியளிக்கப்பட்டதும், அவர் அளவற்ற ஆச்சரியமும் ஆனந்தமும் உற்றார்; பின்னர், இராமகிருஷ்ணரைத் தமது குருவாக ஏற்று உயர்பதவியடைந்தார். அவரே பிற்காலத்தில் சுவாமி விவேகாநந்தர் என்னும் பெயர் பெற்று உலகத்துக்கு உறுபயன் விளைக்கும் உபதேசங்களைச் செய்தவர். சுவாமி விவேகாநந்தருடன் இன்னும் பலரும் இராமகிருஷ்ணருக்குச் சீடர்களாயினர். குருநாதர் தம்முடலை விட்டுப் பிரிந்தபின் தமது குருவின் பெயராலேயே ஒரு மடத்தினைச் சுவாமி விவேகாநந்தர் ஏற்படுத்தினர். அம்மடத்தின் கிளைகள் நமது நாட்டின் பல பாகங்களிலும், வெளி நாடுகளிற் சிலவற்றிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அம்மடங்கள் கடவுள் தொண்டு செய்துவருவது யாவரும் அறிந்ததேயாம். இராமகிருஷ்ணபரமஹம்சர் அருளிச்செய்த உபதேச வாக்கியங்கள் அளவிறந்தனவாம். அவற்றுள் சில இப்போது புத்தகவடிவமாய் வந்திருக்கின்றன.

# செய்யுட் பகுதி

# செய்யுட் பகுதி

TB
031(7)
N34

## I. துதிகவிகள்

### விநாயகர்

வான்உலகு மண்ணுலகும் வாழ, மறை வாழ,
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசைவி ளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம். (1)

### கலைமகள்

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோல் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத மும்துதித்தால்
கல்லும்சொல் லாதோ கவி? (2)

### முருகன்

குழவி அழுதகுரல் கேட்ட[illegible]ந்து
அழுதகண்ணீர்மாற்றி அமு[illegible]டும்—[illegible]ழுதகை[illegible]ல்
நாயேன் இடர்களைந்து ந[illegible]நட் டும்போரூர்ச்
சேயேநம் தாயாகுந் தே[illegible] (3)

86087

### சிவபெரு[illegible]

வானாகி மண்ணாகி வளியாகி [illegible]
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இ[illegible]க்
கோனாகி யான்எனதென்(று) அவர[illegible]த்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே. (4)

### திருமகள்

தாரணியை ஓரடியாய்த் தாவி அளந்தருளும்
நாரணனார் மார்புறையும் நாயகியைச்—சீரமரும்
செந்தா மரைவாழ் திருமகளைப் பாற்கடலில்
வந்தாளை வாயேநீ வாழ்த்து. (5)

### திருமால்

ஆதித் தனிக்கோலம் ஆனான் அடியவற்காச்
சோதித் திருத்தூணில் தோன்றினான்—வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே எனவழைப்ப
என்னென்றான் எங்கட் கிறை. (6)

---

## II. நன்னெறி

காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்க [ரான்
கண்ணிரண்டு மொன்றையே காண். (1)

மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவின்—பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறைய புள்ளரசைப் பார்த்து. (2)

பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம்—துப்பின்
சுழற்றுங்கொல் கற்றூணைச் சூறா வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு. (3)

வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பில்
பொருந்துத லானே புதுமை—திருந்திழாய்

சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு. (4)

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்
இரைக்கும்வண் டூதுமல ரீர்ங்கோதாய் மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. (5)

தம்மையுந் தங்க டலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல். (6)

கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகன நண்ணாரே—வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய் நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள். (7)

உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடுக்கு மொருகோடி யாக—நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான். (8)

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு. (9)

பன்னும் பனுவற் பயன்றே ரறிவிலார்
மன்னு மறங்கள் வலியிலவே—நன்னுதால்
காழ்ொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றுன். (10)

எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குரியர்
விள்ளா வறிஞரது வேண்டாரே—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல். (11)

அறிவுடையா ரன்றி யதுபெறூர் தம்பால்
செறிபழியை யஞ்சார் சிறிதும்—பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு. (12)

கற்ற வறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தா மென்று மதியாரே—வெற்றிநெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். (13)

நல்லார் செயுங்கேண்மை நாடோறு நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை யாகாதே—நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம். (14)

—சிவப்பிரகாச சுவாமிகள்.

---

## III. இன்னா நாற்பது

முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா;
பொற்பன லூர்தியை யுள்ளா தொழுகின்னா;
சக்கரத் தானை மறப்பின்னா (து); ஆங்கின்னா
சத்தியான் றாடொழா தார்க்கு. (1)

பந்தமில் லாத மனையின் வனப்பின்னா;
தந்தையில் லாத புதல்வ னழகின்னா;
அந்தண ரில்லிருந் தூணின்னா (து); ஆங்கின்னா
மந்திரம் வாயா விடின். (2)

சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா;
புரைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா;
முறையின்றி யாளு மரசின்னா; இன்னா
மறையின்றிச் செய்யும் வினை. (3)

அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா;
மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுக லின்னா;
இடும்பை யுடையார் கொடையின்னா; இன்னா
கொடும்பா டுடையார்வாய்ச் சொல். (4)

பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா;
நகையாய நண்பினார் நாரின்மை யின்னா;
இகலி னெழுந்தவ ரோட்டின்னா; இன்னா
நயமின் மனத்தவர் நட்பு. (5)

புல்லார் புரவி மணியின்றி யூர்வின்னா;
கல்லா ருரைக்குங் கருமப் பொருளின்னா;
இல்லாதார் நல்ல விருப்பின்னா; ஆங்கின்னா
பல்லாரு ணாணப் படல். (6)

ஆன்றவிந்த சான்றோருட் பேதை புகவின்னா;
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா;
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா; ஆங்கின்னா
ஈன்றாளை யோம்பா விடல். (7)

ஊரனுடையா னுள்ள மடிந்திருத்த லின்னா;
மறனுடை யாளுடையான் மார்பார்த்த லின்னா;
சுரமரிய கானஞ் செலவின்னா; இன்னா
மனவறி யாளர் தொடர்பு. (8)

ஈத்த வகையா னுவவாதார்க் கீப்பின்னா;
பாத்துண லில்லா ருழைச்சென் றுணவின்னா;

மூத்த விடத்துப் பிணியின்னா ; ஆங்கின்னா
வோத்திலாப் பார்ப்பா னுரை. (9)

யானையின் மன்னரைக் காண்ட னனியின்னா ;
ஊனைத்தின் றூனைப் பெருக்குதன் முன்னின்னா ;
தேனெய் புளிப்பிற் சுவையின்னா ; ஆங்கின்னா
கான்யா றிடையிட்ட வூர். (10)

சிறையில்லா மூதூரின் வாயில்காப் பின்னா ;
துறையிருந் தாடை கழுவுத லின்னா ;
அறைபறை யாயவர் சொல்லின்னா ; இன்னா
நிறையில்லான் கொண்ட தவம். (11)

பெரியோரோ டியாத்த தொடர் விடுத லின்னா ;
அரியவை செய்து மெனவுரைத்த லின்னா ;
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா ; இன்னா
பெரியார்க்குத் தீய செயல். (12)

கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா ;
வல்லாதான் சொல்லுமுரையின் பயனின்னா ;
இல்லார்வாய்ச் சொல்லி னயமின்னா ; ஆங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல். (13)

குறியறியான் மாநாக மாட்டுவித்த லின்னா (து) ;
அறிவறியா னீரின்கட் பாய்ந்தாட லின்னா ;
அறிவறியா மக்கட் பெறலின்னா ; இன்னா
செறிவிலான் கேட்ட மறை! (14)

நெடுமர நீள்கோட் டுயர்பாய்த லின்னா ;
கடுஞ்சின வேழத் தெதிர்சேற லின்னா ;
ஒடுங்கி யரவுறையு மில்லின்னா ; இன்னா
கடும்புலி வாழு மதர். (15)

பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா;
எண்ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா;
மண்ணின் முழவி னொலியின்னா, ஆங்கின்னா
தண்மை யிலாளர் பகை. (16)

பொருளிலான் வேளாண்மை காமுறுத லின்னா;
நெடுமாட நீணகர்க் கைத்தின்மை யின்னா;
வருமனை பார்த்திருந் தூணின்னா; இன்னா
கெடுமிடங் கைவிடுவார் நட்பு. (17)

நறிய மலர்பெரிது நாறுமை யின்னா;
துறையறியா னீரிழிந்து போகுத லின்னா;
அறியான் வினாப்படுத லின்னா; ஆங்கின்னா
சிறியார்மேற் செற்றங் கொளல். (18)

கொடுக்கும் பொருளில்லான் வள்ளன்மை யின்னா;
கடித்தமைந்த பாக்கினுட் கற்படுத லின்னா;
கொடுத்து விடாமை கவிக்கின்னா; இன்னா
மடுத்துழிப் பாடா விடல். (19)

அடக்க முடையவன் மீளிமை யின்னா;
துடக்க மிலாதவன் றற்செருக் கின்னா;
அடைக்கலம் வவ்வுத லின்னா; ஆங்கின்னா
அடக்க வடங்காதார் சொல். (20)

—கபிலர்.

---

## IV. இனிது நாற்பது

கண்மூன் றுடையான்றாள் சேர்தல் கடிதினிதே
தொன்மாண் டுழாய்மாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்த லினிது. (1)

உடையான் வழக்கினி தொப்ப முடிந்தான்
மனைவாழ்க்கை முன்னினிது மாணாதா மாயி
னிலையாமை நோக்கி நெடியார் துறத்த
றலையாகத் தானினிது நன்கு. (2)

ஏவது மாறா விளங்கிளை முன்னினிதே
நாளு நவைபோகான் கற்றன் மிகவினிதே
யேருடையான் வேளாண்மை தானினி தாங்கினிதே
தேரிற்கோ ணட்புத் திசைக்கு. (3)

கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்னினிது செங்கோல னாகுத
லெய்துந் திறத்தா லினிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு. (4)

கடமுண்டு வாழாமை காண்டலினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண்பி லாதாரை யஞ்சி யகற
லெனைமாண்பு தானினிது நன்கு. (5)

அதர்சென்று வாழாமை யாற்ற வினிதே
குதர்சென்று கொள்ளாத கூர்மை யினிதே
உயிர்சென்று தான்படினு முண்ணார்கைத் துண்ணாப்
பெருமைபோற் பீடுடைய தில். (6)

மன்றின் முதுமக்கள் வாழும் பதியினிதே
தந்திரத்தின் வாழுந் தவசிகண் மாண்பினிதே
எஞ்சா விழுச்சீ ரிருமுது மக்களைக்
கண்டொழுதல் காலை யினிது. (7)

கட்டார் புறங்கூறான் வாழ்த னனியினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகன் முன்னினிதே

முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கான் மற்றது
தக்குழி யீதலே நன்று. (8)

சலவரைச் சாரா விடுத லினிதே
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாந்
தகுதியால் வாழ்த லினிது. (9)

வெல்வது வேண்டி வெகுளாதா னோன்பினிதே
ஒல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினிதே
இல்லது காமுற் றிரங்கி யிடர்ப்படார்
செய்வது செய்த லினிது. (10)

ஆற்றானை யாற்றென் றலையாமை முன்னினிதே
கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே,
யாக்க மழியினு மல்லவை கூறாத
தேர்ச்சியிற் றேர்வினிய தில். (11)

நன்றிப் பயன் றூக்கி வாழ்த னனியினிதே
மன்றக் கொடும்பா டுரையாத மாண்பினிதே
அன்றறிவார் யாரென் றடைக்கலம் வெளவாத
நன்றியி னன்கினிய தில். (12)

அடைந்தார் துயர்கூரா வாற்ற லினிதே
கடங்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே
சிறந்தமைந்த கேள்வியா ராயினு மாராய்ந்
தறிந்துரைத்த லாற்ற வினிது. (13)

ஒற்றினு லொற்றிப் பொருடெரியு மாண்பினிதே
முற்றான் றெரிந்து முறைசெய்தன் முன்னினிதே
பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்
வெற்றிவேல் வேந்தற் கினிது. (14)

சிற்று ளுடையான் படைக்கல மாண்பினிதே
நட்டா ருடையான் பகையாண்மை முன்னினிதே
யெத்துணையு மாற்ற வினிதென்ப பால்படுங்
கற்று வுடையான் விருந்து. (15)

பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே
வித்துக்குற் றுண்ணு விழுப்ப மிக வினிதே
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலிற் காழினிய தில். (16)

—பூதஞ்சேந்தனார்.

---

## V. தனிப்பாடல்

### தமிழ்நாட்டின் சிறப்பு

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து. (1)

### மெய்ப்புலவ ரல்லாதார்

போற்றினும் போற்றுவர்; பொருள் கொடாவிடின்
தூற்றினுந் தூற்றுவர்; சொன்ன சொற்களை
மாற்றினும் மாற்றுவர்; வன்க ணாளர்கள்;
கூற்றினும் பாவலர் கொடியர் ஆவரே. (2)

### கைத்தண்டின் பயன்

முனிஅதட்டும் முள்தூக்கும் முன்னீர் அளக்கும்
கனிஉதிர்க்கும் கவ்வுநாய் காக்கும்—தனிவழிக்குப்
பத்திரம தாக்கும் பயந்தீர்க்கும் பாம்படிக்கும்
கைத்தலத்தில் தண்டிருந்தக் கால் (3)

### செயற்கையறிவும் இயற்கையறிவும்

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம். (4)

### நேசவின் நேர்மை

செய்யுந் தொழிலனைத்துஞ் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யுந் தொழிற்கு நிகரில்லை—வையகத்தைத்
தெள்ளு தமிழ்வேதஞ் செப்பி அந்நாள் சீர்படுத்தும்
வள்ளுவனார் கொண்டதல்ல வா. (5)

### அடியார் பெருமை

அடியார்க் கெளியவன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு—படியின்மிசைப்
பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை. (6)

---

## VI. திருக்குறள்

தெய்வத்தா னாகா தெனினும் முயற்சிதம்
மெய்வருத்தக் கூலி தரும். (1)

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் ; தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (2)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்;மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (3)

செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. (4)

அருள் இல்லார்க் கவ்வுலகம் இல்லை ; பொருள் இலார்க்(கு)
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (5)

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். (6)

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். (7)

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு (8)

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. (9)

தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். (10)

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். (11)

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் ; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (12)

பயன்தூக்கார் செய்த உதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது. (13)

—திருவள்ளுவநாயனார்.

---

## VII. நாலடியார்

குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்சளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு. (1)

இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுளராக்—கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து. (2)

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதி
ஞராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து. (3)

தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்—காணா
யவன் றுணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல். (4)

கள்ளார்கள் ளுண்ணுர் கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர். (5)

நளிகடற் றண்சேர்ப்ப நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
அல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு. (6)

—கடைச்சங்கத்தார்.

---

## VIII. சதகச் செய்யுள்

### பிறவிக் குணம்

விரும்பனத் தோடுபிடி யானைநல் நடைகற்க
மேதினியில் யார்முயன்றார்
வீறுகடல் மீனுக்கும் ஆமைக்கு நீந்தல்செய
மேனுள் பழக்கினவ ரார்

கரும்பினுக் கிரசமும் பாம்புக்கு விடமுமங்
	கார்தான் புகட்டினர்கள்
கானமல ருக்குமண மும்முள்ளின் முனையுமிக்
	காசினியி லெவராக்கினர்
பரும்புலியி னெடுபூனை பறவையா ளிகளெலாம்
	பாயப் பழக்கினவரார்
பாரவரை யுறைகமுகி னுக்கிரைக ளிங்கென்று
	பார்த்தெவர்கள் சொல்லிவைத்தார்
கரும்புலியி லிவையெலாம் பிறவிக் குணங்கள்காண்
	கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
	கயிலையங் கிரிவாசனே. (1)

## செல்வச் சிறப்பு

பொருளுள்ள பேர்களுக் கருளுண்டு புகழுண்டு
	புண்யவச மிகவுமுண்டு
பூதலத் தவரெலாம் கண்டவுட னேதொழுது
	பூபதி குபேர னென்பார்
திருகொன் றிலாதமதி யுண்டுதிற லுண்டுமெய்த்
	தேசிகர்த மருளு முண்டு
தீங்கியற் றினுநன்மை யென்பார்கள் பெருமையும்
	தீரமொடு வீரமுண்டாம்
அருளுண்டு பந்துஜன வுறவுண்டு நண்பினர்க
	ளானோர்க ளுண்டு நிதமும்
அவர்முகந் தன்னிலழ குண்டுகளை யுண்டுநல்
	லானந்த பூர்த்தி யுண்டு
கருணைசெய் தன்பர்கட் கழியாத நிதியுதவு
	கற்பக விராச மேவுங்

கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. (2)

—கயிலாசநாதர் சதகம்.

## குறைவுற்றுங் குணங் கெடாமை

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினும்
சார்மணம் பழுதாகுமோ
தக்கபால் சுவறிடக் காய்ச்சினும் மதுகொண்டு
சாரமது ரங்குறையுமோ
நிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந் தாலுமதன்
நீள்குண மழுங்கி விடுமோ
நெருப்பிடை யுருக்கினு மடிக்கினுந் தங்கத்தின்
நிறையுமாற் றுங்குறையுமோ
கறைபட்ட பைம்புயல் மறைத்தாலு மதுகொண்டு
கதிர்மதி கனம்போகுமோ
கற்றபெரி யோர்மகிமை யற்பரறி கிலரேனும்
காசினி தனிற்போகுமோ
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே
ஐயனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே. (3)

## கோபத்தின் கோடுமை

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடிகெடுக்கும்
கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர்கொடுக்கும்

கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே யுறவறுக்கும்
கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
கோபமே கருணைபோக்கும்
கோபமே யீனமாங் கோபமே யெவரையுங்
கூடாம லொருவனுக்கும்
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக்குழியி னிற்றள்ளுமால்
ஆபத்தெ லாந்தவிர்த் தென்னையாட் கொண்டருளும்
அண்ணலே அருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே. (4)

—அறப்பளீசுரர் சதகம்.

## திருவாழிடங்கள்

கடவா ரணத்திலுங் கங்கா சலத்திலுங்
கமலாச னந்தன்னிலுங்
காகுத்தன் மார்பிலுங் கொற்றவ ரிடத்திலுங்
காலியின் கூட்டத்திலும்
நடமாடு பரியிலும் பொய்வார்த்தை சொல்லாத
நல்லோ ரிடந்தன்னிலும்
நல்லசுப லட்சண மிகுந்தமனை தன்னிலும்
ரணசுத்த வீரர் பாலும்
அடர்கே தனத்திலுஞ் சுயம்வரந் தன்னிலு
மருந்துளசி வில்வத்திலு
மலர்தரு க்கடப்பமலர் தனிலுமிர தத்திலு
மதிகுண மான ரூப

மடவா ரிடத்திலுங் குடிகொண்டு திருமாது
மாறு திருப்ப என்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (5)

—குமரேச சதகம்.

### வாழி கூறியது

சந்ததமு மோதுநான் மறைவாழி யாகமந்
தளிர்க்கும் பசுக்கள் வாழி
தரணிகா வலர்வாழி மனுநீதி வாழிமுத்
தமிழ்வாழி வேள்வி தனிலே
வந்தெழுந் தெய்வீக மன்னவன் வாழியவன்
மதலைமெய்ப் பொருளுடையனர்
மைந்தர்வழி வந்தவர்கள் வாழிகுக முனிவாழி
மாதவ நிறைந்து வாழி
சுந்தர மிகுந்தவுண் ணாமுலைத் தாய்வாழி
சோதிப்ர காசமாகத்
தோன்றுமண் ணாமலைப் பரமனர் வாழிமெய்த்
துணைமனோன் மனியும்வாழி
அந்தணர்கள் வாழியெழில் சிங்கபுரி வாழிமெய்
யருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்துதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே.

—அண்ணாமலைச் சதகம்.

# செய்யுட்பாடக் குறிப்பு

## I. துதிகவிகள்

(1) வானுலகு - சுவர்க்கலோகம், மறை - வேதம், பான்மை - நன்மை, பார் - பூமி, நால்வாய் - தொங்குகின்ற வாய், அஞ்சலி - கும்பிடுதல்.

(2) கடிகமழ் - வாசனை வீசுகின்ற, அல்லும் - இரவும், அனவரதமும் - எப்போதும்.

(3) குழவி - குழந்தை, மாற்றி - துடைத்து, அமுது - பால், கெழுதகை - உரிமை, சேய்(எ) - முருகக்கடவுள் (எ - தேற்றம்)

(4) வான் - ஆகாயம், வளி-காற்று, ஒளி - அக்கினி, ஊன்-உடம்பு, கூத்தாட்டுவான் - கூத்தாடச் செய்கின்றவன்.

(5) தாரணியை - பூமியை, தாவி - தாண்டி, சீர் - சிறப்பு.

(6) ஆதி - முதல், தனி - ஒப்பற்ற, கோலமானூன் - வராக அவதார மானவன், அடியவற்கா - அடியவனுகிய பிரகலாதன் பொருட்டு, வேழம் - (கஜேந்திரன் என்னும்) யானை, முதலே - ஆதிமூலமே, இறை - நாராயணன்.

## II. நன்னெறி

(1) காதல் - அன்பு, காதலன் - கணவன், மாறு - விரோதம், கலை எண்ணிரண்டு - பதினறுகலைகள், மதி - சந்திரன்.

(2) மெலியோர் - வலிமையில்லாதவர், விரவலர் - பகைவர், பலி - பூசை, கட்செவி - பாம்பு, புள்ளரசு - கருடன்.

(3) புலன்கள் ஐந்தும் - மெய் (உடம்பு), வாய், கண், மூக்கு செவி என்னும் இந்திரியங்கள் ஐந்தும், புல்லியர் - கீழ்மக்கள், மெய்ப்புலவர் - மேன்மக்கள், விளையா - செய்யமாட்டா, துப்பின் - வலிமையினல், சூறுவளி - சுழல்காற்று.

(4) புதுமை - ஆச்சரியம், திருந்திழாய் - திருந்திய ஆபரணம் அணிந்துள்ளவளே, பொள்ளற்சிறுகுடம் - (பல) துவாரங்களையுடைய சிறிய குடம், வீதலோ - ஒழுகிப்போதலோ.

(5) பெருஞ்செல்வம் தோற்றத்தோம் - பெருஞ் செல்வமுடைய குடும்பத்திலே பிறந்திருக்கின்றோம், செருக்கு - கர்வம், இரைக்கும் - ஒலிக்கின்ற, ஈர்ங்கோதாய் - குளிர்ச்சி பொருந்திய மாலையை அணிந்தவளே, மேருவரைக்கும் - மேரு மலைக்கும், வந்தன்று - வந்தது.

(6) தம்மையும் - தமது குடிப்பிறப்பையும், தங்கள் தலைமையும் - தமது மேன்மையையும், தமை யடைந்தோர் - தம்மை (அடைக்கலமாக) அடைந்தவர், இழியினும் - தாழ்ந்தவராயிருந்தாலும், செல்வர் - போவர், இடர் - துன்பம், அல்கு கழியினும் - சுருங்கிய (உப்பங்) கழியிலும்.

(7) கயவர் - கீழ்மக்கள், நல்லார் - மேன்மக்கள், கனம் - பெருமை, வில்லார் - வில்லோடுகூடி விளங்குகிற, கணையின் - அம்புபோல, பொலியும் - (புருவத்தோடு) கூடி விளங்குகின்ற, புணை - தோணி, நொய்தாம் - கனமில்லாததாம்.

(8) இடர் - துன்பம், நெஞ்சு - மனம், ஓங்குபரத்து - உயர்வாயுள்ள கடவுளிடத்து, அடுக்கும் - அடுக்கிய, பண்ணின் - இராகம்போல, பனி - குளிர்ச்சி, மதிமான் - சந்திரனிடத்திருக்கின்ற மான்.

(9) கூற்றம் - யமன், குறுகுதன்முன் - நெருங்கி வருதற்கு முன்னே, உய்க - பிழைக்கக்கடவாய், கோலி - கட்டி, பெருகுதற்கண் - (வெள்ளம்) பெருகி வரும்போது.

(10) பன்னும் - சொல்லப்படுகின்ற, பனுவல் - சாஸ்திரம், அறங்கள் - தருமங்கள், நன்னுதால் - அழகிய நெற்றியையுடையவளே, காழ் - வயிரம், திண்கதவு - உறுதியாகிய கதவு, தாழ் - தாழக்கோல் (தாழ்ப்பாள்).

(11) எள்ளாதிருப்ப - (பிறர் தம்மை) இகழாதிருக்கும்படி, இழிஞர் - கீழ்மக்கள், போற்றற்குரியவர் - பாதுகாத்தற்குரியவ

ராயிருக்கின்றனர், விள்ளா - விலகுதலில்லா, தள்ளா-நீங்குதல் இல்லாத.

(12) அதுபெறூர் - அவ்வறிவைப் பெறுதவர், செறிபழியை - நெருங்கிவரும் பழியை, பிறைநுதால் - பிறைச்சந்திரனை ஒத்த நெற்றியை உடையவளே, வண்ணஞ்செய் - அழகினைச் செய்கின்ற, வாள் - ஒளி.

(13) காமுறுவர் - விரும்பியிருப்பவர், மற்றையர் - மேன் மக்களல்லாதவர், வேண்டும் - ஒத்துள்ள, புளிங்காடி - புளிப்பையுடைய காடி நீர்.

(14) கேண்மை - சிநேகம், நாடோறும் - தினந்தோறும், அல்லார் - நல்லவரல்லாதவர், நல்லாய் - நற்குணமுடையவளே, காய்-(வாழை, மா, பலா முதலியவற்றின்) காய்கள், தீங்கனியாம் - மதுரம் பொருந்திய பழங்களாம், நாள்போய் - காலங்கடந்து.

## III. இன்னு நாற்பது

(1) ஆங்கு - அப்படியே, முக்கட்பகவன் - மூன்று கண்களையுடைய சிவன், இன்னு - துன்பமுண்டாகும், பொற்பு - அழகு, அன்னவூர்தியை - அன்ன வாகனமுடைய பிரமனை, உள்ளாது - நினையாது, ஒழுகு - நடத்தல், சக்கரத்தானை - சக்கராயுதத்தையுடைய விஷ்ணுவை, இன்னுது - துன்பம் தருவதாம், சத்தியான் - வேலாயுதத்தையுடைய முருகக்கடவுள்.

(2) பந்தம் - உறவினர், மனை - மனைவி, வனப்பு - அழகு, புதல்வன் - புத்திரன், இல்லிலிருந்து - வீட்டிலிருந்து, ஊண் - (உணவு) உண்ணுதல், மந்திரம் - (மக்களுக்கு) ஆலோசனை, வாயாவிடின் - பொருந்தா தொழிந்தால்.

(3) சிறை - வேலி, கரும்பினை - கரும்புப்பயிரை, ஓம்பல் - காப்பாற்றுதல், புரை - துவாரங்கள், கூரை - கூரைவீடு, முறை - நீதி, அரசு - அரசாட்சி, மறை - இரகசியம்.

(4) அறமனத்தார் - தர்மசிந்தையுடையவர், கடுமொழி - கொடுஞ்சொல், மறமனத்தார் - வீரத்தன்மை அமைந்த மன

முள்ளவர், ஞாட்பின் - போர்க்களத்தில், மடிந்தொழுகல் - சோம்பியிருத்தல், இடும்பை - (வறுமையால் உண்டாய) துன்பம், கொடை - (பிறர்க்கு ஒன்றைக்) கொடுத்தல், கொடும்பாடு- (நடுவுநிலைமை இன்மையாகிய) கொடுமை.

(5) பகல் - சூரியன், பண்பு - நற்குணம், நகையாய-சிரித்துப் பேசுதற்குரியவராகிய, நார் - அன்பு, இகலின் - (தமது) வலிமையாலே, எழுந்தவர் - (போர்செய்ய) எழுந்தவர், ஓட்டு - முதுகுகாட்டி ஓடுதல், நயம் - நீதி, நட்பு - சிநேகம்.

(6) புல்லார் - புல்லை உண்ணுகின்ற, மணி - (கழுத்திற் கட்டி அசைந்தாடும்) மணி, ஊர்வு - ஏறி நடத்துதல், கருமப்பொருள் - காரியத்தின் பயன், இல்லாதார் - பொருள் இல்லாதவர், நல்ல - சிறந்த தர்மங்களை, பல்லாருள் - பலர்நடுவிலே, நாணப்படல் - (அவமானமடைந்து) நாணுதல்.

(7) ஆன்று - (ஒழுக்கத்தால்) நிறைந்து, அவிந்த - (மனம்) அடங்கப்பெற்ற, பேதை - மூடன், மான்று - மயங்கி (நிற்க), வழங்கல் - சஞ்சரித்தல், நோன்று - பொறுத்து, அவிந்து - அடங்கி, ஓம்பாவிடல் - காப்பாற்றுமல் விடுதல்.

(8) உரன் - அறிவு, உள்ளம் - மனம், மடிந்திருத்தல் - சோம்பியிருத்தல், மறனுடை - வீரத்தன்மையுடைய, ஆள் - ஆட்களை, மார்பு ஆர்த்தல் - (தன்) மார்பைத்தட்டிப்பேசுதல், சுரம் - பாலைவனம், கானம் - காடு, மனவறியாளர் - (மனத்திருப்தி யில்லாதவர் அல்லது) மனத்தின்கண் வறுமையுடையவர், தொடர்பு - சிநேகம்.

(9) ஈத்தவகையால் - கொடுத்த பொருள் அளவைக் கொண்டு, ஈப்பு - கொடுத்தல், பாத்து - பகுத்து, உணவு - உண்ணுதல், பிணி-நோய், ஓத்து - (வேதம்) ஓதுதல்.

(10) யானை - யானைப்படை, நனி - மிகவும், ஊனை - மாமிசத்தை, ஊனை - உடம்பை, முன் - மிகவும், தேனெய் - தேனும் நெய்யும், புளிப்பின் - புளித்துவிடுமாயின், சுவை - உருசி, கான்யாறு - காட்டாறு, இடையிட்ட - நடுவேயிருக்கின்ற.

(11) சிறை - மதில், காப்பு - காவல்செய்தல், துறை - தண்ணீர்த்துறையில், கழுவுதல் - தோய்த்தல், அறை - ஒலிக்கின்ற, பறையாயவர் - பறை வாத்தியம் போன்றவர், நிறை - (இந்திரியங்களை அடக்கி) நிறுத்துதல்.

(12) யாத்த - கொண்ட, தொடர் - சிநேகம், அரியவை - (பிறர்) செய்தற்கரிய காரியங்கள், செய்தும் - செய்வோம், பரியார்க்கு - (தம்மிடத்து) இரக்கம் செய்யாதவர்க்கு, உற்ற - அடைந்த துன்பங்களை, கூற்று - சொல்லுதல்.

(13) கல்லாதான் - (குதிரைமீது ஏறும் வகை) அறியாதவன், ஊரும் - ஏறி நடத்துகின்ற, கலிமா - வலிமிக்க குதிரை, பரிப்பு - சுமந்து செல்லுதல், வல்லாதான் - (ஒரு காரியத்தையும் செய்ய) வல்லமை யில்லாதவன், உரையின் பயன் - சொல்லின் பொருள், இல்லார் - (பொருள்) இல்லாதவர், நயம் - நீதி, கல்லாதான் - கல்வியறிவு இல்லாதவன், கோட்டி - (கற்றோர்) சபை, கொளல் - பேசத் தொடங்குதல்.

(14) குறி - அடக்கும் முறை, மாநாகம் - பெரும் சர்ப்பம், அறிவு - அறியவேண்டுவதலாகிய நீந்துதலை, பாய்ந்தாடல் - துள்ளிவிழுந்து விளையாடுதல், அறிவு-அறிய வேண்டியவற்றை, செறிவு - அடக்கம், மறை - இரகசியம்

(15) நீள்கோடு - நீண்ட கிளை, பாய்தல் - கீழே குதித்தல், சேறல் - செல்லுதல், அரவு - பாம்பு, இல் - வீடு, அதர் - வழி.

(16) பண் - (பாடலின்) இசை, யாழ் - வீணை, எண் - சோதிட நூல், ஒழுக்கு - நடத்துகின்ற, நாட்கூற்று - நாளின் கழிவு, மண்(மார்ஜனை) - மண்பூசுதல், முழவு - மத்தளம், தண்மை - நற்குணம்.

(17) வேளாண்மை - உபகாரம், நீணகர் - பெரிய நகரம், கைத்து - பொருள், ஊண் - உண்ணும் உணவு.

(18) நறியமலர் - சிறந்த மலரானது, நாறுமை - வாசனை வீசாமை, துறை - இறங்கி ஏறும் நீர்த்துறை (வழி), அறியான் - கல்வி அறிவில்லாதவன், செற்றம் - கோபம்.

(19) வள்ளன்மை - ஈதல், கடித்து - (பாக்கு வெட்டியால்) வெட்டி (அல்லது பற்களால்) கடித்து, கற்படுதல் - கல் இருத்தல், கொடுத்து - பொருள் கொடுத்து, விடாமை - அனுப்பாமை, கவிக்கு - கவிகளுக்கு, மடுத்துழி - (தான்) சேர்ந்த இடத்திற்கு (ஏற்ப), படாவிடல் - அகப்படா தொழிதல்.

(20) மீளிமை - வீரத்தன்மை (பேசுதல்), துடக்கமிலாதவன் - தொடங்கிய காரியத்தைச் செய்ய மாட்டாதவன், தற்செருக்கு - தன்னைத்தானே மதித்துப் பேசுதல், அடைக்கலம் - அடைக்கலமாக வைத்தபொருள், அடக்க - அடக்கவும்.

## IV. இனிது நாற்பது

(1) கண்மூன்றுடையான் - மூன்றுகண்களையுடைய சிவன், கடிது - மிகவும், தாள் - பாதம், துழாய் மாலையான் - துளசி மாலையை அணிந்த விஷ்ணு, பேணி - விரும்பி, முகநான்குடையான் - நான்கு முகமுடைய பிரமன், ஏத்தல் - துதித்தல்.

(2) உடையான் - செல்வமுடையவன், வழங்கு - ஈதல், மாணுதாமாயின் - மாட்சிமைப்படாதாயின், நெடியார் - பெரியவர், தலையாக - முதன்மையாக.

(3) ஏவது - ஏவியவேலை, கிளை - உறவினர், நவை - தீய வழி, வேளாண்மை - பயிரிடுந் தொழில், நட்புக்கோள்-(கோள் நட்பு) நட்புக்கொள்ளுதல்.

(4) கோல்கோடி - நீதிதவறி, மாராயன் - பெருமையுடைய அரசன், எய்தும் திறத்தால் - பொருந்தும் வகையால்.

(5) கடமுண்டு - கடன்வாங்கி, மாண்பு - நற்குணங்கள், அகறல் - (அகல்தல்) நீங்குதல், எனைமாண்பு - எவ்வகையாகிய மாட்சிமையிலும்.

(6) அதர்சென்று - வழிகட்டிப் பறித்து (அதர் - வழி, சென்று - போய்), குதர்சென்று - வழிதப்பிச் சென்று, கொள்ளாத - நூற்பொருளை கொள்ளாத, கூர்மை - நுண்ணறிவு, சென்றுபடினும் - பசியால் நீங்கிவிடுவதாய் இருப்பினும், கைத்து - கைப்பொருளை (உண்வை), பீடு - பெருமை.

(7) மன்றின் - சபையில், முதுமக்கள் - பெரியோர், பதி - ஊர், தந்திரத்தின் - சாஸ்திர வழியாலே, மாண்பு - பெருமை, எஞ்சா - குறையாத, விழுச்சீர் - பெருஞ்சிறப்பு, இருமுதுமக்கள் - தாய்தந்தையர், கண் - கண்களால் (தரிசித்து).

(8) நட்டார் - சிநேகிதர், புறங்கூறுன் - வெளியே பழித்துக்கூறுதவனுய், பட்டாங்கு - உண்மை நூற்பொருளை, பேணி - விரும்பி, முட்டில் - (முட்டு + இல்) குறைவில்லாமல், அது - அப்பொருள், தக்குழி - (தக்க + உழி) தகுந்த இடத்தில்.

(9) சலவரை - வஞ்சகரை, போற்றல் - ஏற்றுக்கொண்டொழுகுதல், மலர்தலை - பரந்த இடத்தையுடைய, தகுதியால் - நீதியாக (தகுதி - நீதி).

(10) நோன்பு - விரதம், ஒல்லுந்துணையும் - (தனக்கு) இயன்ற அளவும், ஒன்று - ஒருகாரியத்தை, உய்ப்பான் - செய்து முடிப்பவன், பொறை - பொறுமை, காமுற்று - விரும்பி.

(11) ஆற்றுனை - (ஒரு காரியத்தையும்) செய்யமாட்டாதவனை, அலையாமை - வருத்தாமை, ஆக்கம் - செல்வம், அல்லவை - தீயசொற்களை, தேர்ச்சியில் - தெளிந்த அறிவைப் பார்க்கிலும், தேர்வு - தெளிந்து அறிதற்குரியது.

(12) நன்றி - உதவியின், தூக்கி - ஆராய்ந்து, மன்றம் - நியாய சபை, கொடும்பாடு - ஒருதலை வழக்கு, அன்று - அப்பொழுது, அடைக்கலம் - அடைக்கலமாக வைத்த பொருள், நன்றியின் - நன்மையைப் பார்க்கிலும்.

(13) அடைந்தார் - (அடைக்கலமாக) அடைந்தவர், துயர்கூரா - துன்பம் மிகாதவாறு, ஆற்றல் - (நன்மைகளைச்) செய்தல், கடன்கொண்டும் - கடன் வாங்கியாயினும், கேள்வியாராயினும் - நூற்கேள்வியுடையவராயிருப்பினும், ஆற்ற - மிக.

(14) ஒற்றினல் - ஒற்றர்களைக்கொண்டு, ஒற்றி - வெளியே நடக்கும் செயல்களை அறிந்து, பொருள் - உண்மைப் பொருள், தான் தெரிந்து - தானே ஆராய்ச்சி செய்து, பற்றிலனுய் - அபிமானம் இல்லாதவனுய், பாத்துற்று - இரக்கங்கொண்டு (அல்லது பொருள்களைப் பங்கிட்டுக் கொடுத்து), பாங்கு - நன்மை.

(15) படைக்கலம் - ஆயுதம், பகையாண்மை - பகைவரை ஆளுந்தன்மை, எத்துணையும் - எந்தவகையாலும், பால்படும் - பால் சுரக்கும், கற்ரு - (கன்று+ஆ) கன்றையுடைய பசு.

(16) பத்துக்கொடுத்தும் - பணம் பத்துக்கொடுத்தாலும், பதி - (தன்) ஊர், வித்து - விதையை, குற்றுண்ண - குற்றி உண்ணத, விழுப்பம் - மேன்மை, பாங்குடைய - தகுதியுடைய நூல்களை, காழ் இனியது - உறுதியாகிய இனியது.

## V. தனிப்பாடல்

(1) மலை நாடு - சேரநாடு, மேதக்க - மேன்மை பொருந்திய, பூழியர்கோன் - பாண்டியன், தென்னாடு - பாண்டிநாடு.

(2) போற்றினும் - புகழ்ந்தாலும், தூற்றினும் - இகழ்ந்தாலும், வன்கணாளர்கள் - கொடுமைக் குணமுடையவர்கள், கூற்றினும் - எமனைப் பார்க்கிலும், பாவலர் - வித்வான்கள்.

(3) அதட்டும் - துரத்தி ஓட்டும், பத்திரம தாக்கும் - நன்மையை உண்டாக்கும், கைத்தலத்தில் - கையில், தண்டு - தடி.

(5) சீர் தூக்கிப் பார்க்குங்கால்-ஆராய்ந்து பார்க்குமிடத்து, வையகத்தில் - பூமியில், தெள்ளு - தெளிவாகிய, தமிழ்வேதம் - திருக்குறள், வள்ளுவனார் - திருவள்ளுவ நாயனார்.

(6) சிற்றம்பலவன் - நடராஜப் பெருமான், கொற்றங்குடியார்க்கு - கொற்றங்குடியில் வாழும் உமாபதி சிவாசாரியருக்கு, படி - பூமி, பேதம் - வேற்றுமை, தீக்கை - தீட்சை.

## VI. திருக்குறள்

(1) தெய்வத்தான் - விதியின் வகையால், முயற்சி - பிரயத்தனம், மெய் - உடம்பு, வருத்தக்கூலி - (வருந்திய) வருத்தத்தின் கூலி அளவு.

(2) நன்றிக்கு - அறத்திற்கு, வித்தாகும் - காரணமாகும், இடும்பைதரும் - துன்பத்தைக் கொடுக்கும்.

(3) உழுது - உழுதலைச்செய்து, மற்றெல்லாம் - மற்றையார் எல்லாம், தொழுது - (பிறரை) வணங்கி.

(4) செய்யாமல் - (தனக்குமுன் ஓர் உதவியும்) செய்யாதிருக்க, உதவிக்கு - உபகாரத்திற்கு, வானுலகமும்-விண்ணுலகமும், ஆற்றல் - ஈடாகுதல்.

(5) அவ்வுலகம் - அந்த முக்தியுலகத்தின் இன்பம், இல்லாகியாங்கு - இல்லையாயினாற்போல.

(6) இன்னா - துன்பம் தருவனவற்றை, இன்னா - துன்பம் தருபவைகள்.

(7) வசையொழிய-வசை உண்டாகாமல், இசையொழிய - புகழ் உண்டாகாமல், (வசை - இகழ்ச்சி).

(8) எண் - தர்க்கநூல் அல்லது கணிதநூல், என்ப - என்று சொல்வன, ஏனை - மற்ற, எழுத்து - இலக்கணநூல்.

(9) தீயினால் - நெருப்பினால், ஆறாது - தணியாது.

(10) வியனுலகம் - பெருமையுள்ள உலகத்தில், வானம் - மழை, வழங்காதெனின் - பெய்யாதாயின்.

(11) அடுத்தது - அடுத்தபொருளினது நிறம், பளிங்குபோல்- பளிங்குக் கண்ணாடிபோல், கடுத்தது - மிகுந்துள்ள குணத்தை.

(12) எந்நன்றி - எவ்வளவு பெரிய தருமங்கள், உய்வு - பிராயச்சித்தம், செய்நன்றி - (ஒருவன்) செய்த உபகாரம்.

(13) பயன் தூக்கார் - பயனை ஆராய்தல் இல்லாதவராய், உதவிநயன் - உதவியாகிய அன்புடைமை.

## VII. நாலடியார்

(1) குஞ்சி - மயிர்முடி, கொடுந்தானை -மடிப்புள்ள ஆடை, கோட்டழகு - கரையின் அழகு, மஞ்சள் - கலவைப் பூச்சு, நெஞ்சத்து - மனத்தில், நடுவுநிலைமை - கோணுதல் இல்லாமை.

(2) இம்மை - இப்பிறப்பின் பயன், பயக்கும் - தரும், ஈய- கொடுக்க, உளரா(க) - உயிருள்ளவராக, எம்மை வுலகத்தின் - எவ்வுலகத்திலும், மம்மர் - மயக்கம்.

(3) கரை - அளவு, நாள் - வாழ்நாள், பிணி - நோய், தெள்ளிதின் - தெளிவாக, அமைவுடைய - தகுதியுடைய நூல்களை, குருகின் - அன்னப்பறவைப்போல.

(4) தோணி - மரக்கலம், இயக்குவான் - செலுத்துகின்றவன், தொல்லை வருணத்து - பழமையான சாதியில், கடைப்பட்டான் - இழிவானவன், ஆறுபோயற்றே - ஆற்று வெள்ளத்தைக் கடந்தாற்போல, அவன் துணையா(க) - அவனைத் துணையாகக்கொண்டு, ஆறு - ஆற்றுவெள்ளம், போயற்று - கடந்துபோனாற்போல் போவதாம், நல்ல - சிறந்த நூற்பொருள்களை.

(5) கள்ளார் - களவு செய்யார், கடிவ - (நூல்கள்) விலக்கியவற்றை, கடிந்தொரீஇ - வெறுத்து ஒதுக்கி, எள்ளி - அவமதித்து, தள்ளியும் - தவறியும், வடுவறு காட்சியார் - குற்றமற்ற அறிவினையுடையவர், சாயின் - தளர்ச்சி உண்டாயின், பரிவது - வருந்துவது.

(6) நளி - குளிர்ச்சி, சேர்ப்ப - துறையையுடையவனே, நாணிழற் - முற்பகலின் நிழல், விளியும் - கெடும், கேண்மை - சிநேகம், விளிவின்றி - கெடுதலில்லாமல், அல்குநிழல் - மாலைப் பொழுதின் நிழல், தொடர்பு - சிநேகம்.

## VIII. சதகச் செய்யுள்

(1) விரும்பனத் தோடு - (விரும்பு + அன்னம் + அத்து + ஒடு) விரும்பத்தக்க அன்னத்துடனே, பிடியானை - பெண்யானை, மேதினியில் - பூமியில், வீறு - பெருமை, மேனாள் - (மேல் + நாள்) முற்காலத்தில், புகட்டினார்கள் - சேர்த்தார்கள், கானம் - காடு, மணமும் - வாசனையும், காசினியில் - உலகத்தில், பாய - பாய்ந்து செல்ல, பாரவரை - பெரிதாகிய மலை, உறை - வசிக்கும், இரைகள் - உண்வுப்பொருள்கள், கரும்புவியில் - பெரிய பூமியில், கற்பக விராசம் - ஒரு சிவதலம், மங்கை - பார்வதி, கிரி - மலை.

(2) பூதலத்தவர் - பூமியில் உள்ளார் யாவரும், பூபதி - அரசன், திருகு - மாறுபாடு, மதி - அறிவு, திறன் - வலிமை, தேசிகர் - குருமூர்த்தி, தீரம் - மனவுறுதி, வீரம் - ஆண்மை, நிதமும் - ஒவ்வொரு நாளும், களை - மலர்ச்சி, பூர்த்தி - நிறைவு, நிதி - செல்வம்.

(3) தறிபட்ட - கத்தியால் தறிக்கப்பட்ட, பழுதாயினும் - குற்றமுடையதாயினும் சுவறிட - சுண்டும்படி, சாரமதுரம் - (பாலின்) சாரமான மதுரச்சுவை, நிறைபட்ட - ஒழுங்கமைந்த, கதிர்மணி - பிரகாசமுடைய இரத்தினம், தங்கத்தின் - பொன்னின், கறைபட்ட - களங்கம் பொருந்திய, பைம்புயல் - கருமேகம், கதிர் - சூரியன், மதி - சந்திரன், கனம் - பெருமை, மதவேள் - மன்மதன், அனுதினமும் - தினந்தோறும்.

(4) சீர் - சிறப்பு, கருணை - கிருபை, ஈனம் - இழிவு, மறலி - எமன், அண்ணலே - தலைவனே.

(5) கடவாரணத்திலும் - மதங்கொண்ட யானையினிடத்திலும், கமலாசனந்தன்னிலும் - செந்தாமரைப் பூவாகிய ஆசனத்திலும், காகுத்தன் - நாராயணன், கொற்றவர் - அரசர், காலியின் கூட்டத்திலும் - பசுமந்தையிலும், பரியிலும் - குதிரையிலும், மனை - வீடு, ரணம் - போர்க்களம்; அடர் - நெருங்கிய, கேதனத்திலும் - கொடியிலும், சுயம்வரந்தன்னிலும் - சுயம்வர விவாகத்திலும், இரதத்திலும் - தேரிலும், மடவாரிடத்திலும் - பெண்களிடத்திலும், திருமாது - இலக்குமி, குகனே - சுப்ரமணியக் கடவுளே.

TB 031(7) N34
60087

RGR/698